REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 மார்ச் 5 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

உங்கள் அபிமான மாத இதழ்
வண்ண வானவில் Vanna Vaanavil
கேட்டு வாங்குங்கள்...
மார்ச் மாத இதழ்!
வாசிக்க எக்கச்சக்கமான விடயங்கள் கொட்டிக் கிடப்பது வானவில்லில் மட்டுமே!


வரு. 89 இல. 55 | March 05, Friday, 2021 | 28 பக்கங்கள் | 30/-

உயிர்த்த ஞாயிறு அறிக்கையின் பரிந்துரை ஆய்வு;

## அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம்

**மார்ச் 15 இல் கையளிக்க ஏற்பாடு**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி இந்த அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் பரிந்துரைகளை எவ்வாறு செயல்படுத்துவது என்பது குறித்து அமைச்சரவை உபகுழு தொடர்ந்தும் ஆராய்ந்து வருகின்றது.

06

## மஹா சிவராத்திரி விரதத்தை சிறப்பாக அனுஷ்டிக்க ஏற்பாடு

**இந்துசமய திணைக்களத்துக்கு பிரதமர் ஆலோசனை**



மஹா சிவராத்திரி விரதத்தை சிறப்பாக அனுஷ்டிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கினார்.

இந்து மக்களின் சிறப்பு விரதங்களில் ஒன்றான மஹா சிவராத்திரி விரதம் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமையன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது. சிவராத்திரி விரதத்தை இந்து

06

ஆயிரம் ரூபா சம்பள விவகாரம்;

## வர்த்தமானி அறிவிப்பு இன்று வெளிவரவுள்ளது



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பள அதிகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன்று வெள்ளிக்கிழமை வெளியிடப்படும்.

இதற்கான அனுமதியை தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாள் சம்பளம் தொடர்பான அறிவிப்பு விடுக்கப்பட்டாலும், வேலை நாட்கள் தொடர்பில் தமக்கு உத்தரவாதமளிக்க முடியாதென தொழில் அமைச்சு தரப்பு அறிவித்துள்ளது.

அதேவேளை, சம்பள நிர்ணய சபையில் சம்பளம் தீர்மானிக்கப்பட்டுள்ளதால்,

06

# இரணைதீவில் சடலங்களை அடக்கம் செய்வதற்கான திட்டங்கள்

**தினமும் காலை 05.30 மணிக்கு சடலங்களை எடுத்துச் செல்ல ஏற்பாடு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணிக்கும் நபர்களின் சடலங்களை இரணைதீவில் அடக்கம் செய்வதற்கு கொண்டு செல்லும் போது கடைப்பிடிக்க வேண்டிய விசேட வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கைச்சாத்துடன் வெளியிடப்பட்டுள்ள இந்த வழிக்காட்டல்களின் பிரதிகள் 16 தரப்பினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணிக்கும் நபரொருவரின் சடலத்தை அடக்கம் செய்ய வேண்டுமானால் அவரின் உறவினர்கள் தவறாது சுகாதார பிரிவினருக்கு அறிவிக்க வேண்டும். மரணித்த நபரின் சடலத்தை அடையாளம் காண்பதற்காக இருவர் மாத்திரம் இரணை தீவுக்கு செல்ல

06

**சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள விசேட வழிகாட்டல்**



- அடக்கம் செய்ய உறவினரது எழுத்து–மூல அனுமதி அவசியம்
- சடலத்தை அடையாளம் காண இர–ணைதீவு செல்ல 02 பேருக்கு அனுமதி
- அடக்கம் செய்யும்போது படம், வீடியோ எடுப்பதற்குத் தடை
- சடலத்தை வைத்த பின்னர் சவப் பெட்டியை திறக்க அனுமதியில்லை



கொழும்பு மிஹிந்து மாவத்தையில் நேற்று பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டது. இதன்போது பெண்ணொருவருக்கு தடுப்பூசி ஏற்றும்போது பிடிக்கப்பட்ட படம்.

## மக்கள் வசிக்காத பகுதிகளில் மட்டுமே சடலங்கள் அடக்கம்


**இரணைதீவு குறித்து Dr.அசேல குணவர்த்தன**

03



## ரஷ்ய தடுப்பூசிக்கு இலங்கை அனுமதி

**இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவிப்பு**



ரஷ்யாவில் உற்பத்தி செய்யப்படும் ஸ்புட்னிக் வீ என்னும் கொவிட்19 தடுப்பூசிக்கு இலங்கையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அவசர தேவைகளுக்கு இந்த தடுப்பூசியைப்

06

இறக்காமம், சம்மாந்துறை, ஓட்டமாவடி பகுதிகளை நாம் அடையாளப்படுத்திய போதும்

## இரணைதீவை தெரிவு செய்தது ஏன்?

**சந்தேகத்துடன் கேள்வி எழுப்புகிறார் எம். ரி. ஹசன் அலி**



**காரைதீவு குறூப் நிருபர்**

கொரோனா வைரஸ் தண்ணீரில் பரவாதென்றால் தீவுகளை தேடிப் போவது ஏன்? அதுவும் சகோதர தமிழ்மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் இரணைதீவுக்கு போவது ஏன்? வேண்டுமென்றே கொரோனாவை

06

கொரோனா சடலங்கள் அடக்கும் தீர்மானம்

## இரணைதீவு பொருத்தமான இடமில்லை என்கிறார் அங்கஜன்

**மீள் பரிசீலனை செய்யுமாறு கோரிக்கை**



**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொரோனா தொற்று சடலங்களை அடக்கம் செய்வதற்கு இரணைதீவு பொருத்தமான இடமல்ல என யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு

06

ராஜகிரிய வாகன விபத்து சம்பவம்;


## சம்பிக்கவுக்கு எதிரான குற்றப்பத்திரம் வாசிப்பு



2016 ஆம் ஆண்டில் இராஜகிரிய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் வாசிக்கப்பட்டுள்ளது.

06

## சாணக்கியன் M.P யின் முதலமைச்சர் கனவு ஒருபோதும் பலிக்காது



**வெல்லாவெளி தினகரன் நிருபர்**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சிறுபான்மையின மக்களின் ஏகோபித்த வாக்குகளால் கிழக்கு மாகாண சபையை கைப்பற்றி இழந்த

06

**உரிமைகள் பறிபோவதை இ.தொ.கா. பார்த்துக் கொண்டிருக்காது**

## தொழிலாளர்களுக்கு 300 நாட்கள் வேலை வழங்கியே ஆக வேண்டும்

**மிரட்டல்களுக்கு அஞ்சப் போவதில்லை என்கிறார் செந்தில் தொண்டமான்**



தொழிலாளர்களுக்கு வேலை நாட்கள் குறைப்பதை வேடிக்கை பார்க்க முடியாது. வருடத்தில் 300 நாட்கள் வேலை வழங்க முடியாதென்றால், தோட்டக் கம்பனிகளிடமிருந்து 300 நாட்கள் எவ்வாறு வேலையை பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு தெரியும் என்று பிரதமரின் பெருந்தோட்ட இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அத்தோடு தொழிலாளர் உரிமைகள் பறிபோவதை இ.தொ.கா வேடிக்கை

06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை

## பாராளுமன்றில் எதிர்வரும் 10 ஆம் திகதி விவாதம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை பற்றிய விவாதத்தை எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பிப்பதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (04) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, எதிர்வரும் 10 ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை சபை ஒத்திவைப்பு பிரேரணையாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

மார்ச் 09 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு பாராளுமன்றம் ஆரம்பமாகும் அதேவேளை, முற்பகல் 10.00 மணிமுதல் முற்பகல் 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்படும்.

அதனையடுத்து, கடந்த அமர்வில் ஒத்திவைக்கட்ட இரத்தினக்கல் மற்றும் ஆபரண சட்டம் தொடர்பான ஒழுங்கு

06

**விக்கல் வீராச்சாமி**



இரணைதீவு விவகாரம் இரண்டு சமூகத்துக்குள்ளும் பிளவை ஏற்படுத்தும் போல தெரியுது....

ஆனால் ஒண்டு, இந்த விஷயம் வெளிவந்ததால இரண்டு சமூகத்திலும் இருக்கிற நல்ல குணம் கொண்டவையல சனத்துக்கு அறிய கிடைச்சிருக்கு...!

Fun BLASTER இப்போது புதுப்பொழிவுடன்
மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்
Facebook WhatsApp மற்றும் YouTube
உடன் மேலதிக டேட்டா*

ரூ.347/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை
செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்
*1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது.
• நிபந்தனைகளுக்கு உட்பட்டது SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது 4G SIM அட்டை மற்றும் 4G தொலைபேசி அவசியமாகும்.
Dialog
எதிர்காலம் இன்றே.



கொழும்பு மிஹிந்து மாவத்தையில் நேற்று கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டது. இதன்போது பொது மக்கள் இத் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதையும், பெருமளவிலானோர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள வரிசையில் காத்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதல்

# விசாரணை அறிக்கை பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுகொள்ளும் வகையில் அமைய வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பிலான அறிக்கை அனைத்து மக்களும் குறிப்பாக குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைய வேண்டும். அறிக்கையை கொண்டு அரசாங்கத்தை விமர்சிக்க முடியாது. அரசியல் தலையீடுகள் இல்லாமல் விசாரணை அறிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.



இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முழுமையற்ற அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. அறிக்கை குறித்து பல விமர்சனங்கள், குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. ஆளும் தரப்பு உறுப்பினர்களும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

அறிக்கை குறித்து எழுந்துள்ள விமர்சனங்களுக்கு தீர்வை முன்வைப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரியை கண்டுப்பிடிக்காமல் தீர்வு காண முடியாது. ஆகவே இவ்விடயம் குறித்து கடந்த அமைச்சரவை கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

குறைபாடுகள் குறித்து ஆராய விசேட பொறிமுறை வகுக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே மாற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கிறோம்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் அறிக்கை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மையப்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளதாக சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் குறிப்பிடுவதும் அதற்கு ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் மாற்று கருத்தை தெரிவிப்பதும் காணக் கூடியதாக உள்ளது.

வாதப்பிரதிவாதங்கள் கூட்டணிக்குள் தேவையற்ற பிரச்சினையை ஏற்படுத்தும். இவ்விடயம் குறித்தும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசப்பட்டுள்ளது. ஏப்ரல் 21குண்டுத் தாக்குதல் தொடர்பிலான அறிக்கை அனைத்து மக்களும் குறிப்பாக குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைய வேண்டும்.

அறிக்கையை கொண்டு அரசாங்கத்தை விமர்சிக்க முடியாது. அரசியல் தலையீடுகள் இல்லாமல் விசாரணை அறிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என்றார்.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 3,200 பேருக்கு எதிராக நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்பட்டதாக கைது செய்யப்பட்ட 3,286 சந்தேக நபர்களில், 3,200 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்பட்டதாக நேற்று காலை ஆறுமணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்திற்குள் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில், கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் 3,286 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் 3200 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது சாதாரண தர பரீட்சை இடம்பெற்று வருகின்றது. இதன்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக சிலர் செயற்பட்டு வருவதாக தெரிய வந்துள்ளது.

அதற்கமைய, தனியார் வகுப்பு நிலையங்களிலிருந்து பரீட்சையில் தோற்றிவரும் மாணவர்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்போது பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் அது முடிவுற்றதன் பின்னர் வெளியில் வரும்போது, இந்த தனியார் வகுப்புகளினால் அனுப்பட்டுள்ள ஊழியர்களினால் துண்டுபிரசுரங்கள் வழங்கி வைக்கப்படுகின்றன.

இதன்காரணமாக வைரஸ் பரவல் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாக காணப்படுவதுடன், மாணவர்களின் பாதுகாப்பிற்கும் பாதிப்பு ஏற்படும். அதனால் இத்தகைய செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

## முதலாவது கொரோனா தொற்றாளரிடம் மீள குருதி மாதிரி சேகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனாவின் பிடியில் சிக்கிய முதலாவது இலங்கையரிடம் இருந்து ஒரு வருடத்திற்கு பின்னர் மீண்டும் நேற்று குருதி மாதிரி பெறப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மார்ச் 11ஆம் திகதி மத்தேகொடயை சேர்ந்த சுற்றுலா வழிகாட்டி ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளான முதல் இலங்கையராக அடையாளம் காணப்பட்டார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளின் போது அவர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டார்.

தொற்றுக்குள்ளான நபர் தற்போது குணமடைந்துள்ள போதிலும் அவரது உடலில் காணப்படும் நோய் எதிர்பு சக்தியை பரிசோதனை செய்வதற்காக மீண்டும் அவரிடம் இருந்து மீண்டும் குருதி மாதிரி பெறப்பட்டது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வு பிரிவு ஒன்றினால் இந்த மாதிரி பெறப்பட்டுள்ளது.

## பேருந்தில் தவறவிட்ட இரண்டு இலட்சம் ரூபா பணத்தை உரியவரிடம் கொடுத்த நடத்துனர்

### பருத்தித்துறை கொழும்பு சாலையில் சம்பவம்

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

பஸ்ஸில் தவறவிடப்பட்ட இரண்டரை லட்சம் ரூபா ரொக்கப் பணம் மற்றும் பெறுமதி வாய்ந்த கைத்தொலைபேசி ஆகியவற்றை பாதுகாப்பாக எடுத்த பஸ் நடத்துனர் அதனை உரியவரிடம் ஒப்படைத்து முன்மாதிரியாக செயற்பட்ட சம்பவம் இ.போ.ச. சாலையில் நடைபெற்றுள்ளது.

பருத்தித்துறை சாலைக்கு சொந்தமான பருத்தித்துறை கொழும்பு சேவையில் ஈடுபடும் இ.போ.ச பஸ் வண்டி கடந்த 2ஆம் திகதி கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது வவுனியாவிலிருந்து சாலியபுரம் பகுதிக்கு சென்று கொண்டிருந்த பயணி ஒருவர் இரண்டு இலட்சத்து 51 ஆயிரம் ரூபா ரொக்க பணமும் பெறுமதிவாய்ந்த கைத்தொலைபேசி உட்பட வேறு சில பொருட்களும் கைப் பையை தவறவிட்டுள்ளார்.

இந்நிலையில் அன்று நடத்துனராக கடமையாற்றிய புலோலி, குரும்பைகட்டி பகுதியைச் சேர்ந்த



பா.பாலமயூரன் என்பவர் அதனை எடுத்து பருத்தித்துறை இ.போ. ச முகாமையாளரிடம் ஒப்படைத்திருந்தார்.

இந் நிலையில் கைப்பை அனுராதபுரம் சாலியபுரம் பகுதியைச் சேர்ந்த ஹேமந்தகுமார என்பவருடையது என அடையாளப்படுத்தப்பட்டதையடுத்து நேற்று பருத்தித்துறை சாலையின் உதவி முகாமையாளர் சிதம்பரப்பிள்ளை சிவசெல்வநாதன் முன்னிலையில் அவரின் கைப்பை ஒப்படைக்கப்பட்டது. கைப்பையை தவறவிட்டவர் நடத்துனருக்கு அன்பளிப்பை கொடுக்க முற்பட்ட போதும் அவர் அதனை ஏற்கவில்லை.

# புதன்கிழமை மேற்கொண்ட சுற்றிவளைப்பில் ஹெரோயினுடன் எழு சந்தேகநபர்கள் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் பொலிசாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண்ணொருவர் உட்பட ஏழு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முகத்துவாரம் பகுதியில் பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். தெமட்டகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேதவத்த பகுதியில் பொலிசாரினால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது இரண்டு கிராம் 130 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுற்றிவளைப்பின்போது ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கங்கொடவில பகுதியில் கல்கிஸ்ஸ ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 10 கிராம் ஹெரோயினுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானை பகுதியில் பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொளப்பட்ட சுற்றிவளைப்பின்போது ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மாளிகாவத்தை மல்வத்த பகுதியில் பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொளப்பட்ட சுற்றிவளைப்பின்போது ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## துப்பாக்கி உரிமங்களை புதுப்பிக்க அறிவிக்கப்பட்ட காலம் நீடிப்பு

துப்பாக்கி உரிமங்களை புதுப்பிக்க அறிவிக்கப்பட்ட சலுகை காலம் 2021 மே 31 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

தாமதமாக புதுப்பிக்க விதிக்கப்பட்ட அபராதம் இந்த காலகட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட மாட்டாது என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. கொவிட் 19 கட்டுப்பாடுகளின் அடிப்படையில் அந்தந்த மாவட்ட செயலகங்கள் மூலம் துப்பாக்கிகளை புதுப்பிக்க முன்னர் அறிவிக்கப்பட்ட சலுகை காலம் பெப்ரவரி 28 வரை மாத்திரமே திகதியிடப்பட்டது.

## இலஞ்சம் பெற்ற 14 பேர் இது வரையில் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

2020ஆம் ஆண்டின் பெப்ரவரி வரையானகாலப்பகுதியில் இலஞ்சம் பெற்றமை தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களை விட இந்த ஆண்டு இதுவரையில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகும் என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது. இது தொடர்பாக அவ் விசாரணை ஆணைக்குழு தெரிவிக்கையில்,

2021ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் இலஞ்சம் பெற்ற சம்பவங்கள் தொடர்பில் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல்வேறு சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது இந் நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும், கடந்த வருடம் குறித்த காலப் பகுதியில் கைது செய்யப்பட்டவர்களை விட இவ் வருடம் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலஞ்சம் மற்றும் ஊழலற்ற நாடொன்றை உருவாக்குவதற்காக தொடர்ந்தும் இவ்வாறான சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

# துறைமுக கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்ய தீர்மானம்

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை 1,320 மீற்றர் நீளத்திற்கும், 75 ஹெக்டயர் பரப்பளவிற்கும் அபிவிருத்தி செய்ய எதிர்பார்த்துள்ளதாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் றோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். மேலும் கூறுகையில், 440 மீற்றர் நீளம், 20 ஹெக்டேயர் பரப்பளவில் காணப்படும் கிழக்கு முனையத்தை 1,320 மீற்றர் நீளம், 75 ஹெக்டயர் பரப்பளவிற்கும் அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான செலவு 115 பில்லியன் ரூபாயென மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக துரிதமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டில் கிழக்கு முனைய அபிவிருத்தி திட்டங்களை முழுமையாக நிறைவடையச் செய்ய எதிர்பார்த்துள்ளோம். தென் ஆசியாவில் முக்கியத்துவம் மிக்க துறைமுக முனையமாக இதனை கட்டியெழுப்புவது எமது இலக்காகும். சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இதன் செய்பாடுகளை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

## மோட்டார் சைக்கிளில் வந்தவரை காரால் மோதி தாக்கி கொலை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாரம்மல பஹமுன பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த நபரை காரால் மோதச் செய்து, கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்தமை தொடர்பில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாரம்மல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஹமுன பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கார் ஒன்றில் வந்த நபர் இரு மோட்டார் சைக்கிள்களுடன் மோதச் செய்து, மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளதாக பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

உயிரிழந்த நபர் சந்தேகநபரின் மனைவியுடன் காதல் தொடர்பு கொண்டுள்ளதுடன், இது தொடர்பில் சந்தேகநபருக்கு வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வந்துள்ளார்.

பின்னர் இருவருக்குமிடையில் வாக்குவாதங்கள் இடம்பெற்றுள்ளதுடன், இதன்போது ஒருவரை ஒருவர் நேரில் சந்திக்குமாறு சவால் விடுத்துள்ளனர். அதற்கமைய, உயிரிழந்த நபரும், இன்னும் சிலரும் இணைந்து சந்தேகநபரை சந்திக்க மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர். இதன்போது காரில் வந்த சந்தேக நபர் இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் மோதச் செய்துள்ளதுடன், கீழே விழுந்திருந்த சந்தேக நபரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார். அந் நபர் உயிரிழந்துள்ளார்.

# கொழும்பில் போக்குவரத்து நெரிசலை குறைக்க இரயில் பாதைகள் அபிவிருத்தி

கொழும்பு மாநகரில் வாகன நெரிசலைக் குறைக்கும் நோக்கத்துடன் இரயில் பாதைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் ஒன்று அமுலாக்கப்படவுள்ளது. இத் திட்டத்தின் கீழ் கொழும்பு உள்ளிட்ட சனநெரிசல்மிக்க பிரதேசங்களை உள்ளடக்கியவாறு மூன்று இரயில் பாதைகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

ராகமயில் இருந்து கொழும்பு கோட்டை ஊடாக கிருலப்பனை வரையிலும், மொரட்டுவை, பிலியந்தலை, நாரஹேன்பிட்டி ஊடாக களனி வரையிலும், கொட்டாவ, பன்னிப்பிட்டி, தலவத்துகொட ஊடாக ஹுணுப்பிட்டி வரையிலும் ரயில் பாதைகள் அமைக்கப்படவுள்ளன.

இதுபற்றி ஆராயும் கலந்துரையாடல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று நிதியமைச்சில் நடைபெற்றுள்ளது. திட்டத்தில் மஹரகம நகரையும் உள்ளடக்குவது பிரயோசனமாக இருக்குமென பிரதமர் சுட்டிக்காட்டினார். மக்கள் தேவைக்கு அமைய அபிவிருத்தி நடைபெற வேண்டும். அவ்வாறில்லாத அபிவிருத்தித் திட்டங்கள் நாட்டிற்குத் தேவையில்லை.

இதற்கமைய, கொட்டாவை, ஹுணுப்பிட்டி ரயில் பாதையில், மஹரகம நகரையும் உள்ளடக்க முடியும் என நகர அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

வீதிப் போக்குவரத்து நெரிசலால் 2019ம் ஆண்டு விளைந்த நாளாந்த நஷ்டம் நூறு கோடி ரூபாவென பொருளாதார மதிப்பீடுகள் சுட்டிக் காட்டுகின்றன. இதற்கான தீர்வுகளுள் ஒன்றாக ஆரம்பிக்கப்பட்ட 'சிற்றி பஸ் சேவை' சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது.

உத்தேச ரெயில் பாதைத் திட்டம் அரச தனியார் ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டமாக அமுலாக்கப்படும். இதற்கான நேரடி வெளிநாட்டு முதலீடு 500 கோடி அமெரிக்க டொலராகும். அரசாங்கம் 6 சதவீத பங்களிப்பை வழங்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 மார்ச் 5 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN




**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் ஆவணி 27

ராகுகாலம் : காலை : 9.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை

யோகம்: சித்தயோகம்

நட்சத்திரம்: திருவாதிரை பகல் 1.33

திதி: தசமி

**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | - 05.06 |
| லுஹர் | - 12.23 |
| அஸர் | - 03.41 |
| மஃரிப் | - 06.22 |
| இஷா | - 07.32 |

## தொழிலாளர்களை அச்சுறுத்தும்

# எந்த நடவடிக்கைகளுக்கும் இ.தொ.கா. துணை போகாது



தோட்ட அதிகாரிகள் தமது சுயதேவைகளுக்கும் சுய பாதுகாப்புக்கும் நடத்தப்படும் போராட்டங்கள் வெறுமனே நகைப்பிற்குரியதாகும். தொழிலாளர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் இ.தொ.கா. ஒருபோதும் துணைபோகாதென இ.தொ.கா. பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தோட்டத்தொழிலாளர்களின் உரிமைகளை மதித்து அவர்களது அபிலாஷைகளை பூர்த்தி செய்யவும் தோட்ட நிர்வாகங்களை சரியான முறையில் சட்டதிட்டங்களுக்கு அமைய வழிநடத்திச் செல்லும் பட்சத்தில் இவ்வாறான அநாகரிகமான செயற்பாடுகளும் கோரிக்கைகளும் தோட்ட அதிகாரிகள் முன்வைக்க நேரிடாது. இதே வேளை தொழிலாளர்களது

06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்;

## சஹ்ரானின் மனைவி உட்பட ஆறு சந்தேக நபர்களுக்கு மே 5 வரை விளக்கமறியல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஈஸ்டர் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மேற்படி தாக்குதலை நடத்தி மரணமடைந்திருந்த தற்கொலை குண்டுதாரியான சஹ்ரான் ஹாசிமின் மனைவி பாத்திமா ஹாதியா உள்ளிட்ட சந்தேக நபர்கள் ஆறு பேரையும் தொடர்ந்து எதிர்வரும் மே 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை மாஜிஸ்திரேட் நீதவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டுள்ளார்.

அவ்வாறு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சஹ்ரானின் மனைவி பாத்திமா ஹாதியா அசாருதீன் முஹம்மத் இல்மி, அப்துல் ஹமீட் மொகமத் ரிபாஸ், முஹம்மத் மஸ்னுக் முஹம்மத் ரிலா,

மொகமட் அமீர் எம். அயதுல்லா, மொஹமட் முபாரக் மொகமத் ரிபாயில் ஆகியோரையே எதிர்வரும் மே 5ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி வழக்கு நேற்று முன்தினம் ஸ்கைப்செய்மதி மூலம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மஜிஸ்திரேட் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

இவர்களில் சஹ்ரானின் மனைவி பாத்திமா ஹாதியா கண்டி போகம்பறை சிறைச்சாலையிலும் ஏனைய கைதிகள் பூசா சிறைச்சாலையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை ஸ்கைப் மூலம் தொடர்பு கொண்டு மாஜிஸ்திரேட் நீதவான் கண்காணித்தார்.(ஸ)

அடக்கம் செய்ய எதிர்ப்பு தெரிவித்து

## இரணைதீவில் இரண்டு இடங்களில் போராட்டம்

கொரோனா வைரஸ் தொற்றினால் மரணிப்பவர்களின் உடல்களை இரணைதீவு பகுதியில் அடக்கம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இரண்டு இடங்களில் நேற்றும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இரணை மாதா நகர் பகுதியில் மக்கள் மற்றும் பங்குத்தந்தையர்கள் இணைந்து நேற்றுமுன்தினம் போராட்டத்தை முன்னெடுத்தனர். அதேபோன்று நேற்று வியாழக்கிழமையும் இரணைதீவு பிரதான இறங்குதுறை மற்றும் சடலங்களை அடக்கம் செய்வதற்காக குழிகள் தோண்டப்பட்ட பகுதி போன்வற்றில் எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மற்றும் கடற்றொழில் அமைச்சர் உட்பட

06

## இந்தியா, பாக். பங்களாதேஷ் விமானப் படைத் தளபதிகள்

# பாதுகாப்புச் செயலாளர், முப்படைத் தளபதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை







**ஸாதிக் ஷிஹான்**

இலங்கைக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்க பசுபிக் பிராந்திய மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் விமானப் படைத் தளபதிகள் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் முப்படைத் தளபதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த சந்திப்பு பாதுகாப்பு, இராணுவ, கடற்படை மற்றும் விமானப் படைத் தலைமையகங்களில் நடைபெற்றன.


06

## ஜப்பான், கொரிய தூதுவர்கள் வெளிவிவகார அமைச்சருடன் சந்திப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கையில் உள்ள சில வெளிநாட்டுத் தூதுவர்கள் நேற்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். நாட்டின் தற்போதைய சூழ்நிலை, கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள்,கொரோனா வைரஸ் பரவலினால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பிலும் இந்த பேச்சுவார்த்தைகளின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. மேற்படி பேச்சுவார்த்தையில் பங்காளதேஷ், கொரியா, பிரேசில்,ஜப்பான் ஆகிய நாடுகளின் தூதுவர்களே கலந்து கொண்டுள்ளனர்.

06



## தவக்கால சிந்தனை

### நல்ல நண்பர்களைத் தேடுவோம்

தவக்காலம் அருளின் காலம். இக் காலத்தை நாம் இறைவனுக்கு விருப்பமானதாக அனுசரித்து அவருடைய அருளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வோம். இயேசுவின் சீடர்களில் சிலர் முரட்டு குணம் உடையவர்களாகவும் ,சிலர் பாவமானதாக கருதப்பட்ட வரி வசூலிக்கும் தொழிலை செய்பவர்களாகவும் இருந்தனர்.சீமோன் தீவிரவாதக் குழுவின் உறுப்பினராகவும் இருந்தார்.ஆனால் இயேசுவோடு சேர்ந்தபின் இவர்களுடைய வாழ்க்கை முற்றிலுமாக மாறிப்போனது . நல்லவர்களாக பிறருக்கு உதவி செய்பவர்களாக நடமாடும் புனிதர்களாக வாழத் தொடங்கினார்கள். நாம் யாரோடு அதிக நேரத்தை செலவிடுகிறோமோ அவர்களைப் போகவே நாமும் மாறுகிறோம். இயேசுவினுடைய சீடர்கள் இயேசுவோடு அதிக நேரத்தை செலவிட்டதால் அவர்களுக்கும் இயேசுவினுடைய குணம் வந்துவிட்டது. அரசன் ஒருவன் இரண்டு பச்சைக் கிளிகளை வளர்த்து வந்தான் அவற்றுக்கு பேச கற்றுக் கொடுத்திருந்தான். ஒருநாள் அந்த இரண்டு கிளிகளும் காணாமல் போய்விட்டன. ஒரு கிளி கள்வர் கூட்டத்தோடு சேர்ந்தும் மற்றொரு கிளி ஒருமுனிவரோடும் வாழத்தொடங்கியது . சில ஆண்டுகளுக்குப் பின்பு மீண்டும் அந்த இரண்டு கிளிகளும் அரசனைத்தேடி மாளிகைக்கு வந்தன. அப்போது ஒரு கிளி எப்போது பார்த்தாலும் திருடு, கொலை செய் என்று சொல்லிக் கொண்டிருந்தது. இன்னொரு கிளி வாருங்கள் ,அமருங்கள் உண வருந்துங்கள் , அன்பு செய்யுங்கள் என்று சொல்லிக் கொண்டிருந்த்து. திருடர்களோடு இருந்த கிளி திருடர்களுடைய பேச்சு வழக்கையும் முனிவரோடு இருந்த கிளி முனிவருடைய பேச்சு வழக்கையும் உள்வாங்யிருந்தது. நாமும் அப்படித்தான் யாரோடு அதிக நேரம் செலவிடுகிறொமோ அவர்களைப் போலவே நாமும் மாறுகிறோம்.நாம் நட்பு பாராட்டுவதற்கு நல்லவர்களைத் தேர்ந்தெடுத்தோமென்றால் நாமும் நல்லவர்களாக இருப்போம் . அதேவேளையில் போதைப்பொருள் பழக்கமுடைய தவறான சிந்தனைகளுடைய நண்பர்களைத் துணைவர்களை வாழ்வில் தேர்ந்தெடுக்கும் போது நம்முடைய வாழ்க்கை அப்படியே தவறானதாக மாறிவிடுகிறது.

ஆகவே நண்பர்களைத் தேர்ந்தெடுக்கும் போது மிகவும் கவனத்தோடு செயற்படுவோம்..அவர்கள் நல்லவர்களாக அமைந்தால் நம் வாழ்க்கையே மாறிவிட வாய்ப்பிருக்கிறது.இந்த தவக்காலத்தில் அத்தகைய நண்பர்களை சம்பாதித்துக் கொள்ள இறை அருளை வேண்டுவோம்.

அருட்பணி **அருண் ரெக்ஸ்...**

பெண்களுக்கு எதிரான பாகுபாடு, உரிமை மீறல்;

# பாராளுமன்ற விசேட குழு மூலமாக கண்டறிய ஏற்பாடு

## பெண் எம்.பிக்கள் குழு வேண்டுகோள்

**சுதர்ஷினி**

இலங்கையில் பெண்களுக்கு எதிராக இடம்பெற்ற பாகுபாடுகள் மற்றும் பெண்களின் உரிமை மீறல்களை கண்டறிந்து பாலின பங்குடமை மற்றும் சமத்துவத்தை (Gender Equity and Equality) உறுதி செய்யக்கூடிய பரிந்துரைகளை வழங்குவதற்கு பாராளுமன்ற விசேட குழுவொன்றை அமைக்குமாறு அனைத்து பெண் பாராளுமன்ற உறுப்பினர்களும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் டாக்டர் சுதர்ஷினி பெர்ணான்டோபுள்ளே தலைமையிலான பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.

உத்தேச பாராளுமன்ற குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் நியமிக்கப்பட வேண்டுமென்பதுடன் அதன் அங்கத்தவர்கள் 25 உறுப்பினர்களை கொண்டமைதல் வேண்டுமென பிரேரிக்கப்பட்டுள்ளது.

குழு அதன் முதல் கூட்டத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள் குழுவின் அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அது சமர்ப்பிக்கப்பட்டு 08 வாரங்களில் இந்த அறிக்கை தொடர்பான விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்களின் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டுமென பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் யோசனை முன்வைத்துள்ளனர்.

இந்த பிரேரணை பாராளுமன்றத்தின் 03 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

இந்தப் பிரேரணையில் இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷனி பெர்ணான்டோபுள்ளே மற்றும் அமைச்சர் பவித்ராதேவி வன்னிஆரச்சி, இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சீதா அரம்பேபொல, பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹரிணி அமரசூரிய, ரோஹிணி குமாரி விஜேரத்ன, தலதா அத்துகோரல, கீதா சமன்மலீ குமாரசிங்ஹ, கோகிலா குணவர்தன, முதிதா பிரிஸாந்தி, ராஜிகா விக்ரமசிங்க, மஞ்சுளா திசாநாயக்க, டயனா கமகே ஆகியோரும் கையொப்பமிட்டுள்ளனர்.

பாலின பங்குடமை மற்றும் சமத்துவத்தை (Gender Equity and Equality) விருத்தி செய்து அதனை மதித்தல் மற்றும் இலங்கையில் அனைத்து பெண்களையும் சிறுமிகளையும் வலுப்படுத்துவதை உறுதி செய்தல், பால்நிலை அடிப்படையில் பாகுபாடுகளுக்கு உட்பட்டவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் போன்ற விடயங்களுக்காக இந்த பாராளுமன்ற குழு பிரேரிக்கப்பட்டுள்ளது.

தொழில் வாய்ப்பு, பதவி உயர்வு வாய்ப்புக்கள்

06

## சுவர் இடிந்து வீழ்ந்து குடும்பஸ்தர் பலி

**மன்னார் குறுப் நிருபர்**

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சின்ன சன்னார் கிராமத்தில் நேற்று மதியம் வீடு ஒன்றின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் ஒரு பிள்ளையின் தந்தையான 27 வயதுடையவர் என தெரிய வந்துள்ளது. மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள சின்ன சன்னார் கிராமத்தில் மதியம் 1:30 மணியளவில் வீடொன்றில் சுவரை இடித்து வேலை செய்து கொண்டிருந்த போது வீட்டின் சுவர் முற்றாக இடிந்து விழுந்ததில் ஒரே குடும்பத்தை சேர்ந்த இரு சகோதரர்கள் இடிபாட்டிற்குள் சிக்கி படுகாயமடைந்துள்ளனர். சம்பவத்தில் சிக்குண்டு சுவரின் இடிபாட்டில் இருந்து மீட்கப்பட்டு இருவரும்

06

## மக்கள் வசிக்காத பகுதிகளில் மட்டுமே சடலங்கள் அடக்கம்

### இரணைதீவு குறித்து Dr.அசேல குணவர்த்தன



இரணைதீவில் மக்கள் வசிக்காத பகுதியில் மாத்திரமே கொரோனா சடலங்கள் அடக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார். கொவிட்19 தொற்று காரணமாக மரணிப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த 25 ஆம திகதி வெளியாகியிருந்தது. அதன் பின்னர் சடலங்களை அடக்கம் செய்வதற்காக இரணைதீவு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர்

06



அகில இலங்கையிலுள்ள ஆலயங்களில் தொண்டு செய்வதை நோக்காகக் கொண்டு வத்தளை பிரதேச இளைஞர்கள் "ஓம் முருகா தொண்டர்கள்"என்ற அணியினை வத்தளை, வெலியமுன 274/14 இலக்க இல்லத்தில் தலைவர் மகேந்திரபாலா தலைமையில் அங்குராப்பணம் செய்துள்ளனர்.

## மீன்பிடி வலைக்குள் மறைத்து 'ஐஸ்' போதைப்பொருள் கடத்தல்

தலைமன்னார் – ஊருமலை பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

தலைமன்னார் – ஊருமலை கடற்பகுதியில் கடற்படையினரால் நடத்தப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது ஐஸ் போதைப் பொருளுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கடற்படையின் ரோந்து நடவடிக்கையின் போது சந்தேகத்திற்கிடமான மீன் பிடிப் படகொன்றை அவதானித்த படையினர் அதனை சோதனைக் குட்படுத்தியுள்ளனர்.

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 150.48 | 155.29 |
| கனடியன் டொலர் | 151.90 | 157.83 |
| யூரோ | 233.28 | 239.36 |
| ஜப்பான் யென் | 1.8061 | 1.8552 |
| சிங்கப்பூர் டொலர் | 144.71 | 149.34 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 270.33 | 276.85 |
| சுவிஸ் பிராங்க் | 209.09 | 216.91 |
| அமெரிக்க டொலர் | 193.94 | 198.27 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 517.95 | கட்டார் ரியால் | 53.61 |
| குவைத் டினார் | 644.92 | சவூதி ரியால் | 52.05 |
| ஓமான் ரியால் | 507.20 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 53.16 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் மாசி மாதம் 21ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 றஜப் பிறை 20

## குறள் தரும் சிந்தனை



அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்

*தம்மை வருத்துவோர்க்கும் தீய செயல்களைச் செய்யாமலிருத்தலை, அறிவு எல்லாவற்றிலும் தலையான அறிவு என்று கூறுவர்.*

# தன்னிறைவு நோக்கிய இலக்கில் உணவு உற்பத்தித் திட்டங்கள்

இலங்கையில் விளையக் கூடிய அனைத்து உணவுப் பொருட்களையும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் வேலைத் திட்டத்திற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளது. இதன் பொருட்டு பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் உள்நாட்டில் விளையக் கூடிய நெல், மஞ்சள், உழுந்து உள்ளிட்ட 16 உணவுப் பொருட்களின் இறக்குமதி இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யவென வருடா வருடம் பெருந்தொகை அந்நிய செலாவணி செலவிடப்பட்டு வருகின்றது.

இவ்வாறு இந்நாட்டுக்குரிய அந்நிய செலாவணியை உள்நாட்டிலேயே விளையக் கூடிய உணவுப் பொருட்களின் இறக்குமதிக்காக செலவிடுவது எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. அதனால் இந்நிதியை மீதப்படுத்திக் கொள்ளும் நோக்கிலேயே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. அத்தோடு உள்நாட்டு உணவு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளுக்கு உரிய விலையைப் பெற்றுக் கொடுக்கவும் இத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த வகையில் தற்போது நாட்டில் நெல் கொள்வனவு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் பெரும்போகத்தில்தான் அதிக நெல் அறுவடை கிடைக்கப் பெறுகின்றது. குறிப்பாக 65 வீத அறுவடை இக்காலப் பகுதியில் கிடைக்கப் பெறும். அவற்றில் சுமார் 30 வீதம் தற்போது அறுவடை செய்யப்பட்டிருக்கின்றது. எஞ்சியவை அடுத்து வரும் சில வாரங்களில் அறுவடை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

'கடந்த கால போகங்களை விடவும் இம்முறை பெரும்போக விளைச்சல் சிறந்த மட்டத்தில் காணப்படுவதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் உப தலைவர் துமிந்த பிரியதர்ஷன தெரிவித்திருக்கின்றார். பொதுவாக பெரும்போக அறுவடையின் மூலம் கிடைக்கப் பெறும் நெல் நாட்டின் அரிசித் தேவையை சுமார் ஒன்பது மாதங்களுக்கு நிறைவு செய்யக் கூடியதாக இருக்கும். அதேநேரம் சிறுபோகத்தில் கிடைக்கப் பெறும் அறுவடை மேலும் ஆறு மாதங்களுக்கு போதுமானதாக இருக்கும்.

இவ்வாறான நிலையில் தற்போது நெல் கொள்வனவு கிழக்கு மாகாணத்தில் ஆரம்பமாகியுள்ளது. கடந்த காலங்களை விடவும் இம்முறை ரூபா 55.00 இற்கும் மேல் நெல் கொள்வனவு செய்யப்படுகின்றது. ஆனால் கடந்த காலத்தில் ரூ. 38.00 இற்கும் குறைவான விலையில்தான் நெல் கொள்வனவு செய்யப்பட்டது.

அரசாங்கம் இம்முறை நெல் கொள்வனவுக்காக 16 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதோடு, 03 இலட்சத்து 25 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்யவென 325 களஞ்சியசாலைகளை திறந்தும் வைத்துள்ளது. இதற்கு மேலதிகமாக மாவட்ட செயலாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக நெல் கொள்வனவு செய்யவென 5000 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நாட்டில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படக் கூடிய நிலைமை காணப்படுவதாகவும் அரிசியை இறக்குமதி செய்ய இடமளிக்குமாறும் சிலர் தெரிவித்திருந்தனர். ஆனால் அவ்வாறு அரிசியை இறக்குமதி செய்ய ஜனாதிபதி இடமளிக்கவில்லை. இதன் பயனாக இப்போது உள்நாட்டு நெற்செய்கையாளர்களின் அறுவடைக்கு சிறந்த விலையைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது.

ஆனால் 'அரிசி இறக்குமதிக்கு இடமளிக்கப்பட்டு இருந்தால் நெற்செய்கையாளர்களின் அறுவடைக்கு இவ்வாறு சிறந்த பெறுமதியைப் பெற்றுக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கும்' என்று மகாவலி வலயங்கள் சார்ந்த கால்வாய்கள் மற்றும் குடியிருப்புக்களின் பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கமலத் அண்மையில் சுட்டிக்காட்டி இருந்தமை தெரிந்ததே.


தற்போதைய அரசாங்கம் அரிசி உள்ளிட்ட உள்நாட்டில் விளையக் கூடிய உணவுப் பொருட்களின் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதை இலக்காகக் கொண்டு நடவடிக்கைகள் முன்னெடுத்து வருகின்றது. இதன் நிமித்தம் நீர்த்தேக்கங்கள், குளங்கள், கால்வாய்களின் புனரமைப்புக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. விவசாயத்திற்கு தேவையான தண்ணீர், பசளை என்பன இலவசமாக வழங்கப்படுகின்றன. விளைச்சலுக்கு சிறந்த விலையும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இவ்வேலைத் திட்டங்களின் நிமித்தம் பெருந்தொகை நிதி முதலீடு செய்யப்படுகின்றது.

இதன் ஊடாக உள்நாட்டில் விளையக் கூடிய உணவுப் பொருட்களின் இறக்குமதிக்கென வெளிநாடுகளுக்கு செல்லும் பெருந்தொகை அந்நியச் செலாவணியை உள்நாட்டில் மீதிப்படுத்திக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அந்நிதியை நாட்டின் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தவும் வாய்ப்பு கிடைக்கப் பெறும்.

ஆகவே நாடு அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடையவென நெற்செய்கையாளர்கள் தம்மாலான பங்களிப்பை உச்சளவில் நல்க வேண்டும். அது நாட்டிற்கு மறுமலர்ச்சிக்கும் மக்களுக்கு வளமான வாழ்வுக்கும் அளிக்கப்படும் பாரிய பங்களிப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# கிராம மக்களின் காலடிக்கு வந்து சேர்ந்த சௌபாக்கியத்தின் நோக்கு தேசிய திட்டம்




## அம்பாறை மாவட்டத்தில் தேசிய உற்பத்தி கிராமமாக அட்டப்பள்ளம் தெரிவு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய, உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் அரசின் 'சௌபாக்கியத்தின் நோக்கு' வேலைத் திட்டத்தின் கீழ், நாட்டின் உள்நாட்டு உற்பத்தியை பெருக்கும் இலக்குடன் 'உற்பத்தி கிராமங்களை' (நிஸ்பாதன கம்மானய) கட்டியெழுப்பும் ஆரம்ப நிகழ்வு கடந்த 03 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'உற்பத்தி கிராமம்' தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் முதற் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட கிராமங்களில் மூன்று திட்டங்கள் முதல் கட்டமாக தற்போது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

இதன்படி மஞ்சள் உற்பத்தி தொடர்பாக உகன பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியும், பனம் பொருள் உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பான வேலைத் திட்டத்துக்கு நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியும், கோழிக்குஞ்சு மற்றும் முட்டை உற்பத்தி வேலைத் திட்டத்துக்கு நிந்தவூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிராம மட்டத்தில் காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதுடன், அவற்றுக்கான சந்தை வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுப்பது







## 45 மில்லியன் ரூபா செலவில் மூன்று மாதிரி உற்பத்திக் கிராமங்கள் அங்குரார்ப்பணம்

சௌபாக்கியா வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். இதன் மூலம் உற்பத்திக் கிராமங்களை உருவாக்குவதும், பின்தங்கிய பிரதேச மக்களின் வாழ்கைத் தரத்தை மேம்படுத்துவதும் முக்கிய அம்சங்களாகும்.

அட்டப்பள்ளம் கிராமத்தை மையப்படுத்தி, 'கோழிப் பண்ணை அபிவிருத்தி கருத்திட்டம்' முன்னெடுக்கப்படுகின்றது. இதன் ஊடாக கோழி வளர்ப்பு, கோழி இறைச்சி, முட்டை உற்பத்தி மற்றும் அதனூடான உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்தல் போன்றவை மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கென இக்கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. நிந்தவூர் பிரதேச செயலாளர் ரி.எம்.அன்சார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி. அனீஸ், நிந்தவூர் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.சுல்பிக்கார், கணக்காளர் எஸ்.எல்.சாஜீதா பர்வின், அம்பாறை பிரதேச செயலக கணக்காளர் ஏ.ஆர்.எம். நிஸாம் மற்றும் நிந்தவூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேசத்தின் கோழிப் பண்ணையாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

நிந்தவூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அட்டப்பள்ளம் கிராமம் அம்பாறை மாவட்டத்தின் கரையோரக் கிராமங்களில் ஒன்றாகும். இங்கு வாழும் மக்களின் ஜீவனோபாயத் தொழில் விவசாயம் ஆகும். அம்மக்கள் கால்நடை, கோழி வளர்ப்பு, தோட்டப்பயிர் போன்ற தொழில்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

சௌபாக்கியா தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் அட்டப்பள்ளம் தற்போது உள்ளூர் உற்பத்திக் கிராமமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இங்கு கோழி வளர்ப்பை ஊக்குவிப்பதுடன் அதிகளவிலான முட்டை உற்பத்தியை மேற்கொண்டு நகரங்களில் சந்தைப்படுத்துவதிலும் பார்க்க குறைந்த விலையில் கிராம மட்டத்தில் நுகர்வோருக்கு உற்பத்திகள் வழங்கப்படவுள்ளன. சந்தைப் படுத்துவதற்கான வேலைத் திட்டங்களும் இதன் மூலம் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த வேலைத் திட்டத்திற்கென அரசாங்கம் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்கும் சுமார் 150 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. சௌபாக்கியா உள்ளூர் உற்பத்தி கிராமங்கள் உருவாக்கப்பட்டு, கிராம மட்ட உற்பத்தி ஆர்வலர்கள் தேசிய உற்பத்திக்கு பங்களிப்புச் செய்ய முடியும் என்ற நோக்கத்திலேயே இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மூன்று நிகழ்ச்சித் திட்டத்திற்கும் 45 மில்லியன் ரூபா நிதி செலவு செய்யப்படவுள்ளது.

இதனூடாக கிராம மட்டங்களில் தொழில் செய்பவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கும். வறிய குடும்பங்களின் வருமானம் அதிகரிக்கும். தொழில் முயற்சிகள் அபிவிருத்தி செய்யப்படும். நுகர்வோர் சிறந்த பயனைப் பெறுவர். ஆரோக்கியமான சமூக சூழல் ஒன்று கட்டியெழுப்பப்படும். வறுமையற்ற புதிய தேசம் கிராம மட்டத்தில் இருந்து உருவாக முடியும்.

எவ்வாறாயினும் அரசாங்கம் முன்னெடுத்திருக்கின்ற இந்த வேலைத் திட்டத்தை கிராம மட்டங்களில் செயல்படுத்துவதற்குத் தேவையான வளங்கள் மற்றும் ஆளணிகளை சரியாகப் பயன்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் பிரதேச செயலகங்கள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

கிராமத்தில் வாழும் மக்களின் காலடிக்கு வந்து சேர்ந்திருக்கும் ஜனாதிபதியின் தேசிய எண்ணக்கருவை உயிர்ப்பிப்பது உற்பத்தியாளர்கள் அல்லது பயனாளிகளின் அத்தியாவசிய கடமையாகும்.

இந்த வேலைத் திட்டத்தை கிராம மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். உற்பத்தியாளர்கள், பயனாளிகள் மற்றும் கிராமத்தில் உள்ள பொதுமக்கள் வழங்கும் ஒத்துழைப்பு கனதியாக காணப்பட்டால் வேலைத் திட்டத்தின் அறுவடையும் உச்சமாக இருக்கும் என்பது எல்லோரதும் எதிர்பார்ப்பாகும்.



**ஏ.எல்.எம்.ஷினாஸ்...**
*(பெரியநீலாவணை விசேட நிருபர்)*

# சசிகலா அரசியலில் ஒதுங்கியதற்கு பாரியதொரு திட்டமே காரணம்!

அரசியலில் இருந்து விலகுவதாக சசிகலா நேற்றுமுன்தினம் திடீரென அறிவித்ததையடுத்து, தமிழக அரசியல் களம் பரபரப்பு அடைந்துள்ளது. அ.தி.மு.கவுக்கு இனித்தான் சிக்கல் என்று சொல்வதா? அல்லது எடப்பாடியாருக்கு சிக்கல் தீர்ந்தது என்று சொல்வதா என்று தெரியவில்லை. ஒருவித குழப்ப மனநிலைமையையே சசிகலாவின் அரசியல் விலகல் முடிவு ஏற்படுத்தி வருகிறது.

அ.தி.மு.கவில் இணைந்து கொள்வதற்கு சசிகலா எவ்வளவோ முயன்று பார்த்தார். ஒருசில நபர்களை தூது அனுப்பினார். தன் சார்பாக அமைச்சர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்.. ஆனால், ஆனால் எடப்பாடியார் தன்னுடைய நிர்வாகிகளை கெட்டியாக கைப்பிடிக்குள் வைத்திருப்பது கண்டு அதிர்ந்தே விட்டார் சசிகலா. தேர்தல் திகதிக்கு பிறகு எப்படியும் அதிருப்தியாளர்கள் தன்னிடம் வந்து விடுவார்கள் என்று பார்த்தால், அதிலும் சசிகலாவுக்கு தோல்விதான்..

எடப்பாடியார் மீது உண்மையிலேயே அமைச்சர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் நம்பிக்கை இருப்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. இது அ.தி.மு.கவுக்கு மேலும் பலம்தான்.

தினகரனின் அ.ம.மு.க போட்டியிட்டாலேஅ.தி.மு.க வாக்குகள் சிதறும். இது தானாகவே தி.மு.கவுக்கு பலத்தை சேர்க்கும். என்னதான் கொங்குமண்டலம், வடமாவட்டங்களில் வாக்கு வங்கியை பெருக்க திட்டம் தீட்டினாலும், தென் மண்டலத்தில் தி.மு.கவின் கையே ஓங்கி இருக்கும் என்று இப்போதே அரசியல் நோக்கர்கள் சொல்ல ஆரம்பித்து விட்டனர்.

சிறையில் இருக்கும் போதும் சரி, வெளியே வந்த போதும் சரி, அ.தி.மு.கவில் தனக்கு மறுபடியும் அதிகாரம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கம் சசிகலாவிடம் பெரிதாக இல்லை. அதை விட அவரது எண்ணம் முழுவதும் தி.மு.க மீதே இருந்ததாக சொல்கிறார்கள்.

அ.தி.மு.க பலவீனமாக போய் விடாமல், தி.மு.க பலம் பெற்று விடக் கூடாது என்பதே ஒரே விஷயமாக இருந்திருக்கிறது. இதற்கு அரசியல் காரணம் தவிர தனிப்பட்ட காரணமும் உண்டு. 30 வருடமாக அரசியல் அதிகாரம் செய்து வந்த காலத்தில் இருந்தே தி.மு.க மீது ஒருவித வெறுப்பு சசிகலாவுக்கு இருக்கத்தான் செய்தது, இதனாலேயே அவரது ஒரே குறி தி.மு.கவாக இருக்கிறது. அ.ம.மு.க, அ.தி.மு.க கட்சிகள் இணைப்பு விஷயத்திலும் அவர் மறுப்பு சொல்லாததற்கு காரணமும் இதுதான். ஒன்றிணைவோம் என்று அறிக்கை விட காரணமும் இதுதான்.

இதைத் தவிர, அ.தி.மு.கவில் இருந்து முக்கிய புள்ளிகள் தன்னை வந்து சந்திக்கவில்லை என்ற வருத்தமும் அவருக்கு இருந்து கொண்டே இருந்தது. குறிப்பாக 5 அமைச்சர்களை எதிர்பார்த்திருந்தார். ஆனால் அவர்கள் சந்திக்க வரவே இல்லை. தேர்தல் திகதிக்கு பிறகு வருவார்கள் என்று பார்த்தால், அப்போதும் வரவில்லை.

இதற்கு நடுவில் பா.ஜ.கவும் கட்சிகள் இணைப்பு பற்றிய பேச்சை தொடராமல் அப்படியே நிறுத்தி கொண்டது. இதுவும் சசியின் வருத்தத்திற்கு ஒரு காரணம் எனலாம். தினகரன் அ.ம.மு.கவை கொண்டு வந்து முன்னிறுத்தி கொண்டிருப்பதால், அதில் ஆர்வம் காட்டவும் விருப்பமில்லை. ஒருவேளை தினகரன் கேட்டுக் கொண்டதற்கிணங்க பிரசாரத்துக்கு தமிழகம் முழுக்க சென்றால்,



## தி.மு.கவை வீழ்த்த வியூகம் வகுக்கின்றதா பா.ஜ.க?

இரட்டை இலைக்கு எதிரான பிரசாரத்தையே தான் முன்வைக்க வேண்டி இருக்கும். இதை ஒருபோதும் செய்ய விருப்பமுமில்லை.

அதனால்தான் தினகரனையே தேர்தலில் நிற்க வேண்டாமென்று அறிவுரை கூறியதாகவும் ஆனால், தினகரன் தன் முடிவில் பிடிவாதமாக இருப்பது தெரியவும்தான், இப்படி ஒரு முடிவை சசிகலா எடுத்திருப்பதாகவும் ஒருசாரார் கூறுகிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, சசிகலாவுக்கு ஏற்கனவே உடல்நலம் குன்றிய விஷயத்தையும் இங்கு பார்க்க வேண்டி உள்ளது.

சசிகலாவின் விலகலை வேறு விதமாகவும் அரசியல் நோக்கர்கள் பார்க்கிறார்கள். சசிகலாவின் தற்போதைய நிலைமை, தி.மு.கவின் அசுர வளர்ச்சி, தினகரனின் குறிக்கோள், அ.தி.மு.க தலைமையின் பிடிவாதப் போக்கு என இவை அனைத்துமே பா.ஜ.கவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. இப்போதைக்கு ஒரே வழி இந்த பிரச்சினையை ஆறப்போடுவதுதான்.. அதுவரை சசிகலாவை அமைதியாக இருக்கும்படி பா.ஜ.க சொல்லி இருக்கலாம் அல்லது தேர்தலுக்கு பிறகு அதிரடியில் இறங்கும்படியும் அவருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கலாம் என்கிறார்கள்.

பொது எதிரி தி.மு.க என்பதால், முழு கவனத்தையும் அங்கே திருப்பவே பா.ஜ.க திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. அதுமட்டுமல்லாமல், சசிகலா அரசியலில் இருந்து விலகுவதாக அந்த அறிக்கையில் எங்குமே சொல்லவில்லை. "ஒதுங்கியிருக்கிறேன்" என்று மட்டுமே சொல்லி இருப்பதால், இந்த அறிக்கையை முற்றுப்புள்ளியாக கருத தேவையில்லை என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

அன்று ஜெயலலிதாவும் இப்படி ஒரு முடிவை எடுத்திருந்தார். பிறகு தன் முடிவை மாற்றிக் கொண்டு அரசியலில் தீவிரமானதால், இந்த அறிக்கையை பெரிதாக எடுத்து கொள்ளவும் தேவையில்லை என்பதே பரவலான கருத்து.

மற்றொரு புறத்தில் அ.தி.மு.க_ அ.ம.மு.க இணைப்புக்காக சசிகலாவை வைத்து நாடகம் அரங்கேற்றப்படுகிறதா என்ற சந்தேகமும் எழுகிறது. சசிகலா சுறுசுறுப்பாக இருக்கும் வரை அ.ம.மு.கவை தன்னுடன் அ.தி.மு.க சேர்த்துக் கொள்ள முன்வராது. இது தொடர்பாக டெல்லி மேலிட ஆசியுடன் நடந்த அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்து போய் விட்டன. முதல்வர் எடப்பாடி தனது முடிவில் உறுதியாக இருக்கிறார்.

பன்னீர்செல்வம் இறங்கி வந்தாலும் கூட எடப்பாடியார் இறங்கி வராததால் இந்த முயற்சிகளுக்குப் பலன் கிடைக்கவில்லை. அதேசமயம், அ.தி.மு.க வாக்குகள் சிதறி விடக் கூடாது என்ற கவலையில் டெல்லி உள்ளது. அப்படி சிதறினால் அது தி.மு.கவுக்கு சாதகமாகி விடும் என்பது அதன் கவலை. அ.ம.மு.க தனியாக போட்டியிட்டால் நிச்சயம் அ.தி.மு.க வாக்குகள்தான் அதிக அளவில் பிரியும். அது அ.தி.மு.க_ பா.ஜ.க கூட்டணிக்கு பெரும் பாதகத்தையே ஏற்படுத்தும்.

இந்த நிலையில்தான் சசிகலாவை விலகக் கோரி மேலிடம் கேட்டுக் கொண்டிருக்கலாம். இந்த முடிவுக்காக அவருக்கு பல வாக்குறுதிகளையும் டெல்லி மேலிடம் அளித்திருக்கலாமோ என்ற சந்தேகமும் எழுகிறது.

"முதலில் அ.தி.மு.க_ அ.ம.மு.க இணையட்டும். பிறகு உங்களது பேச்சை கட்சித் தேர்தல்கள் உள்ளிட்டவற்றில் கேட்பது போல செய்கிறோம். இப்போதைக்கு நீங்கள் விலகுங்கள்" என்று டெல்லி மேலிடம் கே'டுக் கொண்டிருக்கலாம். இப்படிச் செய்வதன் மூலம் அ.தி.மு.க_ அ.ம.மு.க இணைப்புக்கு எந்தத் தடையும் இருக்காது என்று டெல்லி நம்புகிறது.

அடுத்து அ.தி.மு.க_ அ.ம.மு.க இணைப்பு வேகப்படுத்தப்படலாம். இருவரையும் இணையுமாறும் டெல்லி மேலிடம் கட்டாயப்படுத்தலாம். இணைத்தும் வைக்கவும் செய்யலாம். ஒருங்கிணைந்த அ.தி.மு.கவேதேர்தலை சந்திக்க வேண்டும் என்வே டெல்லியின் விருப்பம். எனவே இனி வரும் நாட்களில் பல அதிரடிகளை எதிர்பார்க்கலாம்.

# கொவிட்–19 இனால் உயிரிழப்போர் உடல்களின் நல்லடக்கம், போக்குவரத்து நடைமுறைகள்

## சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் சுற்றறிக்கை வெளியீடு

கடந்த பெப்ரவரி 25ஆம் திகதி, கொவிட்19 சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கும் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்த நிலையில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் வழிகாட்டல்களுக்கு அமையவே அது இடம்பெறும் என அவ்வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதற்கமைய, DGHS/COVID19/3472021 எனும் குறித்த சுற்றறிக்கை 03.03.2021 அன்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தனவினால், அனைத்து மாகாண, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், அனைத்து வைத்தியசாலைகளுக்குமாக வெளியிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

**தயார்படுத்தல் மற்றும் போக்குவரத்துக்கான அனுமதிகள்:**

கொவிட் தொற்றாளர் ஒருவர் மரணிக்கும் நிலையில், எவ்வித தாமதமுமின்றி அவரது உறவினர்களுக்கு உடனடியாக அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வைத்தியசாலையின் பணிப்பாளர் அல்லது அதன் பிரதானியினால், அடக்கம் செய்வது தொடர்பான எழுத்து மூல கோரிக்கை உறவினரிடமிருந்து பெறப்பட வேண்டும்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பிரதிநிதி ஒருவரை தொடர்பு கொண்டு, இறப்பு அத்தாட்சி படிவத்தில் அடக்கம் செய்யப்படும் இடத்தை 'இரணைதீவு' என குறிப்பிட நடவடிக்கை எடுக்க வேண்டும். சடலத்தை மருத்துவமனையிலிருந்து கொண்டு செல்லவும், முறையான அடக்கம் செய்யவும் இந்த ஆவணம் பயன்படுத்தப்படலாம். ஏதேனும் விசாரணைகள் நடத்தப்படும் நிலையில், திடீர் மரண விசாரணை அதிகாரி / மஜிஸ்ட்ரேட் ஆகியோரினால் அடக்கம் செய்யப்படும் இடம் குறிப்பிடப்பட வேண்டும்.

நிறுவனத்தின் (வைத்தியசாலையின்) பணிப்பாளர்/ தலைவரினால், சடலம் வெளியேற்றப்படும் திகதி மற்றும் நேரத்தை உறவினர்களுக்கு தெரிவிக்க வேண்டுமென்பதோடு, விரைவில் பிரேதப் பெட்டியை வழங்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

உறவினர்களால் வழங்கப்பட்ட பிரேதப் பெட்டியில் வைக்கப்பட்ட சடலத்தை போக்குவரத்துக்கு அனுப்பி, கொழும்பு தடயவியல் மருத்துவ நிறுவனம் (JMO) அல்லது வெலிக்கந்த ஆதார வைத்தியசாலையினால் நியமிக்கப்பட்ட அதிகாரியால் பெறப்படுவதை உறுதி செய்வது, பணிப்பாளர்/ பிரதானியின் கடமையாகும். இச்செயற்பாடு சுகாதார

## தொடர்பு கொள்ளும் பிரதிநிதியாக மருத்துவர் அன்வர் ஹம்தானி நியமனம்

அமைச்சினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவருடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட வேண்டும் (தொடர்பு விபரம் கீழே காண்க)

சடலத்தை 'நாச்சிகுடா கப்பல்' இற்கு கொண்டு செல்லும் வாகனம் தினமும் அதிகாலை 5.30 மணிக்கு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் பரிந்துரைக்கப்படும் பெறுதல் மையத்திலிருந்து புறப்படும். அங்கீகரிக்கப்பட்ட நபரால் சடலம் எடுத்துச் செல்லப்பட்டு, 'நாச்சிகுடா கப்பல்' இல் பொறுப்புச் சாட்டப்பட்ட அதிகாரியிடம் ஒப்படைக்கப்படும். இது உரிய பிரதேச MOW பிரதிநிதியான PHI இனால் கண்காணிக்கப்படும். இலங்கை அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட ஒரு தீவில் பொலிஸ் அல்லது பாதுகாப்புப் படை உத்தியோத்தரினால் வசதிகள் மற்றும் ஒருங்கிணைப்புகள் மேற்கொள்ளப்பட்டு, அடக்கம் செய்யப்படும் பகுதிக்குரிய MOW இன் பிரதிநிதியான PHI மற்றும் இரண்டு உறவினர்கள் முன்னிலையில் அடக்கம் நடைபெறும்.

**போக்குவரத்துக்கு முன்னரான நடைமுறை:**

உறவினர்கள் முன்கூட்டியே ஒரு பிரேதப் பெட்டியை வழங்க வேண்டும். சடலம் புறப்படுவதற்கு முன்னர், தனிப்பட்ட பாதுகாப்பு அங்கி (PPE) அணிந்த, மருத்துவமனையினால் நியமிக்கப்பட்ட சுகாதார ஊழியர்கள், ஏற்கனவே ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து, உறவினர்கள் பார்வையிடுவதற்காக, உறவினர்கள் பார்க்கும் பகுதிக்கு சடலத்தைக் கொண்டு வர வேண்டும். சுகாதார சேவைகள் பணிப்பாளர் வழங்கிய வழிகாட்டல்களின்படி இக்கட்டத்தில் மாத்திரமே மத நடவடிக்கைகள் அனுமதிக்கப்படுகின்றன.

குறிப்பிட்ட (மத) நடவடிக்கைகள் முடிந்ததும், சடலத்தை மருத்துவமனையினால் நியமிக்கப்பட்ட சுகாதார ஊழியர்கள் (பொருத்தமான பாதுகாப்பு அங்கி PPE அணிந்து) எடுத்து வந்து, சடலத்தை உறவினர்கள் வழங்கிய பிரேதப் பெட்டியின் உள்ளே வைப்பர். பிரேதப் பெட்டியின் உள்ளே இருக்கும் சடலம் போக்குவரத்துக்கான வாகனத்தில் வைக்கப்பட்டு, கொழும்பில் சடலங்களைப் பெறுவதற்கு நியமிக்கப்பட்ட இடத்திற்கு கொண்டு செல்வதற்காக, MOW பிரதிநிதியான PHI மற்றும் பொலிசாரிடம் ஒப்படைக்கப்படும். சடலத்தை கொண்டு செல்லும் வாகனத்தின் சாரதி மற்றும் அவர்களுடன் செல்பவர்கள் அனைவரும், பொருத்தமான தனிநபர் பாதுகாப்பு அங்கியை அணிய வேண்டும். உரிய சுகாதார நிறுவனம்/களில் உறவினர்கள் அல்லது அங்கீகரிக்கப்படாத நபர்களால் புகைப்படங்கள், வீடியோ மற்றும் வீடியோ அழைப்புகளை எடுக்க அனுமதிக்கப்பட மாட்டாது.

**சடலத்தின் போக்குவரத்து:**

மரணம் நிகழ்ந்த மருத்துவமனைக்குச் சென்று, இறந்தவரை அடையாளம் கண்ட உறவினர்களில் இருவர், இரணைதீவில் அடக்கம் செய்யப்படுவதை பார்ப்பதற்காக, மறுநாள் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நாச்சிகுடா கப்பலில் செல்ல அனுமதிக்கப்படுவர். இது சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரின் ஒருங்கிணைப்புடன் இடம்பெற வேண்டும் (தொடர்பு விபரங்கள் கீழே காண்க).

ஆயினும், குறித்த நபர்கள் COVID19 நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளாக இருக்கக் கூடாது. தனிமைப்படுத்தப்பட்ட நபர்கள் இறுக்கமான வழிகாட்டல் மற்றும் MOW பிராந்திய தொற்றுநோயியல் நிபுணரின் அனுமதியின் கீழ் மாத்திரமே அனுமதிக்கப்படுவார்கள். அவர்கள் வழமையான தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை கடைபிடிக்க வேண்டும்.


இறுதியில், சடலத்துடனான பிரேதப் பெட்டி, அடக்கம் செய்யப்படும் பகுதியின் MOW பிரதிநிதியான PHI இனால் பெறப்படும். சடலத்தைப் பெற்ற பின்னர், நியமிக்கப்பட்ட அதிகாரிகளால் உரிய சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் சடலம் அடக்கம் செய்யப்படும் இடத்திற்கு கொண்டு செல்லப்படும். இதன் போது அடக்கம் செய்ய, பிரதேசத்திற்கு பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரியுடன் இரண்டு உறவினர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர். பிரதிநிதியான PHI மற்றும் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் அடக்கம் செய்யும் பணியைக் கையாள்வர். சவப்பெட்டி திறக்கப்படக் கூடாது என்பதுடன், உறவினர்கள்/ நெருங்கிய உறவினர்கள் எந்தவொரு சூழ்நிலையிலும் சவப்பெட்டியைக் கையாள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.


சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் பரிந்துரைக்கப்பட்ட, சுகாதார அமைச்சின் பிரதிநிதியை தொடர்பு கொள்வதற்கு:

வைத்தியர் அன்வர் ஹம்தானி
மருத்துவ தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர் மற்றும் COV1D19 செயற்பாடுகள் தொடர்பான சுகாதார அமைச்சின் ஒருங்கிணைப்பாளர்
(கையடக்க தொலைபேசி: 0771214131)

**றிஸ்வான் சேகு முகைதீன்...**

# தென் மாகாண தோட்டங்களில் அவல நிலையில் தமிழர்கள்





மலையக மக்கள் காலம் காலமாக தொடர்ச்சியான துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். வாழ்வில் பல்வேறு பிரச்சினைகளை அனுபவித்து வரும் பிரிவினராக மலையக மக்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றனர்.

பெரும்பான்மைச் சமூகத்தைப் பொறுத்த வரை பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகத்தை இலங்கையின் முக்கியமானதோர் சமூகப் பிரிவாகவோ, நாட்டின் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்யும் முக்கியமானதோர் பிரிவினராகவோ ஏற்றுக் கொண்டு அங்கீகரிக்கும் மனப்பக்குவம் இன்னும் ஏற்படவில்லை. மலையக சமூகத்தினரிடையே பாரிய மாற்றங்களையும் பிளவுகளை ஏற்படுத்தும் வகையிலேயே அரசியல் தலைமைகளும் செயற்பட்டு வருகின்றன.

மலையக தோட்டத் தொழிலாளர்களும் இந்நாட்டு மக்கள் என்பதை ஏற்றுக் கொள்வதில் இன்னும் அவர்களில் பலர் தயாராக இல்லை. அரசியல்வாதிகளில் பலர் கூட உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் போக்கினையே காட்டுகின்றனர்.

பிரதான மலையக அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதன் மூலம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நன்மைகளை பெற்றுக் கொடுத்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. குடியுரிமை, சம்பளம், கல்வி, சுகாதாரம் போன்ற விடயங்களை தொழிற்சங்கங்கள் பெற்றுக் கொடுத்துள்ளதை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது.

எனினும் தொழிற்சங்கங்கள் தமது அரசியல் பலத்தைப் பயன்படுத்தி மலையக மக்களின் நிலைமைகளை மேம்படுத்த இதை விடக் கூடுதலான பங்களிப்பினைச் செய்திருக்கலாம் என விமர்சிக்கப்படுகின்றது.

சிறுபான்மை மலையக மக்களில் பின்தங்கிய நிலையில் இருக்கும் ஒரு பகுதியினராக தென்மாகாண மலையகத் தமிழர்கள் காணப்படுகின்றனர். குறிப்பாக மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களில் இவர்கள் வாழ்கின்றனர். இம்மாகாணத்தில் மாத்தறை மாவட்டத்தில் மலையக மக்களின் வாழ்வாதார நிலை ஓரளவு விருத்தி நிலையை அடைந்திருந்தாலும் பொருளாதார, வாழ்வாதார ரீதியில் அம்மக்கள் இன்னும் முழுமையான அபிவிருத்தி நிலையை அடையவில்லை.

தென்மாகாணத்தில் 9 தமிழ்ப் பாடசாலைகளே காணப்படுகின்றன. இவற்றில் மாத்தறை மாவட்டத்தில் 6 பாடசாலைகளும், காலி மாவட்டத்தில் 3 பாடசாலைகளும் அமைந்துள்ளன. அதிபர், ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்பினால் அவை புதுப்பொலிவுடன் காணப்படுகின்றன. ஆசிரியர்களும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றனர். மாணவர்கள் கல்வி நிலையில் படிப்படியாகவே முன்னேற்றமடைந்து வருகின்றனர். இவற்றிலிருந்து பல மாணவர்கள் பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகள், தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மாத்தறை எனும் போது அங்கு பெருந்தோட்டத்துறையினர் வாழ்ந்து வருகின்றமை குறித்தும் சிந்திப்பது அவசியமாகும். இம்மக்கள் வாழ்வில் அவலங்களையே அனுபவித்து வருகின்றனர். குறிப்பாக போக்குவரத்து ரீதியிலான பிரச்சினைகள் அதிகம் உள்ளன. கல்வி அபிவிருத்தி, தமிழ் தேசியப் பாடசாலை மற்றும் பொருளாதார விருத்தி நிலைகள் என்பன தேவையானவையாக காணப்படுகின்றன.


காலி மாவட்டத்தில் எல்பிட்டிய, உடுகம மற்றும் மாத்தறை மாவட்டத்தில் தெனியாய பிரதேசத்தில் பெரும்பாலான பெருந்தோட்ட மக்கள் அதிகம் வாழ்கின்றனர். உலந்தாவ பகுதிகளிலும் மலையக மக்கள் செறிந்து வாழ்கின்றனர். இவர்கள் தேயிலை தோட்டத் தொழிலாளர்களாகவும் அன்றாடம் கூலித் தொழில் செய்பவர்களாகவும் இருந்து வருகின்றனர். எனினும் மத்திய மலையக பகுதியில் வாழ்கின்ற இரத்தினபுரி, நுவரெலியா, கண்டி, பதுளை மாவட்டங்களுடன் நெருங்கிய தொடர்பு இல்லாத நிலையில் அரசியல் அநாதைகளாக அவர்கள் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தென் மாகாணத்தைப் பொறுத்தவரையில் பெரும்பான்மையாக சிங்கள மக்கள் வாழ்கின்றமையால் அவர்களில் தமிழர்கள் குறிப்பிட்ட சிலராக இருப்பதனால், இம்மக்களின் கலாசாரம், நடை, உடை, பாவனை பெரும்பான்மை இனத்தவர்களின் சாயலில் காணப்படுகின்றன. இதனால் மலையக சமூகத்திற்கான தனித்துவமான சம்பிரதாயங்கள் மழுங்கி போகின்ற நிலை காணப்படுகின்றது.

மேலும் இப்பிரதேசத்தில் பெருந்தோட்டத்துறை சார்ந்த கம்பனிகள் நிர்வகிக்கின்ற தோட்டங்கள் மாத்திரமன்றி, தனியார் துறையினருக்கு சொந்தமான தோட்டங்களும் காணப்படுகின்றன.

மலையக அரசியல்வாதிகள் தமது சுயநல அரசியலைக் கைவிட்டு தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் மேம்பாட்டுக்காக கூடுதலான பங்களிப்பைச் செய்ய முன்வர வேண்டும். சாத்தியமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கிடைக்கும் வாய்ப்புகளை மலையக மக்களுக்கு நம்மை தரும் வகையில் பயன்படுத்த வேண்டும்.

பெருந்தோட்ட மட்டத்தில் விழிப்புணர்வுக் குழுக்கள், மேம்பாட்டுக் குழுக்கள் ஆகியவை அமைக்கப்பட வேண்டும். உள்ளூர் பொலிஸ் துறையின் அனுசரணை இதற்குப் பெறப்பட வேண்டும். ஏற்கனவே இருக்கின்ற அமைப்புகள் வலுப்படுத்தப்பட வேண்டும்.



## மலையக தொழிற்சங்கங்கள் உரிய கவனம் செலுத்துவது அவசியம்

**ச.யேசுதாசன்...**
*(தெனியாய)*

# பெண்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாழக் கூடிய சூழலை உருவாக்குவோம்!

சர்வதேச மகளிர் தினம் மார்ச் எட்டாம் திகதி ஆகும். உலக சனத்தொகை புள்ளிவிபரங்களின்படி பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எல்லா விதங்களிலும் ஆண்களைப் போலவே அறிவாற்றல் மிக்கவர்களாக, சிறந்த நிருவாகிகளாக, ஆராய்ச்சியாளர்களாக, அரசியல்வாதிகளாக பெண்கள் இன்று தங்களை வளர்த்துக் கொண்டுள்ளனர் என்பதையிட்டு நாம் பெருமையடைகிறோம்.

பிள்ளை வளர்ப்பு விடயத்தில் அதீத அக்கறை காட்டி ஒவ்வொரு பெண்ணும் தன்னை சிறந்த நிர்வாகியாகவும், வாழ்க்கைத் துணைவனான கணவனின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து செயற்பட்டு தன்னை அறிவாற்றல் மிக்கவளாகவும் குடும்ப சூழலில் ஒரு பெண் திகழ்கிறாள்.

1789 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 14ம் திகதி சுதந்திரத்துவம், சமத்துவம், பிரதிநிதித்துவம் என்ற கோரிக்கைகளை முன்வைத்து பிரெஞ்சுப் புரட்சியின் போது பாரிசில் உள்ள பெண்கள் போர்க்கொடி உயர்த்தினர். ஆணுக்கு நிகராக பெண்கள் இந்தச் சமுதாயத்தில் உரிமை பெற வேண்டும் என்றும் வேலைக்கு ஏற்ற ஊதியம், எட்டு மணிநேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, பெண் அடிமைத்தன விடுதலை என்ற கோரிக்கைகளை முன் வைத்து பாரிஸ் நகர தெருக்களில் பெண்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

அந்நாட்டு அரசன் 'இவர்களை அதிகாரம் கொண்டு அடக்குவேன்' என்றும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரை கைது செய்வேன் என்றும் மிரட்டினான். பெண்களுக்கு ஆதரவாக ஆண்களும் இதில் கலந்து கொண்டனர். அரச மாளிகையை நோக்கி ஊர்வலம் கொட்டும் மழையில் சென்றது. அரசனின் மெய்ப்பாதுகாப்பாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரை மிரட்டிய போது, மெய்ப்பாதுகாவலர் இருவரை கூட்டத்தினர் திடீரென்று தாக்கிக் கொன்றனர். இதனை எதிர்பாராத அரசன் அதிர்ந்து போனான். கோரிக்கைகளை கண்டிப்பாக பரிசீலிப்பேன் எனவும் உங்களுக்கு சாதகமாக அறிவிப்பேன் என்றும் சமாதானப்படுத்தினான். இயலாது போகவும் அரசன் லூயிஸ் பிலிப் முடிதுறந்தான்.

இந்தச் செய்தி ஐரோப்பிய நாடுகளிலும் ஜேர்மனி, இத்தாலியிலும் வேகமாகப் பரவியது. அங்கும் பெண்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

பிரான்சில், புருஸ்ஸியனில் இரண்டாவது குடியரசை நிறுவிய லூயிஸ் பிளாங்க் பெண்களை அரசவை ஆலோசனைக் குழுக்களில் இடம்பெறச் செய்யவும், பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கவும் ஒப்புதல் தந்தார். அந்த நாள் 1848 ஆம் ஆண்டு மார்ச் 8ம் திகதி. இந்த நாள்தான் சர்வதேச பெண்கள் தினமாக நினைவு கூறப்படுகிறது.

எமது நாட்டின் அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்பு முக்கியம் பெற்றிருந்தாலும், அதற்கான சமூக அங்கீகாரமும், சமத்துவமான நடத்துகையும், போதிய ஓய்வும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. பெண்களுக்கான உரிமை இல்லாதவிடத்தில் மனித உரிமைகள் இருக்க முடியாது. சீதனக் கொடுமையென்றும், மணமுடித்த கணவன் அநாதரவாய் விட்டுச் சென்றுள்ளானெனவும், பிள்ளைகளைப் பராமரிக்க முடியாமல் வாழ்க்கைச் சுமைகளை சுமந்து கண்ணீர் விட்டழுகின்ற பெண்களின் நிலை பற்றியும், கொரோனா தொற்று காலத்தின் போது வீட்டில் அனைவர்களும் முடங்கிக் கிடந்த போது பெண்ணானவள் இயந்திரம் போல் வேலை செய்து குடும்பச் சுமைகளுடன் உருக்குலைந்து போனதையும் நாம் கவனஞ் செலுத்த வேண்டும். தெற்காசியாவில் வாழும் ஒவ்வொரு இரண்டு பெண்களிலும் ஒருவர் தனது நாளாந்த வாழ்க்கையில் வன்முறைக்கு முகங்கொடுப்பதாக புள்ளி விபரங்கள் சுட்டிக் காட்டுகிறது.



**பெண்கள் விடயத்தில் சமுகத்தின் கடற்பாடுகள் என்ன?**

பெண்களின் கருத்துகளுக்கு மதிப்பளியுங்கள். வன்முறையை அனுபவிக்கும் ஒரு பெண்ணை மௌனமாக்கி சமுகத்தில் ஒதுக்காமல் அப்பெண்ணுக்கு உதவிடுவீர். பெண்களுக்கு ஏற்படுகின்ற இல்லத்து வன்முறைகளை இல்லாதொழிக்க எவ்வழியிலேனும் அவர்களுக்கு உதவ முன்வர வேண்டும். பெண்களின் உழைப்புக்கேற்றாற் போல் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

பெண்கள் ஒழுக்கமான அரசியலில் பிரவேசிப்பதை அங்கீகரிப்பதோடு, அவர்களின் கருத்துக்களை பல்வேறு மட்டங்களில் பரப்புவதற்கு வழிவகுத்துக் கொடுக்க வேண்டும்

## எதிர்வரும் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம்

பெண்களின் தனித்துவமான தேவைகள், வசதிகளை முன்னுரிமைப்படுத்தப்படல் வேண்டும். விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு கொண்ட சமூகத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

**குடும்பப் பெண்ணொருத்தி எதிர் நோக்கும் பிரச்சினைக்கான காரணிகள் வருமாறு:**

இலங்கை மற்றும் ஏனைய வளர்முக நாடுகளில் குடும்பப் பிரச்சினையானது நான்கு அடிப்படைக் காரணிகளைக் கொண்டு நடைபெறுகிறது.

கணவன், மனைவி இருவருக்கிடையே பொருளாதார சமமின்மையினால் என்றுமே கணவனின் பொருளாதாரத்தில் மனைவி தங்கியிருத்தல், தீர்மானம் எடுக்கின்ற அதிகாரத்தை ஆண்கள் கொண்டிருப்பதால் பெண்களின் கருத்துக்களை உள்வாங்காமை, குடும்பப் பெண்ணுக்கு உடலியல் வன்முறைகள் பயன்படுத்தப்படும் முறைமையினால் முரண்பாடு ஏற்படுகிறது. சமுதாயத்தினரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண் ஆதிக்க செயற்பாடுகளினால் உளரீதியாக பெண்கள் பாதிக்கப்படுகின்றனர்.

எத்தகைய பிரச்சினையென்றாலும் இச்சமூகம் பாதிக்கப்பட்ட பெண்கள் மீதே குற்றம் சுமத்துகிறது. எனவே பெண்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கான வசதிகளையும் ஒத்துழைப்புக்களையும் மனிதப் பிறவினர் அனைவர்களும் செய்ய வேண்டும் என்பதே மகளிர் தினச் செய்தியாகும்.

**அப்துல் அஸீஸ்...**
*பிராந்திய இணைப்பாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, கல்முனை*

## எந்த நடவடிக்கைகளுக்கும் ... (03ஆம் பக்கத் தொடர்)

உரிமை என்பது எப்போதும் மதிக்கப்படவேண்டும். பிரச்சினைகள் என்று வந்துவிட்டால் அவற்றை இருசாராறும் பேசித் தீர்த்துக்கொள்வதே ஜனநாயக பண்பு.

தோட்டத் தொழிலாளர்களை வன்முறைக்கு தூண்டிவிடும் செயற்பாடானது வெறுக்கத்தக்கது. அவ்வாறான அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்க பின்நிற்கப்போவதில்லை. எவ்வாறாயினும் தோட்ட அதிகாரிகள் தொழிலாளிகள் மீது வன்முறையை திணிக்கும் பிற்போக்குத் தனமான செயற்பாடுகளை நாம் ஒருபோதும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது எனவும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

## பாதுகாப்புச் செயலாளர்... (03ஆம் பக்கத் தொடர்)

பாதுகாப்பு அமைச்சுக்கு நேற்று முன்தினம் மாலை வருகை தந்த இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் ராகேஷ் குமார் சிங் பஹதோரியா பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ணவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதேபோன்று, அமெரிக்க பசுபிக் பிராந்திய விமானப் படைத் தளபதி ஜெனரல் கெனெத் எஸ். வில்ஸ்பெச், பாகிஸ்தான் விமானப் படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் முஜாஹித் அன்வர் கான் மற்றும் பங்களாதேஷ் விமானப் படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் மஸீஹ_ஸ்ஸமான் செர்னியபாத் ஆகியோருக்கும் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ணவுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. பாதுகாப்பு அமைச்சில் தனித்தனியாக நடைபெற்ற இந்த சந்திப்புக்களின் போது இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.

மேலும், இந்த சந்திப்பை நினைவு கூரும் வகையில் நினைவுச்சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இதேவேளை, இந்திய விமானப் படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் ராகேஷ் குமார் சிங் பஹதோரியா இராணுவ, கடற்படை மற்றும் விமானப் படைத் தலைமையகங்களுக்கும் விஜயம் செய்ததுடன் பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன ஆகியோரையும் தனித் தனியாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதுடன். இங்கு வழங்கப்பட்ட விஷேட மரியாதை அணிவகுப்புக்களையும் பார்வையிட்டார்.

பாகிஸ்தான், அமெரிக்க பசுபிக் பிராந்திய மற்றும் பங்களாதேஷ் விமானப் படைத் தளபதிகளும் நேற்று விமானப் படைத் தலைமையகத்திற்கு விஜயம் மேற்கொண்டதுடன் விஷேட சந்திப்புக்களை மேற்கொண்டனர். இவர்களுக்கு விஷேட மரியாதை அணிவகுப்பும் வழங்கப்பட்டன.

இலங்கை விமானப் படையின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல்வேறு நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கும் பொருட்டு இலங்கை விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரண விடுத்த அழைப்பின் பேரிலேயே இந்தியா, பாகிஸ்தான் அமெரிக்க பசுபிக் பிராந்திய மற்றும் பங்களாதேஷ் ஆகிய நான்கு நாடுகளின் விமானப் படைத் தளபதிகள் இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்கள் வசிக்காத பகுதிகளில்... (03ஆம் பக்கத் தொடர்)

அமைச்சர் கேஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்திருந்தார். எனினும் இரணைதீவில் கொவிட்19 தொற்று சடலங்களை அடக்கம் செயவதற்கு எதிராக அந்த பகுதிகளில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாராளுமன்ற விசேட... (03ஆம் பக்கத் தொடர்)

மற்றும் பணியிடங்களில் துயன்புறுத்தல்கள் உள்ளிட்ட அனைத்து வித பால்நிலை அடிப்படையிலான பாரபட்சங்கள் பற்றிய பெண்களின் குறைகளை கேட்டல், அனைத்து துறைகளிலும் மற்றும் அனைத்து மட்டங்களிலும் போதியளவான உள்ளூர் வளங்களின் ஒதுக்கீடு மற்றும் இலங்கையில் பாலின பங்குடமை மற்றும் சமத்துவத்தை (Gender Equity and Equality) மேம்படுத்துவதற்கான அணுகல் ஆகியவற்றை பரிசீலித்தல் மற்றும் அதற்காக முன்னிற்றல் உள்ளிட்ட 10 யோசனைகள் இந்த பாராளுமன்ற குழுவால் நடைபெற வேண்டும் என பெண் உறுப்பினர்கள் பிரேரித்துள்ளனர்.

## இரணைதீவில் இரண்டு... (03ஆம் பக்கத் தொடர்)

பல தரப்பினருக்கு இரணைதீவு மக்களால் மகஜர் கையளிக்கப்பட்ட போதும் இதுவரை சடலங்களை அடக்கம் செய்வதற்கான மாற்று இடம் தெரிவுசெய்யப்படவோ அல்லது இரணைதீவில் சடலங்களை அடக்கம் செய்யும் பணிகளை இடைநிறுத்துவதற்கான தீர்மானமோ எடுக்கப்படவில்லை.

## ஜப்பான், கொரிய... (03ஆம் பக்கத் தொடர்)

வெளிவிவகார அமைச்சில் மேற்படி சந்திப்பு இடம் பெற்றுள்ள நிலையில், அதன்போது நாடுகளுக்கிடையிலான நட்புறவை வலுப்படுத்தல், நாடுகளுக்கிடையிலான சமூக, அரசியல் மற்றும் அன்னியோன்ய ஒத்துழைப்புக்களை பலப்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## சுவர் இடிந்து வீழ்ந்து... (03ஆம் பக்கத் தொடர்)

உடனடியாக பள்ளமடு வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டனர். இதன் போது ஒரு பிள்ளையின் தந்தையான 27 வயதுடைய இளம் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார். மேலும் அவரது சகோதரன் மேலதிக சிகிச்சைக்காக மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மீன்பிடி வலைக்குள்... (03ஆம் பக்கத் தொடர்)

இதன்போது படகில் மீன்பிடி வலைக்குள் மிகவும் சூட்சகமான முறையில் மறைத்து எடுத்துவரப்பட்ட ஒரு கிலோ 21 கிராம் ஐஸ் போதைப்பொருளை கைப்பற்றியுள்ளனர். படகில் வந்த மூவரையும் கைது செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து அந்த பகுதியிலிருந்த இன்னுமொருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நால்வரும் ஊருமலை பகுதியைச் சேர்ந்தவர்களாவர். மேலதிக விசாரணைக்காக இவர்களை தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## மஹா சிவராத்திரி...

ஆலயங்களில் சிறப்புற நிகழ்த்த ஊக்கம் நல்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதற்கமைய இலங்கையில் இந்து சமய தமிழ் மக்கள் அதிகமாக வாழ்கின்ற பிரதேச செயலாளர் பிரிவுகளை மையப்படுத்தி, விசேட வழிபாட்டு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

அதன்போது சைவ சிறார்கள் ஆலயங்களுக்குச் சென்று சிவராத்திரி விரதத்தின் பெருமையை உணர்ந்து வழிபாடுகளில் ஈடுபடவும், இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பக்தி சார்ந்த கலை நிகழ்வுகளை நடத்தவும் ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

இந்நாளில், இந்து சமய அடியார்கள் மஹா சிவராத்திரி விரதத்தை பக்திபூர்வமாக அனுஷ்டித்து தெய்வீக அருள் ஒளி எங்கும் நிறைய வழிபாட்டில் ஈடுபடுவர்.

மஹா சிவராத்திரி விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்வதற்கு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பிரதேச செயலகங்களூடாக தெரிவுசெய்யப்பட்ட ஆலயங்களுக்கு பிரதமரின் ஆலோசனைக்கமைய நிதி உதவிகளும் வழங்கப்படவுள்ளன.

## சம்பிக்கவுக்கு எதிரான...

பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவினால் செலுத்தப்பட்ட ஜீப் ரக வாகனம் சந்தீப் சம்பத் குணவர்தன என்ற இளைஞர் மீது மோதிவிட்டு தப்பிச் சென்றமை, போலி சாட்சியம் சோடித்தமை, சாட்சிகளை மறைத்தமை உள்ளிட்ட 16 குற்றச்சாட்டுக்களின் கீழ் சட்ட மாஅதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் வலல்லேவின் முன்னிலையில் குற்றப்பத்திரம் வாசிக்கப்பட்டுள்ளது.

எனினும், பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை.

கொவிட் 19 தடுப்பூசியினை ஏற்றிக்கொள்வதற்காக இராணுவ வைத்தியசாலைக்கு செல்வதால் அவர், நீதிமன்றத்தில் ஆஜராகவில்லையென பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி நீதி மன்றத்தில் அறிவித்தார்.

இந்த விபத்தில் படுகாயமடைந்திருந்த சந்தீப் சம்பத் குணவர்தன நேற்று முதன்முறையாக நீதிமன்றத்தில் ஆஜராகிருந்தார்.

## பாடசாலை மாணவர்களுக்கு

# குறைந்த விலையில் அப்பியாச கொப்பிகள், காலணிகள்

**அமைச்சர் பந்துல குணவர்தன**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சந்தையில் விற்கப்படும் விலையை விட குறைந்த விலைக்கு அப்பியாசக் கொப்பிகளை பெற்றுக்கொடுக்கவும் 300 ரூபாவுக்கு குறைந்த விலையில் ஒரு சோடி பாடசாலை சப்பாத்துக்களை வழங்குவதற்கும் இந்த மாதம் முதல் நடவடிக்கை எடுக்கப்படுமென வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேற்படி பொருட்களை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் மூலம் இந்த மாதம் முதல் பெற்றுக் கொள்வதற்கு வழிவகை செய்யப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை அரசாங்கத்தினால் நிர்ணய விலை விதிக்கப்பட்டுள்ள பொருட்களை தனியாரிடமிருந்து மக்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் தனியார்துறை வர்த்தகர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

'மெகா சதொச' என்ற பெயரில் நாடளாவிய ரீதியில் பாரிய சதொச விற்பனை நிலையங்களை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துள்ள அமைச்சர் அரச நிறுவனங்களின் சேவைகளை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொடுப்பதற்கு 'ரஜவாச'மத்திய நிலையங்களை வவுனியா, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை போன்ற பிரதேசங்களில் ஆரம்பிப்பதற்கு இந்த வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். நேற்றையதினம் வர்த்தக அமைச்சில் நடைபெற்றுள்ள செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர் கடந்த பெப்ரவரி முதல் 27அத்தியாவசியப் பொருட்களுக்கு நிர்ணய விலை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த நடவடிக்கைகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஒரு கிலோ அரிசி 100 ரூப வைக்கு குறைவாகவும் சீனி ஒ ரு கிலோ 99 ரூபா வுக்கும் அத்துடன் ஏனைய பொருட்கள் நிர்ணய விலையில் விற்கப்பட்டு வருகின்றன இரண்டு மாதங்களுக்கு இந்த நிர்ணய விலை நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வர்த்தமானி அறிவிப்பு...

கூட்டு ஒப்பந்தத்திலிருந்து வெளியேறவுள்ளதாக முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

சம்பளம் வழங்கக்கூடிய அளவுக்கேற்பவே வேலை நாட்கள் தீர்மானிக்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது 15 நாட்களுக்கு மேல் வேலை வழங்கமுடியாதென்ற நிலைப்பாட்டிலேயே சம்மேளனம் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. எனினும், வேலை நாட்கள் குறைக்கப்படுவதை ஏற்க முடியாதென தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

வேலை நாட்களை உறுதிப்படுத்தும் வகையில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்படுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளன.

## பாராளுமன்றில் எதிர்வரும்...

விதியும் வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதி மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான 2 கட்டளைகள் பற்றியும் மு.ப. 11.00 முதல் பி.ப. 3.30 மணி வரை விவாதம் நடாத்த பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் கட்சித் தலைவர்கள் தீர்மானித்ததாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார். இந்நாட்டில் பெண்களுக்கு எதிராக இடம்பெற்ற பாகுபாடுகள் மற்றும் பெண்களின் உரிமை மீறல்களை கண்டறிந்து பாலின சமத்துவத்தை உறுதி செய்யக் கூடிய பரிந்துரைகளை வழங்குவதற்கு பாராளுமன்ற விசேட குழுவொன்றை அமைக்குமாறு பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் முன்வைத்துள்ள பிரேரணையும் சபையில் சமர்பிக்கப்படவுள்ளதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

## அமைச்சரவை உபகுழுவின்...

அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டுள்ளனர். அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, உதய கம்மன்பில, ரமேஷ் பத்திரன, பிரசன்ன ரனதுங்க மற்றும் ரோஹித அபேகுணவர்தன ஆகியோர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் ஏனைய உறுப்பினர்கள் என்பதுக் குறிப்பிடத்தக்கது.

## ரஷ்ய தடுப்பூசிக்கு...

பயன்படுத்திக் கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தடுப்பூசிக்கு தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். ஏற்கனவே இலங்கையில் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனகா தடுப்பூசிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் தற்போது ஸ்புட்னிக் வீ தடுப்பூசிக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## இரணைதீவில் சடலங்களை...

அனுமதிக்கப்படுவர். இதன்போது முழுமையான சுகாதார பாதுகாப்பு முறைறைகளை அவர்கள் கட்டாயம் கடைக்கப்பிடிக்கப்படும்.

அதன்படி, ஒவ்வொரு நாளும் காலை 5.30 மணிக்கு இரணைதீவுக்கு கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணித்தவர்களின் சடலங்கள் எடுத்துச் செல்லப்படவுள்ளன.

அதே போன்று, சடலங்களை அடக்கம் செய்யும் போது அல்லது சவப்பெட்டியில் சடலத்தை வைக்கும் போது புகைப்படம் அல்லது காணொளி பதிவு செய்தல் முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சடலம் சவப்பெட்டியில் வைக்கப்பட வேண்டுமெனவும் எக் காரணத்துக்காகவும் அதனை திறப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாதெனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தனவின் கையொப்பத்துடன் இந்த வழி காட்டல்கள் நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்டன.

அடக்கம் செய்வதற்கான புதிய சுகாதார வழிகாட்டல்கள் வருமாறு,

- மரணித்தவர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் கௌரவம் சடலத்தை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படும் செயல்முறை முழுவதும் மதிக்கப்படல்.
- சுகாதார அதிகாரிகளால் தீர்மானிக்கப்பட்ட, சடலத்தை அடக்கம் செய்ய அல்லது தகனம் செய்வதற்கான இடங்கள் மட்டுமே இறுதிக் கிரியை தொடர்பில் பயன்படுத்தப்படல்.
- பொறுப்பளிக்கப்படும் சுகாதார ஊழியர்கள் மட்டுமே சடலங்களை கையாள வேண்டும்.
- சடலம் அடக்கம் செய்யப்படவோ, தகனம் செய்யப்படுவதற்காகவோ உறவினர்களிடம் ஒப்படைக்கப்படல் கூடாது.
- சடலத்துடன் தொடர்புபடும் அனைவரும், நிலையான தொற்று தடுப்பு, கட்டுப்பாடு மற்றும் முன்னெச்சரிக்கைகளை கடைப்பிடிப்பது உறுதி செய்யப்படல் வேண்டும். அத்துடன் அவர்களுக்கான போதுமான அளவு சுகாதார பாதுகாப்பு சாதனங்கள் தொடர்ச்சியாக வழங்கப்படல் வேண்டும்.
- அடக்கம் அல்லது தகனம் செய்வதற்கான சடலங்களை ' எம்பாம்' செய்தல்.
- சடலத்தை அகற்றுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 24 மணி நேரத்தில் அடக்கம் அல்லது தகனம் நடைபெற வேண்டும்.
- சடலங்களை பார்ப்பது சுகாதார வசதிகளுடன் கூடிய இறுதிக் கிரியை நடைபெறும் இடங்களில் மட்டுமே அனுமதிக்கப்படல்.
- குடும்பத்தில் 05 பேர் மட்டுமே சடலத்தை பார்க்க அனுமதிக்கப்படல்.
- மத அனுஷ்டானங்களை முன்னெடுக்க இரு மத குருமாரை அனுமதிக்கலாம்.
- அதிகபட்சம் சடலத்தை பார்வையிட 10 நிமிடங்கள் வழங்க வேண்டும். இவை உரிய அதிகாரிகளின் மேற்பார்வையில் நடைபெற வேண்டும்.
- மரணித்தவர்களை அடக்கம் செய்வதற்கான பிரேத பெட்டிகள் கண்டிப்பாக மரணித்தவர்களின் தரப்பினால் வழங்கப்படல் வேண்டும்.
- பிரேத பெட்டிகள் எந்த காரணத்துக்காகவும், அடக்கம் அல்லது, தகனம் செய்யப்படும் இடங்களில் திறக்கப்பட மாட்டாது.
- அடையாளம் உறுதி செய்யப்படாத சடலங்கள் கண்டிப்பாக தகனம் செய்யப்படும்.
- தகனம் செய்யப்படும் சடலங்களின் சாம்பலை உறவினர்களுக்கு அவர்களது கோரிக்கைக்கு அமைய வழங்க முடியும்.

என்றும் இந்த வழிகாட்டல் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சாணக்கியன் M.P யின்...

அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தயாராக இருக்கின்றது. சாணக்கியனின் முதலமைச்சர் கனவு பலிக்காதென கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் ப.சந்திரகுமார் தெரிவித்தார்.

நேற்று (4)மாவட்ட அலுவலகத்தில் வைத்து இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் இப்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக அறிவித்துள்ள சாணக்கியன் சிறுபான்மையின முஸ்லிம் மக்களின் வாக்குகளினால் முதலமைச்சராவார் என்பது வாயால் வடை சுடும் நிலைப்பாடாகும்.அது நடைபெறாது.

கிழக்கு மாகாண சபைத்தேர்தல் நடைபெற்றால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சிறுபான்மையின மக்களின் ஏகோபித்த வாக்குகளினால் கிழக்கு மாகாண சபையை கைப்பற்றி இழந்த அபிவிருத்தியை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மேற்கொள்வதற்கு தயாராக இருக்கின்றது.தமிழர்களின் பூர்வீக பிரதேசம், பூர்வீக சொத்துக்களை, தமிழர்களின் அடிப்படை உரிமைகளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடாக பாதுகாப்பதுதான் கிழக்கு தமிழர்களுக்கு நிரந்தர இருப்பாக இருக்கும்.

தமிழ்தேசிய தலைமைகள் கிழக்கு தமிழர்களின் தலைமைத்துவ இருப்பை பாதுகாக்காத காரணத்திலும், கிழக்கு பிரதேசத்தை சகோதர இனங்களுக்கு தாரைவார்த்து கொடுத்ததனாலும் கடந்த கிழக்கு மாகாண ஆட்சி தமிழர்களின் இருப்பு கேள்விக் குறியாகி இருந்தது.

இதனை ஆட்சிக்கு வந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கிழக்கு தமிழர்களின் இருப்பை பாதுகாத்தது என தெரிவித்தார்.

தமிழர்களால் உருவாக்கப்பட்ட கிழக்கு மாகாண சபையின் ஆட்சி அதிகாரங்கள் தமிழர்களின் கைகளில் இருந்து பறிக்கப்பட்டு சிறுபான்மையின மக்களினதும்,அரசியல்வாதிகளின் கைகளுக்கு சென்று கொண்டிருக்கையில் ஆட்சிக்கு வந்த எமது பொதுஜன பெரமுன அரசாங்கம் அதிர்ஷ்டவசமாக ஆட்சி அதிகாரங்களை பற்றிக் கொண்டது.

இதனால் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் காப்பாற்றப்பட்டார்கள்.

எமது ஆளும் கட்சியில் இரண்டு பேரை பாராளுமன்றம் அனுப்பியும்,அமைச்சராக்கியும் தமிழர்களின் கைகளுக்கு இழந்த அபிவிருத்தியை பெற்றுக் கொடுத்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## இரணைதீவை தெரிவு...

வைத்து இந்த இரு சமூகங்களையும் மோதவிடுவதற்காக மூட்டிவிடுகிறார்கள். இது மனிதாபிமானமேஅல்ல.

இந்த அனைத்து பழிபாவங்களையும் அரசுக்கு ஆதரவாக 20க்கு கைதூக்கியவர்கள் பொறுப்பேற்கவேண்டுமென ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் எம். ரி. ஹசன் அலி தெரிவித்தார்.

முஸ்லிம்களின் சடலங்கள் எரிப்பு நாட்டில் பாரிய பிரச்சினையாக மாறியிருந்தது.முஸ்லிம்களை பழிவாங்கும்நோக்கில் வேண்டுமென்றே இதனை இழுத்தடித்தனர். பலத்த முயற்சிகள் அழுத்தங்களின்பின் அடக்கம் செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கிறது.

இரணைதீவில் அடக்கம் செய்வதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென்ற கருத்து வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு பல தரப்பிலிருந்தும் எதிர்ப்புக்கள் எழும்ப ஆரம்பித்திருக்கின்றன. அவை நியாயமானவை.

தமிழ்சகோதரர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பது நியாயமானது. அது அவர்களது உரிமை, பிழையல்ல. சிங்களப் பிரதேசத்தில் அடக்கம் செய்வதற்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கலாமென்றால் தமிழ் மக்கள் ஏன் எதிர்க்கமுடியாது? என்று கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் கூறுகையில்:

எமது சடலங்களை அடக்க நாம் ஏற்கனவே இறக்காமம், சம்மாந்துறை, ஓட்டமாவடி என்று பல இடங்களை அடையாளப்படுத்தியிருந்தோம். அதையெல்லாம் விட்டுவிட்டு எங்கோஉள்ள இரணைதீவுக்குகொண்டு செல்வதன் மர்மம் என்ன? நிபுணர்குழுவே தண்ணீரில் இவ்வைரஸ் பரவாது என்று கூறியிருக்கிறது. அப்படியென்றால் ஏனிந்த சுத்துமாத்து?

முஸ்லிம்களுடைய சடலங்களை முஸ்லிம் மக்கள் வாழுகின்ற அவர்களுடைய சொந்த ஊரிலேயே அடக்கம் செய்வதை முஸ்லிம் மக்கள் எதிர்பார்க்கின்றனர். அல்லது அந்தந்த மாவட்டங்களில் உள்ள அடக்குவதற்கு பொருத்தமான இடங்களில் அடக்கம் செய்யப் படுவதையே முஸ்லிம் மக்கள் விரும்புகின்றனர்.

இதனால் தொற்று நோய் பரவுவதாக இருந்தால் முதலில் இங்குள்ள மக்களையே அது பாதிக்கும். இதனை அம்மக்கள் பொறுப்பேற்பதற்கு தயாராக இருக்கின்றனர்.

அதற்கு ஏற்றாற்போல் அனுமதி கிடைத்தால் முஸ்லிம் மக்கள் மகிழ்ச்சியடைவர்.

## இரணைதீவு பொருத்தமான...

இணைத்தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

மருதங்கேணி பிரதேசத்தில் (04) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்; இரணைதீவு மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு தற்போது தான் படிப்படியாக வாழ்வாதார ரீதியாக முன்னேறி வருகின்றனர். அண்மையில் இரணைதீவில் கடலட்டை உற்பத்திக் கிராமம் ஒன்றும் கடற்தொழில் அமைச்சர் ஊடாக உருவாக்கப்பட்டுள்ளது.

அம் மக்கள் மீளவும் தமது வாழ்க்கையை கட்டியெழுப்ப முயற்சிக்கும் வேளையில் இவ்வாறு சடலங்கள் அடக்கம் என்பது அந்த பகுதிக்கு பொருத்தமற்றது.

எனவே இது சம்பந்தமாக நிச்சயமாக அரசாங்கத்திற்கு எங்கள் கருத்துக்களைத் தெரிவித்து மறுபரிசீலனை செய்யக் கோர தயாராக உள்ளோமென மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

## தொழிலாளர்களுக்கு 300 நாட்கள்...

பார்த்துக் கொண்டிருக்காது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபாவை வழங்க சம்பள நிர்ணய சபை ஊடாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், வேலை நாட்களைக் குறைக்க அனுமதிக்க முடியாதெனவும் அவர் கூறினார்.

பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் ரொஷான் இராஜதுரையின் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் செந்தில் தொண்டமான் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு ஒருபோதும் அடிபணியப் போவதில்லை. முதலாளிமாரின் இவ்வாறான கடும்போக்கான செயற்பாடுகளே இன்று தொழிலாளர்களுக்கும், முகாமையாளர்களுக்குமிடையே மோதல்களை உருவாக்கியுள்ளன. தற்போது இது தொடர்பான முறைப்பாடுகள் பிரதமர், ஜனாதிபதி வரை எடுத்துச் செல்லப்படுகின்றன. இவற்றுக்கு கம்பனிகளே காரணமாகும். எனவே, தொழிலாளர்களுக்குரிய முறையான வேலை நாட்களை வழங்க வேண்டியது கம்பனிகளின் பொறுப்பு. இல்லையெனில், வேலை வழங்காத நாட்களில் தோட்ட முகாமையாளர்கள் கொழும்பிலேயே இருந்து கொள்வது உகந்ததாக இருக்கும். கம்பனி பக்கம் தவறுகளை வைத்துக் கொண்டு அவற்றை தொழிலாளர் மீது திணிக்கக் கூடாது.

# ஜனாஸாக்களை முஸ்லிம் பிரதேசங்களில் அடக்கம் செய்ய அரசு முன்வர வேண்டும்

## கல்முனை மாநகர முதல்வர் வேண்டுகோள்

(பெரியநீலாவணை விசேட நிருபர்)

கொரோனா தொற்றினால் மரணமடையும் முஸ்லிம்களின் ஜனாஸாவை முஸ்லிம் பிரதேசங்களில் உள்ள மையவாடிகளில் அல்லது அந்தந்த மாவட்டங்களில் உள்ள பொருத்தமான இடங்களில் அடக்கம் செய்யப்பட அரசு முன்வர வேண்டும் என கல்முனை மாநகர சபையின் முதல்வர் ஏ.எம்.றக்கீப் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபை முதல்வர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் (03) ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு விளக்கமளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,



ஜனாஸாக்களுடைய எரிப்பு நாட்டில் பாரிய பிரச்சினையாக மாறியிருந்தது. எனினும் அரசாங்கம் ஜனாஸாவை அடக்கம் செய்வதற்கு அப்போது அனுமதி வழங்கவில்லை. இதனை அடிப்படையாகக் கொண்டே முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தார்கள். இந்நிலையில் தற்போது கொரோனாவால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கிறது. ஜனாஸாக்களை எங்கே அடக்குவது? என்ன முறையில் அடக்குவது? போன்ற சுற்றுநிருபங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. இன்னிலையில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வல இரணைமடுவில் அடக்கம் செய்வதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற கருத்தை வெளியிட்டிருக்கின்றார். இதற்கு பல தரப்பிலிருந்தும் எதிர்ப்புக்கள் எழும்ப ஆரம்பித்திருக்கின்றன.

முஸ்லிம்களுடைய ஜனாஸாக்களை முஸ்லிம் மக்கள் வாழுகின்ற அவர்களுடைய சொந்த ஊரிலேயே அடக்கம் செய்வதை முஸ்லிம் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அல்லது அந்தந்த மாவட்டங்களில் உள்ள அடக்குவதற்கு பொருத்தமான இடங்களில் முஸ்லிம் ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப் படுவதையே முஸ்லிம் மக்கள் விரும்புகின்றார்கள். இதனால் தொற்று நோய் பரவுவதாக இருந்தால் முதலில் இங்குள்ள மக்களையே அது பாதிக்கும். இதனை அம்மக்கள் பொறுப்பேற்பதற்கு தயாராக இருக்கின்றனர். அதற்கு ஏற்றாற்போல் அனுமதி கிடைத்தால் முஸ்லிம் மக்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு ஜனாஸாவை வைத்து அரசியல் செய்ய வேண்டிய எந்தத் தேவையும் கிடையாது. மக்களின் நலனுக்காகவும் தேவைகளுக்காகவும் இணக்கப்பாட்டு அரசியலை இந்த கட்சி அவ்வப்போது வெளிப்படுத்தியிருக்கிறது. மக்களுடைய தேவைகள், நலன்களை கருத்தில் கொண்டு சில வேளைகளில் எதிர்ப்பை தெரிவிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டால் அவற்றை மேற்கொண்டும் வந்திருக்கின்றோம்.

மக்கள் நலன் சார்ந்ததாகவே எமது அரசியல் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றோம். 20 ஆவது திருத்தத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்பது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் அல்ல. 20ஆவது திருத்தத்திற்கு வாக்களிக்கும் விவகாரம் பாராளுமன்ற குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டது. அந்த குழு எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் ஆதரவாக வாக்களித்திருக்கிறார்கள். முஸ்லிம் மக்களுடைய ஜனாஸாக்கள் எரிக்கப்படாமல் அடக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்கப்பட்டது என்று தெரிவித்தார்.

# திருக்கோவிலில் ஆற்றுமணல் இல்மனைற் அகழ்வுக்கு தடை

## பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்




(காரைதீவு குறூப் நிருபர்)

திருக்கோவில் பிரதேசத்தில் ஆற்றுமணல், இல்மனைற் அகழ்வுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. திருக்கோவில் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனின் ஏற்பாட்டில் மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டபிள்யு.டீ.வீரசிங்கத்தின் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் புதன்கிழமை (3) இடம்பெற்றது.

இக்கூட்டத்தில், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் ஆர். கமல்ராஜன், அம்பாறை மாவட்ட பொதுஜன பெரமுன இணைப்பாளர் சாந்தலிங்கம், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கி.ஜெயசிறில் ஆகியோரின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

திருக்கோவில் பிரதேசத்தில் 03 பாரிய நீர்ப்பாசனக் குளங்களும் 75 விவசாயக் குளங்களும் உள்ளன. குறித்த நீர்ப்பாசன விவசாயக் குளங்களை புனரமைப்புச் செய்ய வேண்டும் என பிரதேச செயலாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவற்றில் முதலில் 05 குளங்களை புனரமைப்புச் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆறுகளைத் தோண்டுவது என்ற போர்வையில் மணல் அகழ்வது தடைசெய்யப்பட வேண்டும் என்ற பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டு இனிமேல் அப்படியான தேவை வரும்போது உள்ளூர் சமுர்த்தி மக்களைக் கொண்டு அகழ்வதென தீர்மானிக்கப்பட்டது. பிரதேசத்திலுள்ள 25 கிலோ மீற்றர் விவசாயப் பாதைகள் புனரமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இல்மனைற் அகழும் திட்டத்தை மக்கள் விரும்பவில்லையென பிரதேச செயலர் கூறியபோது அத்திட்டத்திற்கு தடைவிதிப்பதென தீர்மானிக்கப்பட்டது. மக்களது காணிகள் பல வனபரிபாலனத்துக்கு எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு இராஜாங்க அமைச்சர் விமலவீரதிசாநாயக்க தலைமையில் கூட்டத்தை நடாத்தி முடிவெடுப்பது என தீர்மானமாகியது.



மூதூர் துறைமுக அக்கரைச்சேனை நீரோடைக்கு மேல் இடப்பட்ட வீதி சேதமுற்ற நிலையில் காணப்படுகின்றது. இதனை புனரமைக்குமாறு அப் பகுதி மக்கள் வேண்டுகின்றனர். (படம் ;மூதூர் தினகரன் நிருபர்)

# உட்செல்லத் தடை எனும் அறிவிப்பு பலகையால் குச்சவெளி மக்கள் அதிர்ச்சி

கந்தளாய் தினகரன் நிருபர்

தொல்பொருள் எச்சங்கள் இருப்பதால் பொதுமக்கள் உட்செல்லத் தடை எனும் அறிவிப்பு பலகையொன்று புல்மோட்டை பிரதான வீதி தொடுவாய் எனும் இடத்தில் திடீரென நாட்டப்பட்டுள்ளமை தொடர்பில் குச்சவெளி மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். இது தொடர்பாக பொதுமக்கள் கருத்து தெரிவிக்கையில்:

கடந்த 50 ஆண்டுகளாக தமது பராமரிப்பில் இருந்த காணிகளை கபளீகரம் செய்யும் முயற்சி இது என்றும், இந்த காணி அமைவிடத்தில் தொல்பொருளுக்கான எந்தவிதமான எச்சங்களும் புலப்படவில்லையென்றும் சுட்டிக் காட்டுகின்றனர். குச்சவெளி ஜாயாநகர் சல்லிமுனை பகுதி குடியிருப்பு மற்றும் விவசாய காணிகள் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தால் அரச காணி என அடையாளமிடப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தன்னிடம் முறையிட்டுள்ளதாக திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

# ஐந்து சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

றொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலைபுறா மலைப் பகுதியில் வெடிபொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட ஐந்து சந்தேக நபர்களையும் எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதவான் சமீலா குமாரி ரத்னாயக்க முன்னிலையில் புதன்கிழமை (03) குறித்த சந்தேக நபர்களை ஆஜர்படுத்திய போதே அவர் உத்தரவிட்டார். திருகோணமலை கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட சோதனையின் போது வெடிபொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளை பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கல்முனை பிரதேச செயலகத்தின் புதிய கணக்காளர் கடமையேற்பு



(பெரியநீலாவணை விசேட நிருபர்)

கல்முனைப் பிரதேச செயலகத்தின் புதிய கணக்காளராக யு.எல். ஜவாஹிர் (02.03.2021) தனது கடமையினைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

மருதமுனையை சேர்ந்த இவர் இதற்கு முன்னர் இறுதியாக நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் கணக்காளராக கடமையாற்றிய நிலையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை கல்முனை பிரதேச செயலகத்தில் கணக்காளராக கடமையாற்றிய வை.கபீபுல்லா கல்முனை வலயக் கல்வி அலுவலகத்திற்கும், வலயக் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றிய றிஸ்வி யஹ்சர் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்கும் இடம் மாற்றம் பெற்றுச் செல்லவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

03.03.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 717,664
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 49,514,938.00
சுப்பர் பரிசு ரூ.18,899,228.00 01 ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசு 02 ரூ. 100,000.00 பரிசுகள் 32
www.nlb.lk
NLB NATIONAL LOTTERIES

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 2710 சீட்டிழுப்பு திகதி 03 / 03 / 2021
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 14 17 59 70

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 177 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 384 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10,036 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6,673 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 166,441 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 30,389 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 214,109
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 7,745,120.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,721,568.80
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324
Fax: 0114 663 416 Web: www.nlb.lk

Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம்: 780
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 03.03.2021
ஆங்கில எழுத்து C சுப்பர் இலக்கம் 23 வெற்றி இலக்கங்கள் 04 42 53 73

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 05 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 88 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 233 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 5,585 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3,679 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 91,322 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 16,798 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 120,185,324.40
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 20,938,204.80
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 32,869,777.60
இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 3,572,560.00
தேசிய லொத்தர் சபை www.nlb.lk

தன நிதானய
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி - 03/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் - 452
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 09 29 57 66
ஆயிரம் முறை 3886

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 04 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 89 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 213 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 5,348 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 3,565 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 89,815 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 16,852 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,894,040.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 116,018
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 85,499,415.20
• ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
• பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
• சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

சீட்டிழுப்பு இலக்கம் 4415 உத்தியோகபூர்வ முடிவுகள்
மஹஜன சம்பத
திகதி: 03-03-2021
வெற்றி எழுத்து H வெற்றி இலக்கங்கள் 1 0 8 9 5 8
பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | H 1 0 8 9 5 8 | ரூபா. 18,899,228.00/- | 01 |
| 1ஆம் பரிசு | 1 0 8 9 5 8 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 0 8 9 5 8 | ரூபா. 100,000/- | 12 |
| 3ஆம் பரிசு | 8 9 5 8 | ரூபா. 10,000/- | 127 |
| 4 ஆம் பரிசு | 9 5 8 | ரூபா. 1,000/- | 1,277 |
| 5ஆம் பரிசு | 5 8 | ரூபா. 100/- | 12,762 |
| 6ஆம் பரிசு | 8 | ரூபா. 20/- | 126,556 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 1 0 8 9 5 | ரூபா. 10,000/- | 12 |
| 8ஆம் பரிசு | 1 0 8 9 | ரூபா. 1,000/- | 128 |
| 9ஆம் பரிசு | 1 0 8 | ரூபா. 100/- | 1,286 |
| 10ஆம் பரிசு | 1 0 | ரூபா. 50/- | 12,671 |
| 11ஆம்பரிசு | H | ரூபா. 20/- | 50,551 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 30,474,718.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை
32, தேஷமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416. www.nlb.lk

JATHIKA SAMPATHA ஜாதிக சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு இலக்கம் 1101 திகதி 03.03.2021
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 4 9 0 9 0 1
வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| | இலக்கங்கள் | பரிசுத்தொகை | வெற்றியாளர்கள் |
|---|---|---|---|
| 01 பரிசு | 4 9 0 9 0 1 | ரூ. 1,000,000.00 | பரிசு 01 |
| 02 பரிசு | 9 0 9 0 1 | ரூ. 100,000.00 | பரிசு 03 |
| 03 பரிசு | 0 9 0 1 | ரூ. 10,000.00 | பரிசுகள் 29 |
| 04 பரிசு | 9 0 1 | ரூ. 1,000.00 | பரிசுகள் 319 |
| 05 பரிசு | 0 1 | ரூ. 100.00 | பரிசுகள் 3,130 |
| 06 பரிசு | 1 | ரூ. 20.00 | பரிசுகள் 31,300 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| | இலக்கங்கள் | பரிசுத்தொகை | வெற்றியாளர்கள் |
|---|---|---|---|
| 07 பரிசு | 4 9 0 9 0 | ரூ. 10,000.00 | பரிசு 04 |
| 08 பரிசு | 4 9 0 9 | ரூ. 1,000.00 | பரிசுகள் 33 |
| 09 பரிசு | 4 9 0 | ரூ. 200.00 | பரிசுகள் 305 |
| 10 பரிசு | 4 9 | ரூ. 100.00 | பரிசுகள் 3,130 |
| 11 பரிசு | தனுசு | ரூ. 20.00 | பரிசுகள் 26,135 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | ரூ. 200.00 | பரிசுகள் 54 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 3,828,500.00
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டுழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
அடுத்த சனிக்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 14,987,563.70
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 4607000, 011 2324324
பக்ஸ்: 011 4669416
Web : www.nlb.lk

# கேள்வி கோரல் அழைப்பு

## தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பத்தரமுல்ல

### தலைமையகத்தின் மற்றும் அல்பிரட் கிரசன்ட் இல. - 16/7, அலுவலக வளாகத்திற்கான சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகள் மற்றும் பூங்காப் பராமரிப்பு சேவையை பெற்றுக்கொள்ளும் பெறுகை

**ஒப்பந்த இல: DCS/AC/PRO/04/01/2021**

### தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் 2021/ 22 ஆண்டிற்கான கீழ்க்காணுமாறு சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகள் மற்றும் பூங்காப் பராமரிப்பு சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தகைமை கொண்ட தகுதியான கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | பெறுகையின் பெயர் | கேள்விப் பிணைப் பெறுமதி | கேள்விக்கு முன்னரான கூட்டம் மற்றும் சுற்றாடல் பரிசீலனை | விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் மற்றும் கேள்விகள் திறத்தல் |
|---|---|---|---|---|
| DCS/AC/PRO/04/01/2021 | தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் பத்தரமுல்ல மற்றும் 16/7 அலுவலக வளாகத்திற்கான சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவை மற்றும் பூங்காப் பராமரிப்பு சேவையை பெற்றுக்கொள்ளும் பெறுகை | ரூ. 100,000/- | 2021.03.18 மு.ப. 10.00 இற்கு தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் 4ஆம் மாடி, கூட்ட மண்டபம், 306/71, பொல்துவ வீதி, பத்தரமுல்ல | 2021.03.29 மு.ப. 10.00 இற்கு தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2ஆம் மாடி, பெறுகைப் பிரிவு, இல. 306/7, பொல்துவ வீதி, பத்தரமுல்ல. |

1. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி முறைமை (NCB) மூலம் நடைபெறும்.
2. ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடைய கேள்விதாரர்களுக்கு தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் கணக்காளர் (நிதி - 1) மூலம் (011-2147007) மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், கீழே தரப்பட்டுள்ள முகவரியில் 2021 மார்ச் 05 முதல் 2021 மார்ச் 28 வரை வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் கேள்வி கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
3. எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்து மற்றும் மீளளிக்கப்படாத 4,000/- தொகையை இத்திணைக்களத்தின் காசாளரிடம் காசாக மாத்திரம் செலுத்தி கேள்வி கோரல் ஆவணத் தொகுதியை பெற்றுக்கொள்ளலாம்.
4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை கீழ்க்காணும் முகவரிக்கு 2021.03.29 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விதாரர்களின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்,**
**"சங்கியான மந்திரய"**
**இல. 306/71, பொல்துவ வீதி, பத்தரமுல்ல.**
**தொ.பே - 011-2147007**
2021.03.02

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுகாதார அமைச்சு

## போதனா வைத்தியசாலை – கொழும்பு தெற்கு, களுபோவில

கீழே குறிப்பிட்டுள்ள தகுதித்தன்மை தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்யும் வளங்களிலிருந்து பின்வரும் வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை களுபோவில கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை பணிப்பாளரின் சார்பாக, களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, பிரதேச பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| இல. | வேலை விளக்கம் | விலை மனு இல. | தகுதித்தன்மை தேவைப்பாடுகள் | விலைமனுப் பிணை (ரூபாவில்) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபாவில்) | விலைமனு மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | Supplying and laying of Vinyl flooring in proposed DSA Unit | 4/2021 | **Three years' experience** in supplying and laying of vinyl flooring | 14,000.00 | 2,000.00 | 2021.03.24 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| 2. | பணிப்பாளரின் அலுவலக நீடிப்பு | 5/2021 | சி-08 அல்லது மேற்பட்டது (CIDA வகுதி) கட்டிடம் | 72,000.00 | 1,000.00 | மேற்குறிப் பிட்டவாறு |
| 3. | 24 ஆம் இலக்க வாட்டிற்கு வினைல் தாள்களை வழங்கல் மற்றும் நிறுவுதல். | 6/2021 | சி-08 அல்லது மேற்பட்டது (CIDA வகுதி) கட்டிடம் | 43,000.00 | 1,000.00 | மேற்குறிப் பிட்டவாறு |

1. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் மூலமாக நடாத்தப்படும்.
2. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை நிருவாக கிளையிலிருந்து பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரை பரீட்சிக்கலாம்.
3. ஆவண வழங்கல் ஆரம்ப திகதியாகிய 2021.03.08 ஆம் திகதியிலிருந்து 2021.03.23 வரையும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறைகள் நீங்கலாக மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
4. விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் 2021.03.24 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாகவே களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை பணிப்பாளரின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
5. விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மூடப்பட்டு விரைவாகவே திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,**
**களுபோவில.**
**0112 763 064**
**0112 763 762**


**The Housewives' companion Classifieds on Daily News**


# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

**122**

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

WP AAU-4917 Bajaj, 2014, Threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெ லிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 3. தொ.பே. 0171121081 0. 016910

## வர்த்தகம்

**218**

**மருத்துவ பொருட்கள்/ சிகிச்சை**

உடல் பருமன கூட்டுதல், குறைத்தல், புகை மது பாவனை நிறுத்துதல்., அதிக நித்தி ரை, நித்திரையின்மை, மனச் சோர்வு, கோபம், சரும நோய்கள் உள்நாட்டு மரு த்துல ம் மூலம் நிவாரணம் பெறலாம். Dr. ஆப்டீன் சுஜப், நிவ் திஹாரி மெடிக்கல், 11C, கொழும்பு கண்டி வீதி, திஹாரி சந் தி பெற்றோல் நிலையம் அருகே. 071 836 9 333, 0740656333. 016928

## வேலைவாய்ப்பு

**322**

**வெற்றிடங்கள்**
மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

0779038217 மேசன் 2, 500/ ஹெல்பர் 2,000/ செலவுத் தொகை, தினமும் 1,000/ இரு வார சம்பளம் பகல் உணவு இலவசம். டார்கட் உண்டு. சுபாவி கன்ஸ்ரக்ஷன். 017232

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

### இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
### வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை அதிவேக பாதை வருமானத்தினால் நிதியிடப்பட்டது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

## Inviting for supply of Grass Cutter Machines, Blades, Wires and Trimmer Heads to EOM & M Division

### Contract No.: RDA/EOM&M/PRC/2021/MNT/04

1. பின்வரும் அம்சங்களுக்காக மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்த இல. RDA/DOM&M/PRC/2021/MNT/04 என்பதன் கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். விலைமனுக்கோரல் ஆவணத்தில் பூரணமான விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன. கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டவாறு அனைத்து விலைமனுக்களும் 100,000 ரூபாவிற்கான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| விளக்கம் | எண்ணிக்கை | அளவு |
|---|---|---|
| Grass Cutter Machines | Nos. | 370 |
| Grass Cutter Wires | Meter | 190,000 |
| Grass Cutter Blades | Nos. | 2100 |
| Trimmer Heads | Nos. | 1300 |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு, பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 038-2289122. தொலைநகல்: 038-2289560) அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. 2021.03.05 ஆம் திகதியிலிருந்து 2021.03.26 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் 2,500 ரூபா + 200 (வெட்) ஆகியவற்றை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, EOM&M பிரிவு பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்மொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யலாம். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களின் பிரகாரம், கேள்வியின் முகவர் மற்றும் வெற்றிகரமான வெற்றியாளர்கள் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
5. 2021.03.26 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, EOM&M பிரிவு பணிப்பாளரிடம் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
6. விலைமனுவின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது 2021.06.27 ஆம் திகதி வரையும் இருத்தல் வேண்டும்.
7. ஒவ்வொரு விலைமனுவும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2021.07.25 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை பெறுகைக் குழு,
பணிப்பாளர் (EOM&M பிரிவு மே/பா),
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கஹட்டகஹஹேன, வல்கம,
பண்டாரகம.

# பெறுகை அறிவித்தல்

### விவசாயத் திணைக்களம் - விவசாயப் பிரசுர அலகு
### கன்னொறுவை

## அச்சுக் கடதாசிகளுக்கு விலைமனுக் கோரல்

விவசாயத் திணைக்களத்தின் விவசாயப் பிரசுர அலகினால் கீழ்க் குறிப்பிடப்படுள்ள அச்சுக் கடதாசிகளைப் பெற்றுக் கொள்வதற்காக 2021.03.25 ஆம் திகதி மு.ப 10.30 வரை, பேராதனை, கன்னொறுவை, தபாற் பெட்டி இலக்கம் 24 என்னும் முகவரியில் அமைந்துள்ள விவசாய பிரசுர அலகின் பெறுகைக்குழு தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | உருப்படிகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 24" x 36"அளவு G.S.M 55 காபன்லஸ் பேப்பர் TOP (வெள்ளை) 500 உடைய ரீம் | 67 |
| 2 | 24" x 36"அளவு G.S.M 50 காபன்லஸ் பேப்பர் MIDDLE (பச்சை) 500 உடைய ரீம் | 67 |
| 3 | 24" x 36"அளவு G.S.M 50 காபன்லஸ் பேப்பர் MIDDLE (ரோஸ்) 500 உடைய ரீம் | 52 |
| 4 | 24" x 36"அளவு G.S.M 55 காபன்லஸ் பேப்பர் BOTTOM (நீலம்) 500 உடைய ரீம் | 52 |
| 5 | 24" x 36"அளவு G.S.M 55 காபன்லஸ் பேப்பர் BOTTOM (ரோஸ்) 500 உடைய ரீம் | 17 |
| 6 | 31" x 43" அளவு G.S.M 310 பொக்ஸ் போட் 100 உடைய பெக்கட் | 240 |
| 7 | 20" x 25" அளவு G.S.M 210 பிரிஸ்டல் போட் (ரோஸ்) 100 உடைய பெக்கட் | 127 |
| 8 | 20" x 25" அளவு G.S.M 210 பிரிஸ்டல் போட் (மஞ்சள்) 100 உடைய பெக்கட் | 12 |

விவசாய பணிப்பாளர் நாயகம் என்ற பெயரில் மீள் அளிக்கப்படாத தொகையான ரூ.1000.00 ஐ பிரதான அலுவலக சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 2021-03-24 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை அலுவலக நேரங்களில் பேராதனை, கன்னொறுவை, தபாற் பெட்டி இலக்கம் 24 என்னும் முகவரியில் அமைந்துள்ள விவசாய பிரசுர அலகின் காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு பெற்றுக்கொள்ளும் மாதிரிப்படிவங்களில் மாத்திரம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் 2021-03-25 முதல் 91 நாட்களுக்குச் செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ.60,000.00 இற்கான விலைமனுப் பிணையமொன்றுடன் அல்லது காசாகச் செலுத்துவதாயின் பிரதான அலுவலக சிறாப்பருக்குச் செலுத்தப்பட்ட ரூ.30,000.00 இற்கான விலைமனுப் பிணையமொன்றுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை தொலைபேசி இல 081-2058282 மூலம் அறிந்து கொள்ளலாம்.

**தலைவர்,** **2021-03-05**
**பெறுகைக் குழு**
**விவசாயப் பிரசுர அலகு,**
**த.பெ.இல. 24,**
**கன்னொறுவை, பேராதனை**

# விமானப்படையின் சாகசக் கண்காட்சி















இலங்கை விமானப்படையின் 70 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விமானப்படையின் சாகசக் கண்காட்சி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் (03) பிற்பகல் கொழும்பு காலி முகத்திடலில் ஆரம்பமானது.

இந்திய விமானப்படையின் சாரங், சூர்யகிரன் மற்றும் தேஜாஸ் விமானப் படையணிகள் மற்றும் இலங்கை விமானப்படையின் விமானங்கள் இந்த விமான கண்காட்சியில் சேர்க்கப்பட்டுள்ளன. இக் கண்காட்சி மார்ச் 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் மாலை 5.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும்.

14 இந்திய விமானப்படை ஹெலிகப்டர்கள் மற்றும் ஹாக் (HAWK) ஜெட் விமானங்கள் மற்றும் இலங்கை விமானப்படை ஹெலிகப்டர்கள் செஸ்னா 150, வை 12, பி 200, எம்.ஏ 60 மற்றும் எப் 7 போர் விமானங்கள் உட்பட 24 விமானங்கள் இந்த கண்காட்சியை அலங்கரிக்கின்றன.

மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ஒப் த எயார் போர்ஸ் ரொஷான் குணதிலக, இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, பாதுகாப்பு செயலாளர் உட்பட முப்படை தளபதிகள், பொலிஸ் மாஅதிபர், இந்திய மற்றும் பங்களாதேஷ் விமானப்படை அதிகாரிகள் கண்காட்சியை பார்வையிட்டனர்.










# ஆலமுல் இஸ்லாம்

– அஜ்வாத் பாஸி
aalamulislam.tkn@lakehouse.lk

# அல் குர்ஆன்

## மனித வாழ்வுக்கான வழிகாட்டல்

உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர் (நளீமி) பீ. ஏ.,
முன்னாள் விரிவுரையாளர், ஜாமிய்யா நளீமிய்யா



அல் குர்ஆன் முஸ்லிம் வாழ்வின் ஊற்றுக் கண். அங்கிருந்துதான் வாழ்வை ஒரு முஸ்லிம் வரைந்து கொள்கிறான்; கட்டமைத்துக் கொள்கிறான்; ஒழுங்கு படுத்தி சீரமைக்கிறான். அடிப்படைக் கொள்கைகள், கோட்பாடுகள், அடிப்படைப் பண்பாடுகள், ஒழுக்கங்கள், வாழ்வின் அனைத்துப் பகுதிகளுக்கும் உரிய போதனைகள், வழிகாட்டல்கள், சட்டதிட்டங்களை அங்கிருந்துதான் முஸ்லிம் பெறுகிறான். அவ்வாறு முஸ்லிம் அல்குர்ஆனின் வழிகாட்டலின் கீழ் தன்னை ஒழுங்குபடுத்தி, கட்டியெழுப்பிக் கொள்ளும் போது மிக உயர்ந்த, முன்மாதிரிமிக்க ஆளுமையைப் பெறுகிறான். அல்குர்ஆன் இதனை மிக அழகாகக் கீழ்வருமாறு சொல்கிறது:

"இது அல்லாஹ்வின் வார்ப்பு. அல்லாஹ்வை விட மிகச் சிறந்த முறையில் வார்ப்பவர் யார் உள்ளார்."

**(ஸூரா பகரா 2:138)**

முஸ்லிம் மட்டுமல்ல, ஒரு மனிதனே தன்னைச் சீராக அமைத்துக் கொள்ள வேண்டுமானால், தன் ஆளுமையை மிகச் சரியாகக் கட்டமைக்க வேண்டுமானால் இறை வார்ப்புக்குட்பட வேண்டும்.

மனிதனைப் படைத்தது அர்த்தப்பட வேண்டுமானால் அல்குர்ஆனிய அறிவை மனிதன் பெற வேண்டுமென அல்குர்ஆன் இப்பின்னணியிலேயே சொல்கிறது:

"அருளாளன், அல்குர்ஆனைக் கற்றுக்கொடுத்தான். மனிதனைப் படைத்தான்." **(ஸூரா ரஹ்மான் 55:13)**

இந்த கருத்தின் தொடராகவே ஒரு முஸ்லிம் ஒவ்வொரு நாளும் " எங்களுக்கு நேரான பாதையை காட்டுவாயாக." (ஸூரா பாத்திஹா 01:05) என்று இறைவனை பிரார்த்தித்துக் கொண்டே வாழ்கிறான்.

இந்த அடிப்படை உண்மைகளைக் கவனத்திற்கொண்டதன் பின்னர் ஒரு முஸ்லிமுக்கு அல்குர்ஆன் எவ்வாறு வழிகாட்டுகிறது என நோக்கினால் மிகவும் அழகான, ஒத்திசைவான வழிகாட்டலை அது வழங்குவதைக் காண முடியும்.

அல் குர்ஆன் உடம்பைப் பற்றி விளக்கும் போது அந்த உடம்பு தூய்மையாக இருக்க வேண்டும், பலமாக இருக்க வேண்டும் எனக் கூறி அதற்கான வழிகாட்டலைத் தருகிறது.

"நிச்சயமாக அல்லாஹ் அதிகமதிகம் பாவமன்னிப்புக் கேட்டு அவனிடம் மீள்பவர்களை விரும்புகிறான். சுத்தமாகத் தம்மை வைத்துக் கொள்வோரையும் விரும்புகிறான்."

(ஸூரா அல் பகரா 2:222)

அவர் சொன்னார் ; உங்களுக்காக அவரைத் தெரிவு செய்தான். அறிவாற்றலையும், உடல் வலிமையையும் அதிகமாக வழங்கியுள்ளான். (ஸூரா பகரா 2:247)

உடலை இவ்வாறு வைத்துக்கொள்ள சில அடிப்படை வழிகாட்டல்களை அல் குர்ஆன் வழங்குகிறது. முதலாவது சிறந்த, தூய்மையான உணவுப் பொருட்களை அவன் உட்கொள்ள வேண்டும். தனது உடல், பௌதீக வாழ்வை அழகாகவும் கவர்ச்சியுள்ளதாகவும் அவன் வைத்துக் கொள்ள வேண்டும்.

"அல்லாஹ் தனது அடியார்களுக்காக வெளியாக்கியுள்ள அல்லாஹ்வின் அழகுப் பொருட்களையும், சிறந்த உணவுப் பொருட்களையும் யார் தடை செய்ய முடியும்?" (ஸூரா அஃராப் 7:32)

இரண்டாவது அத்துமீறவும், வீண்விரையமும் இப்பகுதியில் கூடாது என்பதை விளக்குகிறது.

"சாப்பிடுங்கள், குடியுங்கள், வரம்பு மீறாதீர்கள், வீண் விரையம் செய்யாதீர்கள். வரம்புமீறுவோரை அல்லாஹ் விரும்புவதில்லை." **(ஸூரா அஃராப் 7:31)**

மனிதனின் அடுத்த பகுதி அறிவு. அறிவு பற்றி அல்குர்ஆன் போன்று வேறெந்தத் தூதும் முக்கியத்துவம் கொடுத்தும் பேசியிருக்க முடியாது. அது பற்றிய சில உண்மைகளை இங்கே தருவோம். அறிவு தேடலையும், சிந்தனையையும் ஏனைய எல்லாவற்றிற்கும் அடிப்படையென அல் குர்ஆன் கூறுகிறது.

ஈமான், இறை பயம் இவற்றுக்கு அடிப்படை அறிவு என அல் குர்ஆன் கூறுகிறது:

"அல்லாஹ்வின் அடியார்களில் அவனைப் பயப்படுபவர்கள் அறிஞர்களே." (ஸூரா அல் பாதிர் 35:28)

மனிதன் என்பதன் பொருள் அறிவு. அறிவற்றவன் மனிதனாக இருக்க முடியாது என்கிறது கீழ்வரும் வசனம் :

"அவர்களுக்கு உள்ளங்கள் உள்ளன; ஆனால் சிந்திக்க மாட்டார்கள். கண்கள் உள்ளன; பார்க்க மாட்டார்கள். செவிகள் உள்ளன; கேட்கமாட்டார்கள். அவர்கள் மிருகங்கள் போன்றவர்கள். இல்லை அதனை விடவும் நேர் வழி அறியாதோர்கள். (ஸூரா அல் அஃராப் 7:179)

ஆன்மா பற்றி, அதன் தூய்மைப் பற்றி அடுத்து விளக்குகிறது அல் குர்ஆன். மனிதனின் வெற்றி தோல்வியே அதில்தான் தங்கியுள்ளது என அது பற்றி விளக்குகிறது:

அதனை (ஆன்மாவை) தூய்மைப்படுத்தியோன் வெற்றியடைந்தான். தீமையில் அதனைப் புதைத்து விட்டவன் தோல்வியடைந்தான். (ஸூரா ஷம்ஸ் 91: 9,10)

இவ்வாறு மனிதனின் மூன்று பகுதிகளான உடல்,அறிவு, ஆன்மா என்பவற்றைப் பொறுத்தவரையிலும் ஒரு சமநிலைப் பண்பு கொண்ட வழிகாட்டலை அல்குர்ஆன் வழங்குகிறது. அது சம்பந்தமான முதன்மைப்பட்ட கருத்துக்களையே இங்கு தந்தோம். இவை ஒவ்வொன்றைப் பற்றியும் அல்குர்ஆன் விரிவாக விளக்கியுள்ளது. அந்த வழிகாட்டல்களை மிகவும் கவனமாக ஒரு முஸ்லிம் ஆழ்ந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

அப்போது ஒரு சமநிலை நிலை கொண்ட உயர்ந்த ஆளுமையை அவன் உருவாக்கிக் கொள்ள முடியும்.

இந்தப் பின்னணியில் இவற்றின் சமூகப் பிரயோகங்களை இஸ்லாம் எவ்வாறு தருகிறது என்பது பற்றி ஒரு சிறு விளக்கத்தைத் தர முயல்வோம்.

மனிதனின் உடல் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் அடிப்படையானது பொருளாதாரப் பகுதி. அதனை அல் குர்ஆன் முதலில் உழைப்பு பற்றி வலியுறுத்துகிறது. அந்த உழைப்பின் விளைவாக பொருளாதார ஏற்றத் தாழ்வு உருவாக முடியும். அந்த ஏற்றத் தாழ்வு நன்கு குறைக்கப் படவேண்டும் என வலியுறுத்துகிறது. அத்தோடு ஒரு குறிப்பிட்ட சாராரிடம் மட்டும் செல்வம் சுற்றிவரக் கூடாது என்ற அடிப்படையான பொருளாதாரக் கொள்கையையும் சொல்கிறது.

# உழைப்பு பற்றிச் சொல்லும் போது :

"பூமியை உங்களுக்கு மிகக் கட்டுப்பட்டு இயங்கக் கூடியதாக ஆக்கியுள்ளோம். எனவே அதன் பல பாகங்களுக்கும் சென்று அல்லாஹ்வின் உணவு வசதிகளை தேடிப் புசியுங்கள். (ஸூரா முல்க்: 67: 15)

பொருளாதார ஏற்றத் தாழ்வை நீக்க ஸகாத்தையும், வாரிசுரிமைச் சட்டத்தையும், செலவழித்தல் பராமரிப்பு சட்டத்தையும், கடமையாக்கியதோடு சதகா என்ற ஸுன்னத்தான செலவழித்தல் சம்பந்தமான வணக்கத்தையும் ஆக்கியுள்ளது.

"உங்களில் பணக்காரர்களிடையே மட்டும் செல்வம் சுற்றிவராதிருக்கட்டும்." (ஸூரா அல் ஹஷ்ர்59:07)

இவ்வாறு சமூகத்தின் செல்வம் ஒரு குறிப்பிட்ட சாராரிடம் தங்கியிருக்கக் கூடாதென்பதை வலியுறுத்தியுள்ளது.

உடல் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் மிக முக்கியமான அடுத்த பகுதி மனிதனின் பாலியல் உணர்வாகும். இதனை ஒழுங்கு படுத்த குடும்பம் என்ற நிறுவனத்தை கட்டமைத்து விளக்கியுள்ளது. ஸூரா பகரா, ஸூரா நிஸா, ஸூரா தலாக் என்ற அத்தியாயங்களில் இது பற்றிய தெளிவான விளக்கங்களை அவதானிக்க முடியும். ஸூரா நூரிலும் காம உணர்வை நெறிப்படுத்துவதற்கான போதனைகளையும், சட்டதிட்டங்களையும் அவதானிக்க முடியும்.

மனிதனின் ஆன்மீக அறிவுப் பகுதிகளை ஒழுங்குபடுத்தலிலும், சீர்படுத்தலிலும் இரு வகையான வழிகாட்டல்களை அல் குர்ஆனில் காண முடிகிறது. ஒன்று மனிதன், பிரபஞ்சம், வாழ்வு என்ற மூன்று பகுதிகளையும் மிக ஆழமாகவும் ஆதார பூர்வமாகவும் விளக்கியுள்ளது. பகுத்தறிவு ரீதியாகவும், விஞ்ஞான பூர்வமாகவும் அதனை முன்வைத்துள்ளது.

இறை நம்பிக்கை, இறை தூது பற்றிய நம்பிக்கை, மலக்குகள் மீதான நம்பிக்கை, மறுமை நாள் பற்றிய நம்பிக்கை என்ற நம்பிக்கைப் பகுதி என்பது மனித வாழ்வுக்கும், பிரபஞ்சத்திற்குமான விளக்கமேயாகும். இப்குதியை விளக்காத அத்தியாயங்கள் கிடையாது.

ஒரு சில அல் குர்ஆன் வசனங்களை இது பற்றித் தருவது பொருத்தமாக அமையும்:

# இப்பகுதியில் இறை நம்பிக்கை பற்றி அல் குர்ஆன் கீழ்வருமாறு சொல்கிறது:

"அல்லாஹ், அவனைத் தவிர வேறு கடவுள் கிடையாது எனவும், இவ்வுலகை அவன் ஒரு சம நிலையில் வைத்து நிர்வகிக்கிறான் எனவும் சான்று பகர்கிறான். அவ்வாறே மலக்குகளும், அறிவுடையோரும் சான்று பகர்கின்றனர்."

(ஸூரா ஆலு இம்ரான்: 3:18)

இவ்வுலக மனித வாழ்வு ஒரு சோதனையே என்று அல் குர்ஆன் விளக்குகிறது:

அவன் வாழ்வையும், மரணத்தை உங்களில் யார் மிகச் சிறந்த முறையில் செயற்படுகிறீர்கள் என்று பரிசோதிப்பதாகப் படைத்தான். (ஸூரா முல்க்: 67: 2)

தொடர்ந்து இவ்வசனத்தில் இக்கருத்து எவ்வளவு தூரம் உண்மை என்பதை விஞ்ஞான பூர்வமாக ஸூரா விளக்குகிறது. இந்தக் கருத்துப் பின்னணியிலேயே மறுமை நாள் என்ற கருத்தையும் அல் குர்ஆன் விளக்குகிறது.

ஸூரா அல் பாதிஹா இறை நம்பிக்கை, மறுமை நாள் நம்பிக்கை, இறை தூது என்ற மூன்று பிரதான நம்பிக்கைகளையும் மிகச் சுருக்கமாக விளக்குகிறது.

# பெண்களே! கவனமாக நடந்து கொள்ளுங்கள்

மௌலவியா நுஸ்ரா,
அட்டுலுகம.

❍ **அலங்காரங்களை வெளியே காட்ட வேண்டாம்;**

தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும் தமது கற்புகளைப் பேணிக் கொள்ளுமாறும் நம்பிக்கை கொண்ட பெண்களுக்கு நபியே நீர் கூறுவீராக! அவர்கள் தமது அலங்காரத்தில் வெளியே தெரிபவை தவிர மற்றவற்றை வெளிப்படுத்த வேண்டாம். தமது முக்காடுகளை மார்பின் மேல் போட்டுக் கொள்ளட்டும். **அல்குர்ஆன் 24:31)**

❍ **மெல்லிய ஆடைகளை அணிய வேண்டாம்;**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இரு பிரிவினர் நரகவாசிகளில் அடங்குவர். அந்த இரு பிரிவினரையும் நான் பார்த்ததில்லை. (முதலாவது பிரிவினர் யாரெனில்,) மக்களில் சிலர், பசு மாட்டின் வாலைப் போன்ற (நீண்ட) சாட்டைகளைத் தம்மிடம் வைத்துக்கொண்டு, மக்களை அடி(த்து இம்சி)ப்பார்கள்.

(இரண்டாவது பிரிவினர் யாரெனில்,) மெல்லிய உடைய ணிந்து, தம் தோள்களைச் சாய்த்து (கர்வத்துடன்) நடந்து, (அந்நிய ஆடவர்களின் கவனத்தை) தன்பால் ஈர்க்கக்கூடிய பெண்கள் ஆவர். அவர்களது தலை (முடி), கழுத்து நீண்ட ஒட்டகங்களின் (இரு பக்கம்) சாயக் கூடிய திமில்களைப் போன்றிருக்கும். அவர்கள் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள்; (ஏன்) சொர்க்கத்தின் வாடையைக்கூட நுகர மாட்டார்கள். சொர்க்கத்தின் நறுமணமோ இவ்வளவு இவ்வளவு பயணத் தொலைவிலிருந்தே வீசிக்கொண்டிருக்கும்.

***அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), நூல் : முஸ்லிம் (4316)***

❍ **நறுமணம் பூசி வெளியே செல்ல வேண்டாம்;**

எந்தப் பெண்ணாவது நறுமணத்தைப் பூசிக் கொண்டு மற்றவர்கள் நுகரவேண்டுமென்பதற்காக ஒரு கூட்டத்தாரிடம் சென்றால் அவள் விபச்சாரியாவாள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**அறிவிப்பவர் : அபூமூஸா (ரலி), நூல்கள் : நஸாயீ, திர்மதீ, அபூதாவூத், அஹ்மத்.**

அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களுடைய துணைவியார் ஸைனப் பின்த் முஆவியா (ரலி) அவர்கள் கூறியதாவது;

"நீங்கள் (ஜமாஅத் தொழுகையில் கலந்து கொள்வதற்காகப்) பள்ளிவாசலுக்குச் செல்லும் போது நறுமணம் பூசாதீர்கள்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எங்களிடம் கூறினார்கள்.

**நூல் : முஸ்லிம் (759)**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நறுமணப் புகையைப் பயன்படுத்திய எந்தப் பெண்ணும் கடைசித் தொழுகையான இஷாத் தொழுகையில் நம்முடன் கலந்துகொள்ள வேண்டாம்.

***அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), நூல் : முஸ்லிம் (760)***

# யார் அநாதைகள்...

இஸ்லாத்தின் பார்வையில் பருவ வயதை அடைய முன் தந்தையை இழந்தவர் அநாதை எனப்படுவார். இவர்கள் வாழ்க்கையில் முகவரியை இழந்தவர்களை போன்றவர்கள் எனவே தான் இவர்களை கண்காணித்து அரவணைக்கும் படி இஸ்லாம் அழைக்கின்றது. இவர்களை பராமரிப்பதை இஸ்லாம் ஓர் சமூக பொறுப்பாக கருதுகிறது.

அநாதைகள் கவனிப்பாரற்று விடப்பட்டால் எதிர்காலத்தில் கொலை, கொள்ளை கற்பழிப்பு போன்ற சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களாக வருவதற்கு அதிக வாய்ப்பு உண்டு. இதனால் சமூகமே ஏன் ஒட்டுமொத்த தேசமே பல அழிவுகளைச் சந்திக்க நேரிடும்.

முறையான கண்காணிப்பு, ஆரோக்கியமான வழிகாட்டுதல்கள் இல்லாமல் தான்தோன்றித்தனமாக அவர்கள் விடப்படும் போது இது போன்ற நிலைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாது போய்விடும். எனவே இவ்வாறான குழந்தைகள் தவறான வழிக்குச் சென்று விடாமல் அவர்களை நற் பிரஜைகளாக வளர்க்க வேண்டிய பொறுப்பு முஸ்லிம்களுக்கு உள்ளது என்பதை இஸ்லாம் வலியுறுத்துகிறது.

நீங்கள் அநாதைகளை சீர்படுத்துவது மிகவும் நன்றே. நீங்கள் அநாதைகளோடு கலந்து வசிக்க நேரிட்டால் (அவர்கள்) உங்கள் சகோதரர்களே'. ***(2:220)***

அகிலத்திற்கே அருட்கொடையாய் உதித்த நபி (ஸல்) அவர்கள் உலகில் பிறக்கும்போதே தந்தையை இழந்த அநாதையாய் தான் வந்து உதித்தார்கள்.

ஆறு வயதில் அன்னையையும் இழந்து ஆதரவற்ற நிலையில் தவித்தார்கள். அவர்களின் துன்பங்கள் மேலோங்கிய கால கட்டத்தில் அமைதி இழந்து நின்ற அண்ணலாரை அல்லாஹுதஆலா ஆதரவான வார்த்தைகளால் அமைதிப்படுத்தும்போது அவர்களின் அநாதை நிலையை எடுத்துச் சொல்லி அவர்களின் மனதை தேற்றுகிறான்.

'நபியே! உங்களை இறைவன் கை விடவும் இல்லை, உங்களை வெறுக்கவும் இல்லை. உங்களை அநாதையாகக் கண்டு அவன் உங்களுக்கு தங்கும் இடம் அளித்து ஆதரிக்கவில்லையா?. எனவே நீங்கள் அநாதைகளைக் கண்டால் கடுகடுக்காதீர்கள், ***(93:3,6)***

இஸ்லாத்துக்கு முன்னர் அநாதைகள் சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கென உரிமைகள் கிடையாது அவர்களது சொத்துக்கள் சூரையாடப்பட்டன. இவ்வாறு இருக்கும் போது நபி (ஸல்) அவர்கள் ஒரு அநாதையாக பிறக்கின்றார்கள். அல்லாஹ் அவர்கள் மூலமாகவே அநாதைகளுக்குரிய உரிமைகள் கடமைகள் என்ன என்பதை முழு மனித குலத்துக்கும் தெளிவு படுத்துகிறான்.

நபி (ஸல்) அவர்கள் காலத்தில் இருந்த நபித் தோழர்கள், குறிப்பாக பெண்கள் கூட அநாதைகளை வளர்த்து வந்துள்ளனர். உம்மு சுலைம் (ரலி) அவர்கள் ஒரு அநாதைப் பெண்ணை வளர்த்து வந்துள்ளார்கள்.

எனவே ஒருவர் அநாதை எனும் நிலையை அடைவது ஒரு சமூகத்தின் பார்வையில் குறையல்ல அது அல்லாஹ்வின் ஏறபாடு. மாற்றமாக அவர்கள் சமூகத்தால் பராமரிக்கப்படாமாமையே ஒரு குறையாகும். அவ்வாறே அநாதைகள் என்போர் தாழ்த்தப்பட்டவர்களும் அல்ல அந்தஸ்தால் அறிவால் குறைந்தவர்களும் அல்ல. மாறாக அவர்களை பராமரிப்பதன் ஊடாக எதிர்காலத்தில் சமூகம் பல நன்மைகளை அவர்கள்



மூலமாக அடையலாம். அதனால் தான் அநாதைகள் ஆதரிக்கப் படவேண்டும். சமூகத்தில் அவர்களுக்கும் சம அந்தஸ்து கிடைக்கவேண்டும் என்ற உற்சாகமூட்டுகையில் அவர்களை ஆதரிப்பவர்களுக்கு என்ன பயன் கிட்டும் என்று சொல்ல முற்பட்டபோது நபி (ஸல்) அவர்கள்

'அநாதைகளை ஆதரிப்பவர்கள் நாளை சொர்க்கத்தில் என்னோடு இருவிரல்கள் இணைந்தது போல மிக நெருக்கமாக இருப்பார்கள், என்று கூறிவிட்டு தனது இரு விரல்களையும் இணைத்து தூக்கி காண்பித்தார்கள்' (புஹாரி)

அபூ உமைமா,
றக்வான.

# அல்லாஹ்விடமே பிரார்த்தியுங்கள்...

(நபியே!) என்னுடைய அடியார் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் நிச்சயமாக நான் அவர்களுக்கு மிகச் சமீபமாக உள்ளேன். என்னை அழைத்தால் அழைப்பவரின் அழைப் பிற்கு நான் பதிலளிக்கிறேன். அவர்கள் நேர்வழி பெறுவதற்காக என்னையே அழைக்கட்டும், என்னையே விசுவாசம் கொள்ளட்டும். **(அல்குர்ஆன் 2:186)**

இறைவன் கூறுகிறான்; நீங்கள் என்னையே அழைத்துப் பிரார்த்தியுங்கள். நான் உங்களுடைய பிரார்த்தனைக்குப் பதிலளிப்பேன். நிச்சயமாக என்னை வணங்குவதை விட்டும் பெருமையடிப்பவர்கள் இழிவடைந்தவர் களாய் நரகில்புகுவார்கள். **(அல்குர்ஆன் 40:60)**

✷ **அல்லாஹ்வைத் தவிர பிறரிடம் கையேந்தி விடாதீர்கள்!**

கஷ்டத்திற்குள்ளானவன் அவனை அழைத்தால் அவனுக்கு பதில் கொடுத்து, அவன் துன்பத்தை நீக்குபவனும், உங்களை இப்பூமியில் பின்தோன்றல்களாக ஆக்கியவனும் யார்? அல்லாஹ்வுடன் (வேறு) நாயன் இருக்கின்றானா? (இல்லை) எனினும் (இவையெல்லாம் பற்றி) நீங்கள் சிந்தித்துப் பார்ப்பது மிக்க குறைவேயாகும். **(அல்குர்ஆன் 27:62)**

அவனையன்றி நீங்கள் யாரை பிரார்த்திக்கிறீர்களோ அவர்கள் உங்களுக்கு உதவி செய்யவோ, தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ளவோ, சக்தி பெற மாட்டார்கள். **(அல்குர்ஆன் 7:197)**



ஒருங்கிணைந்த மனதுடன், பணிவாகப் பிரார்த்தியுங்கள்!

(ஆகவே, முஃமின்களே!) உங்களுடைய இறைவனிடம் பணிவாகவும், அந்தரங்கமாகவும் பிரார்த்தனை செய்யுங்கள் வரம்பு மீறியவர்கவளை நிச்சயமாக அவன் நேசிப்பதில்லை. **(அல்குர்ஆன் 7:55)**

பூமியில் (அமைதி உண்டாகி) சீர்திருத்தம் ஏற்பட்ட பின்னர் அதில் குழப்பம் உண்டாக்காதீர்கள் அச்சத்தோடும் ஆசையோடும் அவனை பிரார்த்தியுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் அருள் நன்மை செய்வோருக்கு மிகசமீபத்தில் இருக்கிறது. **(அல்குர்ஆன் 7:56)**

✷ **அல்லாஹ்வின் அருளில் நிராசை அடைந்துவிடாதீர்கள்!**

தனக்குத் தானே அநீதம் இழைத்துக் கொண்ட எனது அடியார்களே! நீங்கள் அல்லாஹ்வின் அருளை விட்டும் ஒரு போதும் நிராசை ஆகிவிட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் அனைத்துப் பாவங்களையும் மன்னிப்பவனாக உள்ளான் என்று (நபியே) நீர் கூறுவீராக!. **(அல்குர்ஆன் 39:53)**

"வழிகெட்டவர்களைத் தவிர, வேறெவர் தம் இறைவனுடைய அருளைப்பற்றி நிராசை கொள்வர்" என்று (இப்ராஹீம் பதில்) சொன்னார். **(அல்குர்ஆன் 15:56)**

✷ **பிரார்த்தனையும் ஒரு வணக்கமே!**

நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள், பிரார்த்தனை ஓர் வணக்கமாகும். என்னை அழையுங்கள். நான் உங்களுக்குப் பதிலளிக்கிறேன் என்று உங்கள் இறைவன் கூறுகிறான். **(அறிவிப்பவர் : நுஃமான் பின் பஷீர் ரலி, நூல்:அபூதாவூத், திர்மிதி)**

முறையான பிரார்த்தனை ஒருபோதும் வீண்போகாது!

நிச்சயமாக உங்கள் இறைவன் நித்திய ஜீவன். கொடையாளன். அவனுடைய அடிமைகளில் யாரேனும் அவனிடம் (எதையேனும் கேட்டு) கையேந்தி விட்டால் அதனை வெறுங்கையாக திருப்பிவிட அவன் வெட்கப் படுகிறான். **(அறிவிப்பவர்: ஸல்மான் அல்ஃபாரிஸி ரலி, நூல்: அபூதாவூத், திர்மிதி)**

ஒரு முஸ்லிம், பாவச்செயல் மற்றும் இரத்த பந்த உறவுகளை முறிக்காத எந்தப் பிரார்த்தனையை இறைவனிடம் கேட்டாலும் அதற்கு இறைவன் (மூன்றில்) ஏதேனும் ஒரு விதத்தில் பதில் அளிக்கிறான்.

1) அவன் கேட்டதை கொடுத்து விடுகிறான்.

2) மறுமைக்காக அதன் நன்மையை சேர்த்து வைக்கிறான்.

3) பிரார்த்தனையின் அளவு அவனுக்கு ஏற்படும் தீங்கை போக்கிவிடுகிறான்.

என்று நபி(ஸல்) அவர்கள் கூறிய போது ஒரு நபித்தோழர், அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களே! நாங்கள் அதிகமாக பிரார்த்தனை செய்யப் போகிறோம் என்றார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ்வும் மிக அதிகமாக்குவான் என பதிலளித்தார்கள். **(அறிவிப்பவர்: அபூஸயீத் அல்குத்ரீ ரலி, நூல்: ஹாகிம்)**

# இரணைதீவில் நேற்றும் எதிர்ப்பு போராட்டம்

**பரந்தன் குறூப் நிருபர்**



கொரோனா தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களது உடல்களை இரணைதீவில் புதைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றும் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இரணைதீவு பிரதான இறங்குதுறை மற்றும் உடல்களை அடக்கம் செய்வதற்கு குழிகள் தோண்டப்பட்ட இடம் ஆகியவற்றில் மக்கள் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இதேவேளை இரணைதீவுக்கு செல்லும் மக்களை கடற்படையினர் அச்சுறுத்தும் விதமாக செயற்படுவதாகவும் தீவில் வசிக்கும் மக்கள் தீவுக்கு செல்வதற்கு முன் அடையாள அட்டையை கடற்படையினரிடம் ஒப்படைத்து செல்ல வேண்டும் என பணிக்கப்படுவதாகவும் பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

# சடலங்களை அடக்கம் செய்ய இரணைதீவு பொருத்தமற்றது

## ஜனநாயக இளைஞர் அமைப்பு

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

முஸ்லிம்களின் சடலங்களை இரணைதீவில் புதைக்க வேண்டாம் என ஜனநாயக இளைஞர் அமைப்பின் தலைவரும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினருமான ஆறுமுகம் ஜோன்சன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கொரோனா தொற்றினால் மரணிக்கும் முஸ்லிம்களின் சடலங்களை தமிழர் தாயகத்தில் அதிலும் குறிப்பாக இரணைதீவில் புதைக்க அரசு முன்மொழிந்திருக்கும் அமைவிடம் பொருத்தமற்ற இடம் என்பதுடன் ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் ஆத்திரமூட்டுகின்ற தமிழ் மக்களின் விருப்பத்திற்கு மாறான தெரிவாகவே நான் கருதுகின்றேன்.

அரசு உடனடியாக இத் தீர்மானத்தை மாற்றியமைக்க வேண்டும். இரணைதீவில் முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்வதென்பது விஞ்ஞான ரீதியான ஆய்வில் கூட பொருத்தமற்ற இடமாக இருக்கும். வெறுமனே தமிழ் முஸ்லிம் இனங்களுக்கிடையில் ஒரு விரோத மனப்பான்மையுடன் கூடிய வன்முறை கலாசாரம் உருவாகுவதற்கான வாய்ப்பாக இந்த நிலை மாறிவிடக் கூடாது என்றார்.

# கிராமங்களில் மைதானம் அமைக்கும் நிகழ்வு ஆரம்பம்



**கரவெட்டி தினகரன் நிருபர்**

அரசாங்கத்தின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் கீழ் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையில் விளையாட்டு துறை, இராஜாங்க அமைச்சின் "செம்மையான முன்னேற்றமிக்க இளைஞர்களை உருவாக்குவோம்" என்ற செயற்றிட்டத்தின் அடிப்படையில் தேசிய ரீதியில் நாடு பூராகவுமுள்ள 332 பிரதேச செயலகங்களில் கீழ் உள்ள கிராமங்களில் மைதானம் அமைக்கும் செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது.

தேசிய ரீதியாக காலை 10.25 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள "விண்மீன் விளையாட்டுக்கழக மைதானம்" அமைக்கும் நிகழ்வின் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், யாழ் மாநகர முதல்வர், யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் (காணி), யாழ் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாண பிரதேச செயலகர், யாழ் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், அரச உத்தியோகத்தர்கள், இளைஞர்கள், யுவதிகள், பொது மக்கள் என பலர் கொவிட் – 19 சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உள்ள ஏனைய 14 பிரதேச செயலக பிரிவுகளின் 14 மைதானங்களுக்குமான அங்குரார்ப்பண நிகழ்வும் நடைபெற்றது.

## பொத்துவில் – பொலிகண்டி

# வழக்கு விசாரணை மார்ச் 22ம் திகதி வரை ஒத்திவைப்பு

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணிக்கு தடை உத்தரவு பெற்றமை சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணை எதிர்வரும் 22ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கு நேற்று வியாழக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே நீதவான் இக் கட்டளையை பிறப்பித்தார்.

நேற்றைய விசாரணையின் போது மன்றில் முன்னிலையான சட்டத்தரணி சுமந்திரன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவினர், இப் பேரணி நிறைவடைந்ததன் பின்னர் பொலிசார் நீதிமன்றத்தினால் ஏற்கனவே கொடுக்கப்பட்ட கட்டளைக்கு மாறாக நடந்து கொண்டதாக கூறி சிலருடைய பெயர்களை கூறி பி அறிக்கையை சமர்ப்பித்து புலன்விசாரணை செய்வதற்காக நீதிமன்றத்தின் அனுமதியுடன் விசாரணைகளை முன்னெடுப்பதாக சொல்லியிருந்தார்கள்.



இதனடிப்படையில் எங்கள் பலர் இடத்திலும் வாக்குமூலம் பெற்றார்கள். இப்படியான ஒரு நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு சட்டத்தில் இடமில்லை. அப்படியாக பி அறிக்கை மூலம் ஆரம்பிக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகளை இரத்து செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல, ஏற்கனவே கடந்த 5ஆம் திகதி கொடுக்கப்பட்ட உத்தரவை இரத்து செய்யுமாறும், அரசியல் எதிர்ப்புகளை வெளிக்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள், கருத்து சுதந்திரம் என்பவற்றை குற்றவியல் சட்டக் கோவை 106 ஆம் பிரிவில் கீழே மட்டுப்படுத்த முடியாது என்ற தீர்ப்புகளை சுட்டிக் காட்டி சட்டத்தரணி சுமந்திரன் விண்ணப்பம் செய்தார்.

இது தொடர்பாக பொலிசார் தரப்பு விளக்கத்தை கோரும் வகையில் வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

# வெண் சந்தன மரக் குற்றிகள் மீட்பு

சட்டவிரோதமாக மரங்களை ஏற்றிச் சென்ற வாகனம் ஒன்றை இராணுவத்தினர் சங்குபிட்டி பூநகரி வீதித் தடையில் மடக்கி பிடித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. நூற்றுக்கணக்கான வெண் சந்தனம் மற்றும் பாலை மரக்குற்றிகளுடன் இராணுவத்தின் வீதித் தடையில் நிறுத்தாமல் பயணித்த கெப் ரக வாகனம் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் வாகனத்தை விட்டுவிட்டு தப்பியோடியுள்ளனர்.

# நான்காவது நாளாகவும் தொடர் போராட்டம்

**பருத்தித்துறை விசேட நிருபர்**

வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் தொடர்ந்து நான்காவது நாளாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமக்கு வழங்கப்பட்ட நியமனத்தை மீளப் பெற்று தருமாறு கோரிக்கை விடுத்து இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

# வவுனியாவில் கஞ்சா, யானை தந்தங்களுடன் நால்வர் கைது

**ஓமந்தை விஷேட நிருபர்**



வவுனியா நெடுங்கேணி பகுதியில் கேரளா கஞ்சாவுடன் நால்வரையும் யானைத் தந்தத்துடன் ஒருவரையும் நேற்று இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

நெடுங்கேணி பகுதியில் நேற்று முன்தினம் மாலை நால்வர் சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்து சென்றுள்ளனர். குறித்த நால்வரையும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் சோதனை செய்த போது சிறு சிறு பொதிகளாக கஞ்சாவினை உடமையில் வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. சந்தேகநபர் ஒருவருடைய பட்டிக்குடியிருப்பு வீட்டில் சோதனை மேற்கொண்ட போது யானைத்தந்தமும் கைப்பற்றப்பட்டதுடன் 68 வயதுடைய தந்தை ஒருவரையும் கைது செய்த இராணுவத்தினர் ஐவரையும் நெடுங்கேணி பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர். மேலதிக விசாரணைகளை நெடுங்கேணி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கிராம சேவகர் கொலை

# வழக்கு விசாரணை மார்ச் 17ம் திகதி வரை ஒத்திவைப்பு

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னாரில் கிராம சேவகர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகநபரது வங்கிக் கணக்குகளை பரிசோதனை செய்வதற்கு குற்றப் புலனாய்வு பிரிவு நீதிமன்றிடம் அனுமதி கோரி விண்ணப்பம் செய்துள்ளது.

நேற்று முன்தினம் இவ் வழக்கு மன்னார் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே குற்றப்புலனாய்வு பிரிவினர் மன்றில் இவ் விண்ணப்பத்தை மேற்கொண்டனர். விசாரணையின் போது, கொரோனா தொற்று காரணமாக சந்தேகநபர்கள் முன்னிலையாகவில்லை.

சந்தேகநபரின் வங்கி கணக்குகளை பரிசோதிக்க வேண்டும் என்றும் அதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்க வேண்டும் என குற்றப் புலனாய்வு பிரிவினர் மன்றில் விண்ணபம் செய்தனர்.

இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்ட சில தடயப் பொருட்கள் தொடர்பான அறிக்கை இன்னும் கிடைக்கப்பெறவில்லை எனவும் குறிப்பாக கொரோனா தொற்றுக் காரணமாக இவ் அறிக்கைகள் கிடைப்பதற்கு காலதாமதம் ஏற்படுவதாகவும் மன்றில் குற்ற புலனாய்வு பிரிவினர் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து நீதவான் அதற்கு அனுமதியளித்ததுடன் வழக்கு விசாரணையை 17ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

# குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த அழுத்தம் கொடுக்க முன்வர வேண்டும்



**ஐ.சிவசாந்தன்**

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென, உலக நாடுகளுக்கு அழுத்தத்தைக் கொடுக்க அனைத்து தரப்பினரும் முன்வரவேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டம் ஐந்தாவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இப் போராட்டம் தொடர்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் பா. உஜாந்தன் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

# காணி ஆவணங்களை அநுராதபுரத்துக்கு மாற்றுவதை எதிர்த்து யாழில் கவனயீர்ப்பு




**பருத்தித்துறை விசேட நிருபர்**

வடமாகாண காணிகளின் ஆவணங்களை காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் அநுராதபுர அலுவலகத்துக்கு மாற்றும் செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று காலை யாழ்.மாவட்ட செயலக வாயிலை முடக்கி, தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் இப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. அரசாங்கம் எடுத்த மேற்படி தீர்மானத்தை தடுத்து நிறுத்துமாறு இதன்போது அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது யாழ். பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பரிசோதகருக்கும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் இடையில் தர்க்கம் இடம்பெற்றது. எனினும் தொடர்ந்தும் அவர்கள் மாவட்ட செயலக வாயிலை மூடி கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

## பரிசளிப்பு விழா நிகழ்வு



வவுனியா கற்குழி ஞானம் பாலர் பாடசாலையின் பரிசளிப்பு விழா நிகழ்வு கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் ஆபிரகாம்லிங்கனின் நிதிப் பங்களிப்பில் நடைபெற்றது.

இவர் தனது பிறந்தநாளை முன்னிட்டு வவுனியா மாணிக்கதாசன் நற்பணி மன்றத்தின் ஊடாக இந்த உதவியை வழங்கினார்.

இதன்போது மாணவர்களுக்கு பரிசில்கள், கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் சிற்றுண்டிகளும் மாணவர்ளுக்கு வழங்கப்பட்டன.

## யாழ்ப்பாணத்தில் மாட்டு வண்டில் சவாரி:

# சோபை இழந்துவிடாத மரபின் தொடர்ச்சி



இலங்கையில் தமிழர்களுக்கே உரித்தான பாரம்பரியம் மிக்க விளையாட்டுக்களில் ஒன்றாக மாட்டு வண்டிச் சவாரி விளங்குகின்றது. அது ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலப் பகுதி வரையில் சிறந்ததொரு வீர விளையாட்டாகவும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவராலும் விரும்பிப் இரசிக்கப் படும் விளையாட்டாகவும் காணப்படுகின்றது.

மாட்டு வண்டிச் சவாரி தமிழர்களின் பண்பாட்டை ஒருபுறம் அடையாளங் காட்டி நிற்க, மறுபுறம் விவசாயத்தின் முதுகெலும்பான தரமான காளைகளை வளர்க்கும் கால்நடை வளர்ப்பின் முக்கிய உந்து சக்தியாகவும் அது காணப்படுகின்றது.

இது ஒரு வீர விளையாட்டு என்ற காரணத்தினால் சவாரி வண்டியில் பூட்டப்படும் காளை மாடுகளும் கம்பீரமும், வீரமும் மிக்கவையாகவே தேர்ந்தெடுக்கப்படுகின்றன. சவாரிக்கான மாடுகள் அவற்றின் பிறப்பிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன.

காளை மாட்டின் வால், கால்கள், கொம்பு, கண் என்பவற்றினை அவதானித்தே குறித்த காளை சவாரிக்கு ஏற்றதா எனத்தெரிவு செய்யப்படுகின்றது. சவாரிவண்டில் மாட்டிற்கு பல உபசரணைகள் செய்து பக்குவமாகக் கவனிப்பது ஊரவர்களின் வழமையாகும்.

சவாரி வண்டிலானது அதிக பாரம் இல்லாமல் இருப்பதுடன் உறுதியாகவும் பலமாகவும் இருக்க வேண்டும். இந்தவகையில்,வண்டில்கள் பாலை, முதிரை போன்ற வைர மரங்களால் உருவாக்கப்படுகின்றன. வண்டில் சில்லுகளைப் பூவரசு மரத்தில் உருவாக்கி உலோக வளையம் பூட்டுவர். வண்டிலானது பொதுவாக ஏழேகால் அடி முதல் ஒன்பதரை அடி வரையான சுற்றுக்கள் கொண்டதாக அமைக்கப்படுகின்றது. ஒரு சுற்று என்பது வண்டிச் சில்லின் சுற்றளவினைக் குறிக்கின்றது.

சவாரி நடைபெறும் இடமானது சவாரித்திடல் எனும் பெயரினைக் கொண்டு அழைக்கப்படுகின்றது. சுவாரி வண்டில்கள் ஓடக்கூடிய வெளியையும் அதற்கேற்ற நில அமைப்பையும் கொண்டுள்ள பகுதிகளே சவாரித்திடல்களாக அங்கீகரிக்கப்படுகின்றன.

பொதுவாக மாட்டு வண்டிச் சவாரியானது நான்கு பிரிவுகளாக நடைபெறும். இதிலே முதற் பிரிவில் நல்ல தரமான காளைகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இவ்வாறே அடுத்தடுத்த பிரிவுகளிலும் காளைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இறுதியான பிரிவில் இளங்கன்றுகள் பெரும்பாலும் தெரிவு செய்யப்படுகின்றன. இவை பொதுவாக 3,4 வருடக் கன்றுகளாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சவாரி ஓட்டமானது 400 மீற்றர் முதல் 500 மீற்றர் அளவில் நடைபெறுகின்றது. பெரும்பாலும் சவாரிக்கான மாடுகள் சவாரி நடைபெறும் தினத்திற்கு முன்னைய நாளன்று சவாரித் திடலிலே ஓட விடப்பட்டு, அத்தரைக்குப் பழக்கப்படுத்தப்படுகின்றன.

மாட்டு வண்டில் சவாரியைப் பொழுதுபோக்காக மாத்திரமன்றித் தொழிலாகவும் செய்தவர்கள் பலருளர். அவ்வாறு மாட்டுவண்டிச் சவாரித் தொழிலில் ஈடுபடுவோரை 'சவாரி' என்றே அடைமொழிவைத்து அழைப்பதும் பழக்கத்தில் இருந்துள்ளது. சவாரி வண்டிலில் ஆசனப் பலகையில் இருந்து மாடுகளை சுறுசுறுப்பாக அவர் வழி நடத்திச் செல்லுவார்.

முன்னைய காலப்பகுதிகளில் யாழ்பாணம் முழுவதும் பிரபலமான சவாரி ஓட்டுநர்களாக அளவெட்டி சிவஞானம், சவாரிக்கார வன்னித்தம்பி, பண்டத்தரிப்பு தங்கராஜா, சவாரிக்கார சபாபதி, சிதம்பரப்பிள்ளை, கரவெட்டி இளையாம்பி போன்றவர்கள் காணப்பட்டனர்.

சிறு வயதிலிருந்தே சவாரிக்குப் பழக்கும் கன்றினை உடன்பிறப்பாகவும், உறவாகவும் எண்ணி வளர்ப்பது சவாரிவிடுவோரின் உயரிய குணமாகும். சவாரி விடுவோரிடம் கேட்டால் சவாரிக் கன்றினை வளர்ப்பது ஒரு



குழந்தையை வளர்த்தெடுப்பது போலவாகும் என்பார்கள்.

சவாரி வண்டில்கள் வைத்திருப்போர்மாடுகளிடம்மிகுந்தபாசம்வைத்திருப்பது அவர்களின் ஒவ்வோர் செயலகளிலும் எதிரொலிக்கும். மாடுகளை 'வாடா', 'திருப்படா' என்று செல்லமாக அதட்டுவார்கள். 'இஞ்சாய்' என்றே விளிப்பார்கள்.

மாட்டு வண்டிச் சவாரியானது ஒரு இடத்தில் நடக்கப்போகின்றது என்றால், அது அனைவருக்கும்; பெரும்பாலும் ஊடகங்கள் வாயிலாகத் தெரியப்படுத்தப்படுகின்றது. ஆரம்பகாலங்களில் இந்தப்போட்டியானது நீர்வேலி சவாரித்திடல், முல்லைத்தீவு மாவட்டம் வவுனிக்குளம், முழங்காவில், கிளிநொச்சி, மன்னார், கரவெட்டி, ஆவரங்கால் போன்ற இடங்களில் பெரும்பாலும் நடைபெறுவது வழக்கமாக இருந்தது.

சவாரிக்கென்று சங்கம் அமைக்கப்பெற்றும் காணப்படுகின்றமை இன்னுமொரு சுவாராசியமான விடயமாகும். இந்தச் சங்கத்தில் ஒவ்வொரு சோடிக் காளைக்கும் சவாரி விடுபவர் ரூபா ஆயிரம் பணத்தினைச் செலுத்தி உறுப்பினராதல் வேண்டும்.

அந்தச் சங்கத்தின் மூலமாக, போட்டி நடைபெறும் சமயங்களில் மக்களின் பாதுகாப்பு கருதி சவாரி ஓடும் இருபுறங்களிலும் கட்டைகள், கயிறுகள் போன்றவற்றினை நட்டுப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

பொதுவாகப் போட்டியின் போது முதலாவதாக வரும் காளைமாடுகளுக்கு தங்கப்பதக்கம் வழங்குவது வழமையாக இருந்தது. இவை மட்டுமன்றி, அந்த காளைக்கான மரியாதையும் வெகுவாகக் காணப்படும். மேலும்,ஆறுதல் பரிசுகளாகக் குத்துவிளக்கு, மணிக்கூடு போன்றனவும் வழங்கப்படுகின்றன.

தினகரன் பத்திரிகை நிறுவனமானது போருக்கு முன்னைய காலப்பகுதியில் வருடாவருடம் யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதியில் சவாரிப் போட்டி நடத்துவதை வழக்கமாக கொண்டிருந்தது. இந்தப் போட்டியின்போது பங்குபற்றும் அனைவரையும் ஊக்குவிக்கும் நோக்கில் தினகரன் பத்திரிகை நிறுவனமானது துவிச்சக்கரவண்டிகளை வழங்கிக் கௌரவிப்பது வழமை.

மாட்டுவண்டிச் சவாரியானது எந்தளவிற்கு வேடிக்கையும் சுவாரசியமாகவும் உள்ளதோ அதேபோல விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. பெருமளவில் மக்களின் அவதானம் இன்மையால் இத்தகைய விபத்துக்கள் ஏற்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் காளைகள் நேராக ஓடாமல் குறுக்காகக் கயிறுகளுடன் மோதும் சந்தர்ப்பங்களும் உண்டு.

வண்டில்கள் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டு சில்லுகள் உடைவதன் மூலமாகவும் விபத்துக்கள் நடைபெறும்.சில வேளைகளில் போட்டியில் ஈடுபடுபவர்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் வரும்போதும் விபத்துகள் ஏற்படும் அல்லது வேண்டுமென்றே ஏற்படுத்தப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு.

சவாரிப் போட்டியின் போது மாடுகள் வேகமாக ஓட வேண்டும் என்றநோக்கில் அவற்றைத் துனபுறுத்துவதும் இச் சவாரிப் போட்டிகளின் மறுபக்கங்களில் ஒன்றாகும். துவரந்தடியில் ஆணியினை ஏற்றி அதன் மூலமாக குத்தும்போது மாடுகள் அந்த வேதனையில் வேகமாக ஓட வைக்கப்படுவதை சிலர் வழக்கமாகக் கொண்டுள்ளமை எவ்வகையிலும் ஏற்கப்படாத ஒன்றேயாகும்.

எவ்வாறிருந்தாலும், ஒட்டுமொத்த நோக்கில் மாட்டுவண்டிச் சவாரி இன்றளவும் தன் பிரபல்யத்தை இழந்துவிடவில்லை என்பது கண்கூடு. இந்த சவாரியானது முன்னைய காலப்பகுதியோடு ஒப்பிடும் போது தற்காலப் பகுதியில் குறைவான அளவிலே நடைபெற்று வந்தாலும், தமிழர் மரபுரிமைகள் பேணப்படும் விடயத்தில் அதன் சிறப்புரிமை இன்னும் மங்கிவிடவில்லை என்றே கூறலாம்.






பல்கலை மாணவரின்
மந்த மாருதம்



பி.துலக்ஷா
இரண்டாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



# தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் - ஒரு வரம்..!

ஒவ்வொரு மனிதனும் தனது அடிப்படைத் தேவைகளையும், மேலதிக தேவைகளையும், விருப்பு வெறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு தனக்கென்றொரு தொழிலில் ஈடுபடுதல் அவசியமாகும். எதிர்காலத்தில் நல்லதொரு தொழில் வாய்ப்பைப் பெற வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டே பெற்றோர் தம் பிள்ளைகளை கல்விக் கூடங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

தமது பிள்ளைகளாவது எதிர்காலத்தில் நல்லதொரு தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறது. இருப்பினும், குறிப்பிட்ட எண்ணிக்கையானோரே கல்வியில் முன்னேற்றம் பெற்று சிறந்த தொழில் வாய்ப்புக்களைப் பெறுகின்றனர்.

கல்வியில் தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணிக்க முடியாத ஒரு சமூகம் தொழில் சந்தைக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதில் சிக்கல்களை எதிர்கொள்கிறது. பெற்றோர் தம் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி உயர்தரம் வரை கற்பிக்கின்ற போதிலும் குறிப்பிட்டளவு தொகையினரே பல்கலைக்கழக வாயிலை நோக்கி நகர்கின்றனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் உயர்தரம் கற்கின்ற அத்தனை மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்து விட முடியாது. அவ்வாறு பல்கலைக்கழகத்திற்குள் நுழைய முடியாத மாணவர்கள், உயர்தரம் வரை படிக்கக் கூடிய வசதியின்றி சாதாரண தரத்தோடு பாடசாலையிலிருந்து இடைவிலகும் மாணவர்கள் என அதிகமான மாணவர்கள் குறைந்தளவு சம்பளத்திற்கு வேலைவாய்ப்பை நாடிச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

இவை எல்லாவற்றையும் விட, பல்கலைக்கழகம் சென்றால் மட்டுமே பட்டப்படிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற ஒரு எண்ணம் இன்று வரை எம் சமூகத்தின் மத்தியில் அதிகமாகக் காணப்படுகின்றது.

ஆனால், உள்வாரி பட்டப்படிப்புக்கள் மட்டுமன்றி வெளிவாரியாகவும், அரச தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும், திறந்த பல்கலைக்கழகங்களிலும் பல்வேறு வழிகளில் பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியும் என்பது அவர்களுக்கு இன்னமும் தெரிந்தபாடில்லை.

அவ்வாறே, கல்விப்புலத்தில் தொடர்ந்தும் தம்மை அர்ப்பணிக்க முடியாத மற்றும் உயர்கல்வியில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு ஒரு தகைமையை வழங்க உருவாக்கப்பட்டதே தேசிய தொழில் தகைமை எனப்படும். *(National Vocational Qualifications – NVQ)*

அதாவது, ஒருவர் குறிப்பிட்ட ஒரு தொழிலில் விசேடமாக திறமை பெற்றவர் என்பதை எடுத்துக் கூறுவதே NVQ சான்றிதழ் ஆகும். சாதாரணமாகத் தச்சுத் தொழிலை




எடுத்துக் கொண்டால் அவர் இந்தத் தொழிலில் இவ்வளவு தூரம் திறமையானவர் என்பதை அவர் கையில் வைத்திருக்கும் சான்றிதழ் கூறிவிடும்.

பல்கலைக்கழகங்களுக்கு உள் நுழைய முடியாத, மேலதிக கல்வியைத் தொடர வசதி இல்லாத மாணவர்கள் கொண்டிருக்கும் ஆதங்கங்களை நீக்குவதாக இத் தேசிய தொழில் தகைமை சான்றிதழ் அமைகிறது.

என்னால் இந்தத் தொழிலைச் செய்ய முடியும், இந்தத் தொழிலைச் செய்தால் என்னால் முன்னேற்றம் காண முடியும் என்ற ஒரு எண்ணம் ஒவ்வொருவரிடமும் காணப்படும். நான் படித்து நல்ல நிலைக்கு வருவேன் என்பதை விட, நான் இந்தத் தொழிலைச் செய்தால் நல்ல நிலையை அடைய முடியும் என்ற நம்பிக்கை சிலரிடம் காணப்படும்.

அவ்வாறானவர்களின் திறமைக்கு அடையாளமாக அவர்கள் தம் திறனை வளர்த்துக் கொள்ளும் வகையில் வழங்கப்படுகின்ற வழிமுறையாகவும் NVQ காணப்படுகின்றது.

தொழில் நுட்பக் கல்லூரிகள், தேசிய இளைஞர் சேவை மன்றம், இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில தனியார் நிறுவனங்கள் ஆகியவை தொழில் தகைமைக்கான NVQ பயிற்சிநெறிகளை வழங்குகின்றன. இவ் விடயம் தொடர்பில், வவுனியா மாவட்ட இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் நிகழ்ச்சித் திட்ட அதிகாரி குறிப்பிடுகையில்

'வவுனியா மாவட்டத்தில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், தையல், அழகுக்கலை வல்லுநர், சிகையலங்காரம், கணினி வன்பொருள் திருத்துநர், கணினி படவரைஞர் ஆகிய கற்கை நெறிகள் NVQ மட்டம் 4 இற்கான கற்கைநெறிகளாக கற்பிக்கப்படுகின்றன.

கட்டட நிர்மாண உதவியாளர், மரவேலைக் கைவினைஞர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர், குளிரூட்டி மற்றும் வளிசீராக்கல் தொழில்நுட்பவியலாளர், தோல் பொருள் வடிவமைப்பாளர், மின்னியலாளர், காய்ச்சி இணைப்பவர், அலுமினியம் பொருத்துநர் ஆகிய கற்கைநெறிகள் NVQ மட்டம் 3 இற்கான கற்கை நெறிகளாகவும் கற்பிக்கப்படுகின்றன' என்கிறார்.

அவர் மேலும் கூறும் போது,

'இங்கு கற்கை நெறிகளைத் தொடருகின்ற பயிலுநர்களில் ஐம்பது சதவீதமானோர் உள்நாட்டிலும், பதினைந்து சதவீதமானோர் வெளிநாடுகளிலும் ஏனையோர் வெளி இடங்களில் மேலதிகக் கல்வியைத் தொடர்வதோடு, குறிப்பிட்ட ஒரு தொகையினர் சுயதொழிலிலும் ஈடுபட்டு வருவகின்றனர்' என்றார்.

வவுனியா மாவட்டத்தில் மட்டுமன்றி, நாடுபூராகவும் இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை மற்றும் ஏனைய நிறுவனங்களால் NVQ சான்றிதழ்களை வழங்கக்கூடிய கற்கைநெறிகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இன்று பட்டப்படிப்பை மேற்கொள்ள வேண்டும் என்ற கனவுடன் இருக்கின்ற, ஆனால் பல்கலைக் கழகத்துக்குள் கால்பதிக்க முடியாத இளைஞர், யுவதிகள் மற்றும் பாடசாலையில் இருந்து இடைவிலகும் மாணவர்கள் தங்களது உயர்கல்வியைத் தொடர முடியாத நிலையில், தவறான வழிகளில் செல்வதை விடுத்து, தொடர்ந்து கற்பதற்கான வழிமுறைகள் பல ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

கல்வியை தொடர முடியாவிடில், ஏதாவதொரு துறையில் தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணித்து நல்லதொரு வேலைவாய்ப்பைத் தேடிக் கொள்வதற்கு மட்டுமன்றி, எதிர்கால சமூகத்தையும் கல்வி நோக்கிய பாதையில் வழிநடத்தவும் இத் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ்கள் உதவும்.



வி.டதுர்சினி
இரண்டாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான



ஆசிரியர்:
எஸ்.ஏ.சந்திரபவன் B.A.,Dip in teach, PGDE
arumugamchandrabavan@gmail.com




## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

45 நிமிடம்


**இவ்வினாத்தாளில் மொத்தம் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் 45 நிமிட நேரத்தினுள் விடை அளியுங்கள். இவ்வினாக்களுக்கான விடைகள் அடுத்த வாரம் புலமைக் கதிரில் வெளியிடப்படும். உங்கள் விடைகள் சரியானவையா என்று அடுத்த வாரம் நீங்கள் அறிந்து கொள்ளலாம். பகுதி – 2 மாதிரி வினாத்தாள் அடுத்த வாரம் உங்கள் கரங்களில்!**

❖ 1ஆம் 2ஆம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்கு பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

01.





02.





❖ 3 ஆம் வினாவில் தரப்பட்டுள்ள உருக்களின் தொடர்பை அறிந்து, 4ஆம் வினாவில் தரப்பட்டுள்ள இரு உருக்களுக்கும் பொருத்தமான அடுத்த உருவை தெரிவு செய்க.


03.



04.





05.




K என்பவர் நுழைந்து வெளியேறிய பாதை தடித்த கோட்டினாலும், S என்பவர் நுழைந்து வெளியேறிய பாதை புள்ளிக் கோட்டினாலும் காட்டப்பட்டுள்ளது. அதன்படி இருவரும் பயணித்த தூரம் பற்றிக் கூறக்கூடியது.
1) K பயணித்த தூரம் அதிகம்
2) S பயணித்த தூரம் அதிகம்
3) இருவரும் பயணித்த தூரம் சமம்

06. வடிவங்களும் இலக்கங்களும் பயன்படுத்தப்பட்டு கோலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்கு A, B ஆகியவற்றின் பெறுமானங்கள் முறையே
1) 8, 12
2) 6 , 12
3) 6, 10









07. பின்வரும் வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தை தெரிவு செய்க.
1) கடற்கரையில் உரல் உருளுது.
2) கடற்கறையில் உரல் உறுளுது.
3) கடற்கரையில் உறல் உருலுது.

08. "கட்டுமரம்" என்னும் சொல்லில் உள்ள எழுத்துக்கள் மூலம் ஆக்கமுடியாத ஒரு சொல்.
1) கமம் 2) மடம் 3) கரம்

09. முதலில் தரப்பட்ட சொல்லுடன் ஏனைய இரண்டு விடைகளும் பொருந்தும் விதத்தில் பொருந்திப் போகாத ஒரு சொல் எது?
**கால்** - 1) காகம் 2) கதிரை 3) பேருந்து

10. கீழே எண் கோலம் ஒன்று தரப்படுகிறது.
112, 123, 234, ...................... , 456
கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் இருக்கவேண்டிய எண் யாது?
1) 2 3 5 2) 4 3 2 3) 3 4 5

11.  இற்கு  எனின்,  இற்கு ..................?...................... ஆகும்.

1)  2)  3) 


❖ **பின்வரும் கட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு 12ஆம் 13ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ❑ | = | நீங்கள் | ♥ | = | புதிய |
| ◆ | = | அம்மாவுக்கு | ❍ | = | மிகவும் |
| 🕸 | = | சட்டை | ▼ | = | கொடுத்த |
| ☆ | = | புத்தகம் | 😐 | = | வாங்கினேன் |
| ☯ | = | நான் | ✿ | = | அழகானது |

12. ☯ ♥ 🕸 😐 இக் குறியீட்டு வாக்கியத்தில் ♥ இக்குறியீட்டுக்குப் பதிலாக இடக்கூடிய வேறொரு குறியீட்டுக்குரிய சொல் எது?
1) அம்மாவுக்கு 2) கொடுத்த 3) நீங்கள்

13. 'புதிய ..................................... மிகவும் அழகானது' எனும் வாக்கியத்தில் இடைவெளியில் வருவதற்கு பொருத்தமற்ற சொல்லுக்கான குறியீடு எது?
1) 🕸 2) ◆ 3) ☆

❖ ஓர் ஆங்கிலப் பரீட்சைக்கு மாணவர்கள் தாய், தந்தை, உறவினர் ஆகியோருடன் வந்திருந்த விபரம் உருவில் காட்டப்பட்டுள்ளது.





❖ உருவைக் கொண்டு 14ஆம் 15ஆம் வினாக்களுக்கு விடை தருக.


14. உரு தொடர்பான சரியான கூற்று
1) அவ்விடத்தில் 16 தாய்மார் காணப்பட்டனர்.
2) அவ்விடத்தில் 18 தந்தைமார் காணப்பட்டனர்.
3) அவ்விடத்தில் 50 மாணவர்கள் காணப்பட்டனர்.

15. பரீட்சை நிலைய அதிகாரி, தாய்மார் உடனிருக்கும் பிள்ளைகளை தாய்மாருடன் சேர்ந்து உள்ளே வருமாறு அழைத்தார் எனின், எத்தனை பிள்ளைகள் அப்போது உள்ளே செல்வார்கள்?
1) 16 2) 18 3) 22

16. தரப்பட்டுள்ள 4 உருக்களில் ஒன்று மட்டும் சற்று வேறுபடுகின்றது. வேறுபடும் உருவின் கீழ் கோடிடுக.





17.





❖ உரு (1) இல் உள்ளவாறு மடித்து ; மீண்டும் உரு (2) இல் உள்ளவாறு மடித்து கிடைக்கப்பெற்ற உரு (3) ஐ புள்ளிக் கோட்டின் வழியே வெட்டப்பட்டது. வெட்டிய பின் கிடைக்கப்பெற்ற வடிவங்களைக் கொண்ட விடை எது?
1) இரண்டு முக்கோணங்கள் 2 செவ்வகங்கள்.
2) இரண்டு முக்கோணங்கள் ஒரு செவ்வகம்
3) நான்கு முக்கோணங்கள் ஒரு செவ்வகம்.

18.




இதனை மடித்து உரு ஆக்கினால், எதிர்ப்பக்கங்களாக அமையாத விடை எது?
1) A , B 2) A, C 3) D, C




19. மேலுள்ள சக்கரம் சுழலும் போது ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு இலக்கத்துடன் பொருந்தும். அதன்படி நிழற்றப்பட்ட இருபகுதிகளுக்கும் இடைப்பட்ட 3 பகுதிகளும் பொருந்தும் இலக்கங்கள் எவை?
1) 6, 7, 8 2) 7, 8, 9 3) 8, 9, 10


20. A - ஆசையான கன்றுக்குட்டி
B - சும்மா சும்மா தலையை ஆட்டி
C - அம்மா என்னும் கன்றுக்குட்டி
D - சொல்வதென்ன கன்றுக்குட்டி

ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ள கவிதையை ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடை எது?
1) CADB 2) CBAD 3) CABD

21. **அதிதி** = **KSS** என்றும், **அதிபர்** = **KSPT** என்றும் எழுதலாம் எனின், **அதிபதி** என்பது.
1) K S P S 2) K S P T 3) K P S S

22. கிருபாவின் தாயின் தமையன் முருகேசு ஆவார். முருகேசுவின் மகன் ராமுவும், ராமுவின் மகன் சீலனும் வெளிநாட்டில் உள்ளனர். இத் தகவல்களின்படி கூறக்கூடியது.
1) கிருபாவின் மாமன் வெளிநாட்டில் உள்ளார்.
2) முருகேசுவின் பேரன் கிருபா ஆவார்.
3) சீலனின் தாத்தா முருகேசு ஆவார்.

❖ **வரைபடத்தை அவதானித்து 23ஆம் 24ஆம் வினாக்களுக்கு விடை தருக.**




ஒரு வண்ணத்துப்பூச்சி ஒரு பூவில் இருந்து சில பூக்களில் பறந்து பறந்து தேன் பருகியது. அம்புக்குறி காட்டப்பட்டுள்ள ஒழுங்கு முறையிலேயே அது பறந்து, மீண்டும் ஆரம்பப் பூவின்மீது வந்து அமர்ந்தது.

(14 ஆம் பக்கம் பார்க்க)



# புலமைக் கதிர்

## தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான




ஆசிரியர்:
எஸ்.ஏ.சந்திரபவன் B.A.,Dip in teach, PGDE
arumugamchandrabavan@gmail.com

(13 ஆம் பக்கத் தொடர்)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

23. உருவில் வண்ணத்துப்பூச்சி பறக்காத திசை எது?
1) வடக்கு 2) தெற்கு 3) மேற்கு


24. வண்ணத்துப்பூச்சி பறந்த வரைபடத்தில் இரண்டு பூக்களுக்கிடையில் ஒரு நேர் கோட்டை வரைவதன் மூலம் இரண்டு தளவடிவங்களைப் பெறமுடியும். அதற்காக வரையவேண்டிய நேர்கோடு எந்தப் பூக்களுக்கு இடையிலானது?
1) 2ஆம் 6 ஆம் 2) 3ஆம் 6 ஆம் 3) 3ஆம் 5 ஆம்

25. **மின் அஞ்சல் ; மின் சோதிப்பான் ; மின் இணைப்பு ; மின்சாரம் ; மின்கேத்தல் ; மின் உயர்த்தி** - என்பவற்றில் ஏதோ ஒருவகையில் வேறுபட்ட சொல் எது?
1) மின் உயர்த்தி 2) மின் கேத்தல் 3) மின்சாரம்

26. ஒரு பாரவூர்தியில் ஒரு தடவையில் 15 மாடுகளையே கொண்டுவர முடியும். 100 மாடுகளைக் கொண்டு வரவேண்டியிருப்பின் எத்தனை தடவைகள் கொண்டு வரவேண்டும்?
1) 7 தடவைகள் 2) 6 தடவைகள் 3) 8 தடவைகள்

27. ராகவன் வளர்த்த 3 பூனைகளில் கறுப்புப் பூனையை விட வெள்ளைப் பூனை வயது கூடியதாகும். மண்ணிறப் பூனை வெள்ளைப் பூனையை விட வயது குறைந்ததாகும். கறுப்புப் பூனையை விட மண்ணிறப் பூனை வயது குறைந்ததாகும். இத் தகவல்களின்படி வயது குறைந்த பூனை எது?
1) மண்ணிறப் பூனை 2) கறுப்புப் பூனை 3) வெள்ளைப் பூனை

28. 2 இல் இருந்து 92 வரையுள்ள எண்களை எழுதும் போது ; "ஒன்றுக்கள்" எனும் இடப்பெறுமானத்தில் உள்ள, இலக்கம் 2 இன் எண்ணிக்கைகள் எத்தனை?
1) 9 2) 10 3) 18

29. 
இவ்வுருவில் காணப்படாத வடிவம் எது?
1) சதுரம்
2) முக்கோணி
3) வட்டம்


30. ✏ இவ்வூரில் இருந்து பலர் வேலைக்காக வெளியூர் சென்றனர்.
✏ வெளியூரில் இருந்து சிலர் இவ்வூருக்கு வேலைக்கு வந்தனர்.
✏ இவ்வூரில் உள்ளவர்களில் பலர் வேலையில்லாது இருக்கின்றனர்.
✏ இவ்வூரில் வேலையுள்ள சிலர் வெளியூர் செல்லவில்லை.


மேலுள்ள கூற்றுக்களின்படி இவ்வூரில் -
1) வேலை அதிகம் உள்ளது.
2) வேலை செய்வதற்கு ஆட்கள் இல்லை.
3) வேலை வாய்ப்பு இல்லை.

31. அம்மாவின் வயது எனது வயதைப்போல் நான்கு மடங்காகும். அம்மாவின் வயதை மூன்றால் வகுத்தால் அண்ணாவின் வயதாகும். எனது வயது 9 எனின், அண்ணாவின் வயதிற்கும் எனது வயதிற்கும் இடையில் எத்தனை வருடங்களாகும்?
1) 3 வருடங்கள் 2) 8 வருடங்கள் 3) 12 வருடங்கள்

32. லீப் வருடம் அல்லாத ஒரு ஆண்டில், கீழ்வரும் எந்த மூன்று மாதங்களைக் கூட்டும் போது 90 நாட்கள்வரும்
1) ஜனவரி, ஓகஸ்ட், டிசம்பர்
2) ஜனவரி, பெப்ரவரி, மார்ச்
3) ஜனவரி, பெப்ரவரி, ஏப்ரல்

33. இவ்வுருவின் பகுதி (1) ஐ முறிகோடுகள் வழியே மடித்து அம்புக்குறியில் பூசப்பட்டுள்ள மையினை எதிர் எதிர் திசைகளில் பதியச் செய்து ; மீண்டும் 4 அம்புக்குறிகளுக்கும் மைபூசி பகுதி (2) உடன் பதியச் செய்து விரித்தால் கிடைக்கும் உரு எது?


பகுதி (1) பகுதி (2)


(1) (2) (3)

34.

| வாழைப்பழம் | 2 |
|---|---|
| கொய்யாப்பழம் | 1 |

தொகுதி (1)

| கொய்யாப்பழம் | 1 |
|---|---|
| மங்குஸ்தான் | 2 |

தொகுதி (2)

தொகுதி (1) ஐ விட தொகுதி (2) இன் பெறுமதி அதிகமாகும்.

மேலுள்ள தகவல்களின்படி,

1) ஒரு கொய்யாப்பழத்தைவிட ஒரு மங்குஸ்தானின் விலை அதிகம்.
2) ஒரு வாழைப்பழத்தை விட ஒரு மங்குஸ்தானின் விலை குறைவாகும்.
3) ஒரு வாழைப்பழத்தைவிட ஒரு மங்குஸ்தானின் விலை அதிகமாகும்.

35. ஒரு குவளையினுள் முதலில் நீர் ஊற்றப்பட்டது. பின்பு மண்ணெண்ணெய் ஊற்றப்பட்ட போது குவளையின் மேல்மட்டம் 700 ml ஆகக் காணப்பட்டது. மீண்டும் அதேயளவு நீர் உற்றப்பட்டபோது குவளையின் மேல்மட்டம் 1000 ml ஆகியது.
எனவே, குவளையில் ஊற்றிய மண்ணெண்ணெயின் அளவு யாது?
1) 200 ml 2) 400 ml 3) 600 ml

❖ **மூன்று தபால்காரர்கள் ஒரே நேரத்தில் தபால் நிலையத்தில் இருந்து ஒரே பாதையில் புறப்பட்டனர். மூன்றாமவர் 200 மீற்றரிலும், இரண்டாமவர் 300 மீற்றரிலும், முதலாமவர் 600 மீற்றரிலும் தத்தமது முதல் கடிதங்களைக் கொடுத்தனர்.**

36. தபாலகத்திற்கு மிக அண்மையில் தனது முதல் கடிதத்தைக் கொடுத்தவர் யார்?
1) முதலாமவர் 2) இரண்டாமவர் 3) மூன்றாமவர்

37. நான் மிக வேகமாகவும், சிலவேளைகளில் மெதுவாகவும் ஓடுவேன். எனக்குக் கால்கள் இல்லை. நான் வளைந்து நெளிந்து ஓடிக் கொண்டேயிருப்பேன். நான் சேருமிடம் நீல மாளிகையாகும். நான் யார்?
1) புகையிரம் 2) நதி 3) கடல்

❖ கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகையை பார்வையிடுவதற்காக அன்றைய தினம் வந்திருந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்ட தொப்பிகளின் விபரம் தரப்பட்டுள்ளது.

| பாடசாலை | தொப்பியின் நிறம் | தயாராக இருந்த தொப்பிகள் | கொடுத்து மீதமாகிய தொப்பிகள் |
|---|---|---|---|
| A | சிவப்பு | 200 | 40 |
| B | பச்சை | 200 | 35 |
| C | மஞ்சள் | 200 | 30 |
| D | ஊதா | 200 | 45 |

எல்லா மாணவர்களும் தொப்பி அணிந்திருந்தனர் எனின் ;

38. தொப்பி அணிந்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை கூடியதில் இருந்து குறைந்தது வரையான விடை எது?
1) சிவப்பு, ஊதா, பச்சை, மஞ்சள்
2) ஊதா, சிவப்பு, பச்சை, மஞ்சள்
3) மஞ்சள், பச்சை, சிவப்பு, ஊதா

39. வந்திருந்த மாணவர்கள் அனைவருக்கும் மாளிகையின் வரலாற்றுக் கையேடு, ஒன்று வீதம் வழங்கப்பட்டது எனின், எத்தனை கையேடுகள் தேவைப்பட்டிருக்கும்?
1) 150 2) 500 3) 650

40.

| | பிள்ளைகளின் பெயர்கள் | அப்பிள் | தோடை | திராட்சை | ரம்புட்டான் |
|---|---|---|---|---|---|
| 1) | ஜீவனா | ☺ | ☺ | ☹ | ☺ |
| 2) | புவனா | ☹ | ☺ | ☹ | ☺ |
| 3) | ராகவி | ☺ | ☺ | ☺ | ☹ |
| 4) | சகானா | ☹ | ☹ | ☺ | ☹ |

நான்கு பிள்ளைகள் விரும்பும் பழங்களும் அவர்கள் விரும்பாத பழங்களும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணையின்படி கீழ்வருவனவற்றில் தவறான கூற்றைத் தெரிவு செய்க.

1) ஜீவனாவுக்கு பிடித்த இரண்டு பழங்கள் ராகவிக்கும் பிடிக்கும்.
2) நான்கு மாணவிகளில் மூவருக்கு தோடை பிடிக்கும்.
3) ஜீவனாவுக்கு திராட்சையைத் தவிர வேறு பழங்கள் பிடிக்காது


# அறிவுக்கும், பரீட்சைக்கும் துணை புரியும் விடயங்கள்

## பல பொருள் தரும் ஒரு சொல்

1. **அரவம்** - பாம்பு, ஓசை
2. **அரி** - சிங்கம், குதிரை, வண்டு
3. **அகம்** - இல்லம், உள்ளம்
4. **ஆழி** - கடல், மோதிரம், சக்கரம்
5. **வளை** - புற்று, வளையல்
6. **கவி** - கவிதை, கவிஞன், குரங்கு
7. **திங்கள்** - மாதம், சந்திரன், திங்கட்கிழமை
8. **வடு** - பிஞ்சு, தழும்பு, காயம்
9. **கலம்** - கப்பல், பாத்திரம், ஆபரணம்
10. **பதி** - வீடு, அரசன், கணவன், இறைவன்
11. **வண்ணம்** - நிறம், அழகு
12. **நகை** - சிரிப்பு, ஆபரணம்
13. **கரி** - யானை, விறகுக் கரி
14. **மதி** - சந்திரன், புத்தி, மதித்தல்
15. **ஐயம்** - சந்தேகம், பிச்சை
16. **மெய்** - உடல், உண்மை
17. **கோ** - அரசன், பசு
18. **பணி** - தொண்டு, பாம்பு, கட்டளை
19. **கலை** - ஆண் மான், வித்தை
20. **இழை** - ஆபரணம், நூல், பின்னுதல்

## உணர்வு வெளிப்பாடுகள்

குறியீடுகளாக




## கடந்த வார வினாத்தாள் - II இற்கான விடைகள்

**1.** 1(மங்கையர்), 2(மாணிக்க கங்கை), 3(வாருங்க), 4(சிங்கார), 5(பூட்டுங்கடி), 6 (மூங்கிலிலையிலே, 7(பச்சை), 8(முத்தாளம்மனுக்கு), 9.(கிராமியப் பாடல்), 10. (வளைந்து), **2. (அ)** 1(கறி), 2(விழா), 3(மணம்), **(ஆ)** 1(அநாதை), 2(அகராதி), 3(வெள்ளிவிழா), **3.** 1(எனக்கு பாண் விருப்பம்), 2(நான் குளிக்கின்றேன்), **4.** 1(come here), **5.** 1(kite), 2(nest), **6.**(பொத), **7.**(வகுப்பு), **8.**(கதிரவன், நூல், தரணி), **9.** 1(இரவும்), 2(அறம்), 3(அகம்/மனம்), **10.**(3), **11.**(2), **12.**(1), **13.**(1), **14.**(2), **15.**(2), **16.**(1), **17.**(3), **18.**(3), **19.**(2), **20.**(3), **21.**(2), **22.**(2), **23.**(3), **24.**(2), **25.**(3), **26.**(1), **27.**(2), **28.**(3), **29.**(3), **30.**(2), **31.**(3), **32.**(2), **33.**(3), **34.**(1), **35.**(1), **36.**(3), **37.**(3), **38.**(3), **39.**(2), **40.**(9100), **41.**(26098, 26100), **42.** 1(742), 2(247), **43.**(நானு+று), **44.**(V,7,IX,II), **45.**(ரூ. 98), **46.**(12), **47.**(35), **48.**(8166), **49.**(125*ml*), **50.**(15(*cm*), **51.**(155*Km*), **52.** 1(சதுரமுகி), 2(12), **53.**1(4), 2(29), **54.**(பரக்குதம்மா), **55.**(கர்ணன்), **56.**(சுப்ரமணிய பாரதியார்), **57.**(பூவாக), **58.**(நின்றது), **59.**(அழகானவை), **60.**(பொருத்தமான வாக்கியங்கள்)

## பழமொழிகளும் விளக்கமும்...

***1.அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்***
*முயற்சியைத் தொடர்ந்தால் வெற்றி காண்பது நிச்சயம்.*
***2. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்***
*உள்ளத்தில் உள்ளதை முகம் காட்டும்.*
***3. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு***
*ஒற்றுமையாக வாழ்ந்தால் வாழ்வில் வெற்றி கிட்டும்.*
***4. அழுத பிள்ளை பால் குடிக்கும்***
*முயற்சி செய்தாலேயே பலன் பெறலாம்.*
***5. உப்பிட்டவரை உள்ளளவும் நினை***
*உதவி செய்த ஒருவரை எக்காலமும் மறக்கலாகாது.*
***6.வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும்***
*வாழ்வில் முன்னேற்பாடு மிக முக்கியம்.*
***7. ஆழம் அறியாமல் காலை விடாதே***
*எந்தவொரு காரியத்தையும் ஆராய்ந்த பிறகே செய்ய வேண்டும்.*
***8. கந்தையானாலும் கசக்கிக் கட்டு***
*வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்.*
***9. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு***
*எந்தவொரு செலவையும் அளவுடன் செய்தல் வேண்டும்.*
***10. ஆனைக்கும் அடி சறுக்கும்***
*ஆற்றல் உள்ளவரும் தவறு இழைக்கக் கூடும்.*

# நகர்வலம்



ஜனாஸா நல்லடக்கம்

# உரிய இடங்களை பெற்றுக்கொடுக்க புத்தளம் நகர சபை தீர்மானம்

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் நகரில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக மரணிக்கின்ற முஸ்லிம்களுடைய ஜனாசாக்களை உரிய முறையில் அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளை தான் மேற்கொண்டுவருவதாகவும் இதற்கான உரிய இடங்கள் மற்றும் இதர அனைத்து ஏற்பாடுகளையும் புத்தளம் நகர சபை மூலம் பெற்றுக்கொடுக்க தாம் தயாராக உள்ளதாகவும் புத்தளம் நகர பிதா கே.ஏ.பாயிஸ் தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பாக நகர பிதா கே.ஏ. பாயிஸ் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக மரணிக்கின்ற முஸ்லிம்களுடையே ஜனாஸாக்களை தகனம் செய்வதை விடுத்து அடக்கம் செய்வதற்கு அரசாங்கம் வர்த்தமானி மூலம் அறிவித்திருக்கின்றது. அவ்வாறு மரணிக்கின்ற ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான உரிய இடங்களை அரசாங்கம் தேடிக் கொண்டிருக்கும் நிலையிலேயே தாம் இந்த தீர்மானத்தை எடுத்திருக்கிறோம்.இது தொடர்பாக நாம் சுகாதார அமைச்சிடம் அறிவிக்கவுள்ளதாகவும் நகர பிதா தெரிவித்தார்.

இது தொடர்பாக தன்னோடு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள விரும்புகின்றவர்கள் தன்னோடு தொடர்புகொள்ளுமாறும் அவர் தெரிவித்திருக்கின்றார்.





தமுத்தேகம பிரதேச செயலக பிரிவிலுள்ள பாலர் பாடசாலைகளுக்கு கொவிட் 19 சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான சுகாதார பாதுகாப்பு உபகரணங்களை காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன புதன்கிழமை (03) வழங்கும் போது எடுக்கப்பட்ட படம்.

(படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர்)

மொனராகலை மாவட்ட மருத்துவமனையில்

# பி சி ஆர் இயந்திரம் இன்மையால் சடலங்களை உடன் ஒப்படைக்க முடியாத நிலை

**பதுளை தினகரன் விசேடநிருபர்**

மொனராகலை மாவட்ட பிரதான அரசினர் மருத்துவமனையில் பி.சி.ஆர். இயந்திரமொன்று இல்லாமையினால் இ பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளமுடியாத நிலைமை தொடர்ந்தும் நீடித்துவருகின்றது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கிய வண்ணமுள்ளனர்.

மாவட்டத்தின் ஏனைய அரசினர் மருத்துவமனைகளில் மரணமடைபவர்களின் சடலங்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள மொனராகலை மாவட்ட பிரதான அரசினர் மருத்துவமனைக்கு ஒப்படைக்கப்பட்டுவருகின்றன. அச்சடலங்களின் மாதிரிகள் எடுக்கப்பட்டு கராபிட்டிய மற்றும் பதுளை ஆகிய போதனா மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுகின்றன. அவற்றின் அறிக்கைகள் மொனராகலை மாவட்ட பிரதான அரசினர் மருத்துவமனைக்கு வருவதற்கு 4 அல்லது 5 தினங்கள் தாமதமடைகின்றன.

இதனால் சடலங்கள் மொனராகலை மாவட்ட அரசினர் மருத்துவமனை பிரேதஅறைகளிலேயே வைக்கப்படுகின்றன. சடலங்களின் இறுதிக்கிரியைகளை மேற்கொள்வதற்கு தாமதங்கள் ஏற்படுவதால் சடலங்களுக்கு பொறுப்பாக இருந்துவரும் சம்பந்தப்பட்டவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் அச்சடலங்கள் பி.சி.ஆர். பரிசோதனைகளில் கோவிட்19 தொற்றாளர்களென்று கண்டுப்பிடிக்கப்படும் பட்சத்தில் சடலத்திற்கு பொறுப்பாக இருந்துவரும் சம்பந்தப்பட்டவர்கள் மென்மேலும் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

இது குறித்து மொனராகலை மாவட்ட அரசினர் மருத்துவமனை வைத்திய அதிகாரி ஆர்.எம்.டி. ரட்ணாயக்கவிடம் வினவியபோது, பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு பி.சி.ஆர். இயந்திரமில்லாமையால் பெரும்பிரச்சினைகளும் தாமதங்களும் ஏற்பட்டுக்கொண்டிருப்பது உண்மைதான். எமது மருத்துவமனைக்கு பி.சி.ஆர். இயந்திரமொன்று இல்லாமையினால் பரிசோதனை அறிக்கைகளைப்பெற தாமதமடையவே செய்கின்றன. ஏற்படும் தாமதங்கள் தவிர்க்கமுடியாததாகும்.

சுகாதார அமைச்சிடம் எமது மருத்துவமனைக்கு பி.சி.ஆர். இயந்திரமொன்றினைப் பெற்றுத்தரும்படி கோரிக்கை விடுத்துள்ளேன். அவ் இயந்திரம் கிடைக்குமென்ற எதிர்ப்பார்ப்புடன் இருந்துவருகின்றோம். அதுவரை அவலங்கள் தொடர்ந்துகொண்டே இருக்கும்' என்று கூறினார்.

தொழில்செய்யும் இடத்தில்

# பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிக்க விரைவில் மசோதா

**(எம்.ஏ.அமீனுல்லா, அக்குறணை குறுப் நிருபர்)**



பெண்கள் தொழில் செய்யுமிடத்தில் அவர்களுக்களுக்கு எதிரான நடைபெறும் வன்முறைகளை ஒழிப்பதற்கான மசோதா ஒன்றை சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பாராளுமன்றத்தில் கொண்டுவர உள்ளதாக மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி ரோகினி கவிரத்ன தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கண்டி குயின்ஸ் ஹோட்டலில் நேற்று (4) நடைபெற்ற விழாவில் அவர் இதனைத் தெரிவித்தா'ர. கண்டி மாவட்ட ஐ.தே.க. தலைவி திருமதி சாந்தினி கொங்கஹகே ஏற்பாடு செய்திருந்த இவ்விழாவில் ரோகினி கவிரத்ன எம்.பி மேலும் தெரிவித்ததாவது,

உலகில் உழைக்கும் பெண்கள் மீதான வன்முறை மற்றும் பாலியல் துன்புறுத்தல்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ஐ.எல்.ஓ) 108 வது ஆண்டுவிழாவின் சி 190 சமவாயத்தை ஏற்றுக்கொண்டதாகவும், அதை இலங்கையில் அமல்படுத்துவதன் மூலம் பாலியல் வன்முறையை முடிவுக்குக் கொண்டுவர உதவும் என்றும் அவர் கூறினார்.

பணி செய்யும் இடத்தில் பெண்கள் துன்புறுத்தப்படுவதை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு பிரேரணை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளதாகவும் அதைச் செயல்படுத்த ஒரு மசோதாவை இயற்றுவது தொழில் அமைச்சரின் பொறுப்பாகும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# பாரிய கசிப்பு உற்பத்தி; மூவர் கைது

**தெனியாய தினகரன் நிருபர்**

சட்டவிரோதமான முறையில் பாரிய அளவில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுவந்த மூவரை மாத்தறை கொட்டவில பொலிசார் கைது செய்துள்ளனர்.

தெனிபிட்டிய வராபிட்டியகுருந்துவத்த பிரதேசத்தில் இரவு வேளைகளில் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருவதாக பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றது.

கைது செய்யப்படும் பொழுதும் சந்தேக நபர்களிடமிருந்து 100 லீட்டர் கோடா, 5 லீட்டர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்காகபயன்படுத்திய உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி இரண்டு இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகள் கொட்டவில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.சிஹெட்டியாராச்சி தலைமையில் இடம்பெற்று வருகின்றன.



அனுராதபுரம் நகரத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் வெள்ள அபாயத்தை தடுக்கும் நோக்கில் மல்வத்து ஒயாவின் மூன்றாவது கட்டத்தை சூரிய, காற்று மற்றும் நீர் மின் உற்பத்தி இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க திங்கட்கிழமை (1) அனுராதபுரம் மல்வத்து ஒய அருகே ஆரம்பித்து வைத்த போது பிடிக்கப்பட்ட படம்.

(படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

வட மத்திய மாகாணம்

# கிராமிய பாடசாலைகளின் ஆசிரியர் விடுதிகளை புனரமைக்க நடவடிக்கை

**திறப்பனை தினகரன் நிருபர்**

வட மத்திய மாகாணத்திலுள்ள கிராமிய பிரதேச பாடசாலைகளின் ஆசிரியர் விடுதிகளை புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாகாண ஆளுனர் மகிபால ஹேரத்தின் ஆலோசனையின் பேரில் இத்திட்டம் முன் கொண்டு செல்லப்படவுள்ளன. இதற்காக 90 மில்லியன் ரூபா பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் முதற் கட்டமாக கிராமிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் 120 ஆசிரியர் விடுதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. முன்னுரிமை அடிப்படையில் இவ் வேலைகள் இடம்பெறவுள்ளதோடு மாகாண கல்வி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் உரிய புனரமைப்புப் பணிகளை மேற் கொள்ளுமாறு வட மத்திய மாகாண ஆளுனர், மாகாண கல்விச் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். இதற்குச் சமமாக பொலன்னறுவை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் காணப்படும் தளபாட பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நேகம அல் ஹிக்மாவில் பட்டதாரிகள் சங்கம் உருவாக்கம்

**(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)**

நேகம அல் ஹிக்மா பாலர் பாடசாலையில் கல்வி கற்று பட்டதாரிகளாக உருவாகியுள்ளவர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்பவர்கள் ஒன்றிணைந்து நேகம அல் ஹிக்மா பட்டதாரிகள் சங்கம் என்ற பெயரில் புதிய சங்கம் ஒன்றினை உருவாக்கியுள்ளனர்.

1994 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நேகம அல் ஹிக்மா பாலர் பாடசாலையில் இதுவரை சுமார் எழுபது பேர் கலை,வர்த்தக,விஞ்ஞான,கணித துறைகளில் உயர்தரப் பிரிவுகளில் கல்வி கற்று பல்கலைக்கழக அனுமதி பெற்று பட்டதாரிகளாகவும், தற்போது பல்கலைக்கழகங்களில் பட்டமேற்படிப்பை மேற்கொண்டும் வருகின்றனர். இவர்களை ஒன்றிணைத்து அண்மையில் நேகம அல் ஹிக்மா பாலர் பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை எஸ்.ஏ.ஜீனியா நஸ்லின் தலைமையில் விசேட பொதுக் கூட்டமொன்று அப்பாடசாலையில் இடம்பெற்றது.

இதன் போது பாலர் பாடசாலையின் அபிவிருத்தி சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள், நேகம கிராமத்தின் கல்வி, கலாசார, சமூக அபிவிருத்தி திட்டங்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது. இறுதியாக புதிய சங்கம் ஒன்றும் நேகம அல் ஹிக்மா பட்டதாரிகள் சங்கம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டது.

# சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபைக்கு புதிய உறுப்பினர்கள் தெரிவு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

முந்தல் பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் மங்களஎலிய சமுர்த்தி வங்கியின் கட்டுப்பாட்டுச் சபைக்கு நடப்பு வருடத்திற்கான புதிய உறுப்பினர்களை தெரிவு செய்யும் கூட்டம் கடந்த புதன்கிழமை (24) சமீரகம சேவை இல்லத்தில் நடைபெற்றது.

மங்களஎலிய சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் எஸ்.எம். நபீல் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் முந்தல் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் ஆர்.டி.ஏ.ஐ.அனோஜா, மங்களஎலிய சமுர்த்தி வங்கியின் வலய உதவியாளர் கீர்த்தி லதா உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி சங்கத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது மங்களஎலிய சமுர்த்தி வங்கியின் கீழ் உள்ள பபுதுகம, மங்கள எலிய, கட்டைக்காடு, பூனைப்பிட்டி, கொத்தாந்தீவு, சமீரகம, சின்னப்பாடு, பள்ளிவாசல் பாடு, பெருக்குவற்றான், கணமூலை தெற்கு ஆகிய பத்து கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 15 பேர் மங்கள எலிய சமுர்த்தி வங்கியின் நடப்பு வருடத்திற்கான கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.



அத்தோடு, கடந்த 2020 ஆம் ஆண்டு மங்கள எலிய சமுர்த்தி வங்கியினால் பயனாளிக்கு வழங்கப்பட்ட கடன் திட்டங்கள், சமூக வேலைத்திட்டங்கள், அபிவிருத்தி பணிகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டதுடன், 2020ஆம் ஆண்டு குறித்த வங்கியின் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்களாக செயற்பட்டவர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன், மங்கள எலிய சமுர்த்தி வங்கியில் உள்ள சகல கணக்குகளையும் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணனி மயப்படுத்துவதற்கு ஒத்துழைப்புக்கள் வழங்கிய மங்கள எலிய சமுர்த்தி வங்கியில் கடமைபுரியும் வங்கி, கள உத்தியோகத்தர்களும், கணனி பயிலுனர்களும் இதன்போது நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மின்வேலி அமைத்தவர் அதில் சிக்கி உயிரிழப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

நொச்சியாகம நாவக்குளம் பகுதியில் தனது சொந்த காணியை சுற்றி சிறிய கம்பியை பயன்படுத்தி சட்டவிரோத மின்சார வேலியை அமைத்திருந்த நபர் ஒருவர அதில் சிக்கி (02) உயிரிழந்துள்ளார்.

நொச்சியாகம காளதிவுல்வெவ நாவக்குளம் பகுதியைச் சேர்ந்த 40 வயது நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.குறித்த காணிக்குள் துர்நாற்றம் வீசுவதாக பிரதேச வாசிகள் நொச்சியாகம பொலிசாருக்கு வழங்கிய தகவலுக்கு அமைய அங்கு விஜயம் செய்த பொலிசார் அவ்விடத்தின் வீட்டுக்கு முன்னால் முற்றத்தில் விழுந்து உயிரிழந்திருந்த நிலையில் சடலத்தை கண்டு பிடித்துள்ளனர்.

அவ்வேளையில் சடலம் அழுகிய நிலையில் இருந்ததாகவும் கண்டுபிடித்த தினத்திற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னர் குறித்த நபர் உயிரிழந்திருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

உயிரிழந்த நபர் தனது காணியில் சட்டவிரோத கசிப்பு தயாரித்து விற்பனை செய்து வந்துள்ளதுடன் அதனை சுற்றிவளைப்பதற்கு பொலிசார் வருவதை தடுக்கவே சந்தேக நபர் சட்டவிரோத மின்வேலியை அமைத்திருக்கலாம் எனவும் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

# இரத்தினபுரியில் மிருக வைத்தியசாலை ஆரம்பிக்க விரைவில் நடவடிக்கை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி நகர பிரதேசத்தில் கால்நடைகள், பிராணிகள், பறவையினங்களுக்கு சிகிச்சையளிக்க மிருக வைத்தியசாலையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இரத்தினபுரி மாவட்ட மிருகவைத்திய திணைக்கள அதிகாரிகள் இத்தகவலை நடைபெற்ற இரத்தினபுரி மாவட்ட விவசாய இணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தனர். சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவின் வழிநடத்தலில் இம்முயற்சி மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இரத்தினபுரி முவ கமவில் அமைந்துள்ள மிருக வைத்திய கட்டிடத்தில் வைத்தியசாலை இம்மாதம் ஆரம்பிக்கப்பட்டவுள்ளதாககவும் அவர்கள் தெரிவித்தனர்.

# அரச காணிகளை பாதுகாக்க புதிய வேலை திட்டம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள அரச காணிகளை பாதுகாக்கும் நோக்கில் அநுராதபுர மாவட்டத்தில் புதிய வேலை திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.அநுராதபுர மாவட்ட செயலாளர் ஆர்.எம்.வன்னிநாயக்கவின் ஆலோசனையின் பேரில், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், நீர்ப்பாசன முகாமையாளர்கள், பிரதேச செயலாளர்கள் உட்பட விவசாய கழகங்களின் அங்கத்தவர்கள் உதவியுடன் இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன குளங்களை அண்டியுள்ள அரச காணிகளை கைப்பற்றல், சட்ட விரோத கட்டடங்களை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உரிய பிரிவினருக்கு இது சம்பந்தமான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் மாவட்ட செயலாளர் தலைமையில் அநுராதபுரத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றின் போதே இது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு

## வடமத்திய மாகாண சபையின் கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்

# தச்சுக் கைத்தொழில் மற்றும் புடைவைக் கைத்தொழில் போதனாசிரியர் IIIஆந் தரத்திற்கு ஆட்சேர்த்தல் (திறந்த நிலை) – 2021

வடமத்திய மாகாண சபையின் கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தில் தச்சுக் கைத்தொழில் மற்றும் புடைவைக் கைத்தொழில் போன்ற துறைகளுக்கான IIIஆந் தரப் போதனாசிரியர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2021-04-15ஆம் திகதியாகும். இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2021 மே மாதத்தில் அநுராதபுரம் நகரத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**01. வெற்றிடங்களின் எண்ணிக்கை.**

i. **புடைவைக் கைத்தொழில் போதனாசிரியர் பதவி — 09**
ii. **தச்சுக் கைத்தொழில் போதனாசிரியர் பதவி — 02**

**02.** மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் திறமை வரிசைக் கிரமத்திற்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அபேட்சகர்கள் புடைவைக் கைத்தொழில் போதனாசிரியர் மற்றும் தச்சுக் கைத்தொழில் போதனாசிரியர் IIIஆந் தரப் பதவிக்கு நியமிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்படுவர்.

**03. சம்பள அளவு:**
03/2016ஆம் இலக்க மற்றும் 2016-02-25ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் இயைபுடைய மாதாந்த சம்பளம் (MN-1 - 2016) ரூபா 27,140 – 10x300 – 11x350 – 10x495 – 10x660 – 45,540.00 ஆகும். இதற்குப் புறம்பாக அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியாக 7800.00 ரூபா மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**04. தகைமைகள்:**

**4.1 கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்**

(அ) இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் / தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட மூன்று திறமைச் சித்திகள் சகிதம் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

மற்றும்

**பின்வரும் வகையில் பதவிக்கு இயைபான தொழில்சார் தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

i. தச்சுக் கைத்தொழில் போதனாசிரியர் பதவிகளுக்கு

கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் இயந்திர தச்சுப் பயிற்சி நிறுவனமொன்றில் ஒரு வருட தச்சுக் கைத்தொழில் கற்கை நெறியைக் கற்று அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்து இறுதி சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் ஒரு வருட தச்சுக் கைத்தொழில் உயர் கற்கை நெறியொன்றைக் கற்று அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்து சான்றிதழைப் பெற்றிருத்தல்.

ii. புடைவைக் கைத்தொழில் போதனாசிரியர் பதவிகளுக்கு

அரச அழகியற்கலை நிறுவனத்தில் உயர் கற்கை நெறி அல்லது மூன்று வருட சான்றிதழ் அல்லது கைத்தொழில் திணைக்களத்தினால் வழங்கப்படும் மூன்று வருட மூன்று வருட சான்றிதழ் அல்லது இரண்டு வருட சான்றிதழ் அல்லது கைத்தொழில் இறுதி சான்றுப்பத்திர கற்கை சான்றிதழை (13 மாதங்கள்) பெற்றிருத்தல்

**4.2. பொதுத் தகைமைகள்:**

i. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்
ii. அனைத்து அபேட்சகர்களும் வடமத்திய மாகாணத்தில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அளவு உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியில் (2021-04-05) 18 வயதிற்குக் குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
iv. ஏதாவது மத குருவானவர் பதவியை வகிக்கும் நபரொருவருக்கு இப்பதவிக்காக விண்ணப்பிக்கும் தகுதி இல்லை.
v. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.
vi. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் 03 வருடங்களுக்குக் குறையாத காலம் வடமத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தையுடையவராக இருத்தல் வேண்டும். தகைமைகளுடன் கூடிய போதுமான எண்ணிக்கையான விண்ணப்பதாரர்களை வடமத்திய மாகாணத்தினுள் தெரிவு செய்ய முடியாது போனால் மட்டும், வடமத்திய மாகாணத்தில் 05 வருட காலம் சேவையாற்றுதல் வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் நாடு முழுவதிலுமான மட்டத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தொடர்பில் தகைமைகள் கவனத்திற் கொள்ளப்படும்.

**கவனிக்கவும்:** சகல விண்ணப்பதாரர்களும் பதவிக்கு இயைபான சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தில் அதாவது 2021-04-05ஆம் திகதி அல்லது அதற்கு முன் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**05. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**

i. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்துடன் கூடியது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் அவ்வப்போது எடுக்கப்படும் கொள்கை தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும்.
ii. 18/2020ஆம் அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் அதனோடு தொடர்புடைய சுற்றுநிருபத்தின் பிரகாரம் 03 வருட காலத்தினுள் உரிய அரச கரும மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
iii. சேர்த்துக் கொள்ளப்படும் விண்ணப்பதாரர் அவ்வேளையில் அரச சேவை பதவியொன்றில் நிரந்தரமாக்கப்படாதிருந்தால் அவர் மூன்று வருட கால தகுதிகாண் காலத்தின் பின் உரிய வினைத்திறன் தடைதாண்டலின் சித்தியை பூர்த்தி செய்ததன் பின்னர் இயைபுடைய பதவியில் நிரந்தரமாக்கப்படுவார். அரசாங்க சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதியத்துடன் கூடிய அதிகாரியானால் அவரது நியமனம் ஒரு வருட கால பதில் கடமை காலத்திற்கு உட்படுத்தப்படும்.

**06. தெரிவு செய்யும் முறை:**
இந்தப் பதவிக்கான எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் மற்றும் நேர்முகப் பரீட்சையில் தகைமை பெறுதல் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுவர்.

**07. பரீட்சை முறை**

i. எழுத்து மூலப் பரீட்சை, தொழிற்றுறைக்கு இயைபான கணிதம், இயந்திர வடிவியல், பொது அறிவு, வடிவமைப்பு ஆக்கம் போன்ற பாடங்கள் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட வினாப் பத்திரம்
ii. எழுத்துமூலப் பரீட்சைக்கான காலம் 03 மணித்தியாலமாகும். 100 புள்ளிகள். சித்தியடைவதற்கு ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

**07. விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பித்தல்:**

i. விண்ணப்பப் படிவத்தை A4 அளவிலான (செ.மீ. 21x30) தாளைப் பயன்படுத்தி 01 முதல் 03 வரையில் முதலாம் பக்கத்திலும் 04 முதல் மிகுதியை ஏனைய பக்கங்களிலும் வருமாறு விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும்.
ii. இயைபுடைய மாதிரிக்கு அமைவாக அல்லாத, நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்குப் முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத, பிரதேச செயலகம் தவிர்ந்த ஏனைய நிறுவனங்களுக்கு பணம் செலுத்தியுள்ள, பற்றுச்சீட்டுகளின் மூலப் பிரதிகள் இணைக்கப்படாத, பிழையின்றி பூர்த்தி செய்திராத முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் தகைமை இல்லாத விண்ணப்பப் படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். முறையாக விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் இழப்புகளுக்கு இந்த ஆணைக்குழு பொறுப்புக்கூற மாட்டாது. விண்ணப்பப் படிவத்தின் புகைப்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் உபயோகமானதாகவிருக்கும்.
iii. தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும்.
iv. தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவனத்தின் / திணைக்களத்தின் தலைவரின் பரிந்துரை சகிதம் நிறுவனத்தின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.
v. போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதிப் பத்திரம் வழங்குதல், விண்ணப்பதாரர் இந்தப் பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
vi. பிழையின்றி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2021-04-05ஆம் திகதி அல்லது அதற்கு முன் ‘‘செயலாளர், வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, மாவட்டச் செயலக வளவு, அநுராதபுரம்’’ எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘புடைவைக் கைத்தொழில் மற்றும் தச்சுக் கைத்தொழில் போதனாசிரியர் பதவிக்காக ஆட்சேர்த்தல் - 2021’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
vii. விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரரின் கையெழுத்தை அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், முப்படையில் அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிக்கும் வகிக்கும் பதவி நிலை உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**09. பரீட்சைக் கட்டணம்:**
பரீட்சைக் கட்டணம் 600.00 ரூபாவாகும். வடமத்திய மாகாண சபையின் மாகாண சபையின் 2003.02.03 எனும் கணக்கிலகத்திற்குத் வரவாகும் வகையில் வடமத்திய மாகாணத்தின் எந்தவொரு பிரதேச செயலகத்திற்கும் செலுத்தி அதன் பொருட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை (NC 100) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணத்தை வடமத்திய மாகாண சபையின் மாகாண சபை பொது கணக்கிற்கு வரவு வைத்தல் வேண்டும். இந்தப் பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது. வெளி மாவட்ட விண்ணப்பதாரர்கள் மட்டும் இலங்கையின் எந்தவொரு இடத்திலும் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில், செயலாளர், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, வடமத்திய மாகாணம், 1472199 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவாகும் வகையில் பரீட்சைக் கட்டணத்தை ரொக்கப் பணமாக வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் கழறாத வகையில் ஒட்டப்படல் வேண்டும். பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை பின் உபயோகத்திற்காக விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். தபால் அலுவலகங்கள், உப தபால் அலுவலகங்கள் அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு (இலங்கை வங்கி தவிர) பணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**10. பொய்யான தகவல்கள் வழங்குதல்:.**
விண்ணப்பப் படிவத்தை நிரப்பும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்டதிட்டங்களின் பிரகாரம் அபேட்சகரொருவர் தகைமையற்றவர் என தெரியவரின் பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குத் தோற்றியதன் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்துவம் இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரரினால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் சேவையில் இருக்கும் போது எந்தவொரு வேளையிலும் பொய்யானவை எனத் தெரியவரின் அவர் அரச சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

**11. பரீட்சைக்குத் தோற்றுதல்:**
விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகளை அனுப்பியவுடன் அது தொடர்பான அறிவித்தலொன்று மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இணையதளத்தில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 தினங்களுக்குப் பின்பும் பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்காவிடின் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அது பற்றி வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அறிவித்தல் வேண்டும். அப்போது விண்ணப்பதாரர் தம்வசம் வைத்துள்ள விண்ணப்பப் படிவத்தின் புகைப்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப் படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு சகிதம் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்காத அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

12. இங்கு குறிப்பிடப்படாத வேறும் விடயங்கள் தொடர்பாக வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை சட்டதிட்டங்களின் பிரகாரம் நடந்து கொள்வதற்கு கட்டுப்பட்டுள்ளனர்..

13. ஆட்சேர்ப்பதற்கான நிபந்தனைகள் பதவிக்கு இயைபானவாறு வடமத்திய மாகாண பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் அளவு மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்க்கும் விதிமுறைக்கமைய தீர்மானிக்கப்படும். மொழிகளுக்கிடையில் ஏதும் வேறுபாடுகள் காணப்பட்டால் அவ்வாறான வேளைகளில் சிங்கள மொழி மூல அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**செயலாளர்,**
**வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,**
**வடமத்திய மாகாணம்.**

**2021-03-05ஆம் திகதி.**

**இணையதளம்: www.psc.nc.gov.lk**

---

## மாதிரி விண்ணப்பப் படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

### வடமத்திய மாகாணத்தின் அரசாங்க சேவை ஆணைக்குழு

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**வடமத்திய மாகாண சபையின் கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் தச்சுக் கைத்தொழில் மற்றும் புடைவைக் கைத்தொழில் போதனாசிரியர் IIIஆந் தரத்திற்கு ஆட்சேர்த்தல் (திறந்த நிலை) - 2021**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:
சிங்களம் - 2
தமிழ் - 3

(இயைபுடைய இலக்கத்தை கூட்டில் தெளிவாகக் குறிப்பிடவும். மொழி மூலத்தை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்பட மாட்டாது)

1.0 1.1 முதல் எழுத்துக்களை இறுதியாக சேர்த்து முதலெழுத்துக்களுடன் பெயர்:.....................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) உதாரணம் : PERERA ,A.B
1.2 முழுப் பெயர் :.....................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
1.3 முழுப் பெயர்: (தமிழில்/சிங்களத்தில்) .....................
1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம்: .....................

2.0 2.1 நிரந்தர முகவரி:.....................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
2.2 நிரந்தர முகவரி:.....................
(தமிழில்/சிங்களத்தில்)
2.3 அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி:.....................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

3.0 3.1 பால்: பெண் - 1
ஆண் - 0
(உரிய கூட்டினுள் இலக்கத்தை எழுதவும்)
3.2 பிறந்த திகதி:- வருடம் : மாதம் : திகதி:
3.3 விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியில் வயது: (2021-04-15 .....................
வருடம்: மாதம்: நாட்கள்:
3.4 தொலைபேசி இலக்கம்:
3.5 விண்ணப்பதாரரின் வதிவு மாவட்டம்: .....................

**4. கல்வித் தகைமைகள்:**

4.1 க. பொ. த. (சா/த) பரீட்சை தொடர்பான விபரங்கள்: (சான்றிதழின் புகைப்படப் பிரதியை இணைத்தல் வேண்டும்)

(I) பரீட்சை வருடம் மற்றும் மாதம்: ..................... (I) பரீட்சை வருடம் மற்றும் மாதம்:
(II) சுட்டெண்:.................. (II) சுட்டெண்:.....................

| பாடம் | சித்தி |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |

| பாடம் | சித்தி |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |

5. இயைபுடைய தொழில்சார் தகைமைகள்: (சான்றிதழ்களின் புகைப்படப் பிரதியை இணைக்கவும்)
i. கற்கை நெறியின் பெயர்:.....................
ii. நிறுவனம்:.....................
iii. கால எல்லை: .....................
iv. பெறுபேறுகள் செல்லுபடியாகும் காலம்:.....................

6. நீங்கள் ஏதாவது குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளீர்களா?
உரிய கூட்டினுள் அடையாளம் இடுக. மேற்படி பதில் ஆம் என்றால் விபரங்கள் தருக.
ஆம் இல்லை

7. பரீட்சைக் கட்டணம் செலுத்தி பற்றுச்சீட்டு பற்றிய விபரம்:.....................
(I) பரீட்சை கட்டணம் செலுத்திய அலுவலகம்:.....................
(II) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி: .....................
(III) செலுத்திய தொகை:.....................

பற்றுச்சீட்டை இந்த சுட்டத்தில் கழறாதவாறு ஒட்டவும் (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பிரயோசனமாகும்)

8. விண்ணப்பதாரியின் உறுதிமொழி:
இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் எனது அறிவுக்கெட்டிய வரையில் மற்றும் விசுவாசத்தின் பிரகாரம் சரியானதெனவும், மற்றும் பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக செயற்படுவதற்கும், இந்தப் பரீட்சையின் நிபந்தனைகளுக்கமைய நான் தகுதியற்றவன் எனத் தெரிய வந்தால் பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சைக்குப் பின் எனது பரீட்சை அபேட்சகத்துவம் இரத்துச் செய்யப்படுவதற்கு எடுக்கப்படும் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதற்கு நான் இணங்குகிறேன்.
திகதி: ..................... .....................
**விண்ணப்பதாரியின் கையொப்பம்**

9. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்
இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ..................... என்பவரை, நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவர்............. ஆம் திகதி தனது கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டாரெனவும் உறுதிப்படுத்துகிறேன்.
திகதி: ..................... .....................
**உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்**
திகதி:.....................
உறுதிப்படுத்தும் அதிகாரியின் பெயர்:.....................
பதவி: .....................
முகவரி: (உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கவும்).....................

10. திணைக்களத் தலைவரின்/நிறுவனத் தலைவரின் சான்று: (தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மட்டும்)
இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு/திருமதி/ செல்வி ..................... என்பவர் இந்த ..................... அலுவலகத்தில்/நிறுவனத்தில் ..................... திகதி முதல்..................... பதவியில் சேவையாற்றுகிறார் எனவும், அவரது சேவை திருப்திகரமானது எனவும் இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டால் அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும், அவர் இதுவரையில் எந்தவிதமான வகையிலும் ஒழுக்காற்று தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர) ஆளாகவில்லை எனவும் மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென சான்று பகர்கிறேன்.
திகதி:..................... .....................
**திணைக்களத் தலைவர் / நிறுவனத் தலைவரின் கையொப்பம்**
**(உத்தியோகபூர்வ முத்திரை)**
திணைக்களத் தலைவரின் / நிறுவனத் தலைவரின் பெயர்:.....................
பதவி:.....................
முகவரி: (உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கவும்.)

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

# அறிவித்தல்

**தேயிலை வளர்த்தல் மற்றும் உற்பத்தி செய்தல் கைத்தொழில் பற்றிய சம்பளச் சபை**

(136ஆவது அதிகாரமான) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளின் பிரகாரம், தேயிலை வளர்த்தல் மற்றும் உற்பத்திக் கைத்தொழில் பற்றிய சம்பளச் சபையினால் நிறைவேற்றப்பட்டு கௌரவ தொழில் அமைச்சரால் அனுமதிக்கப்பட்ட மேற்படி தீர்மானங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் விதிமுறைகளுக்கு அமைவாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது. இத்தீர்மானம் 2021 மார்ச் 05ஆம் திகதி முதல் செல்லுபடியாதல் வேண்டும்.

**எம்.பீ.பீ.யூ.கே.மாபா பத்திரண**
**செயலாளர்,**
**தொழில் அமைச்சு**

**2021.03.03ம் திகதி**
**மெஹெவர பியச**
**கொழும்பு - 05.**

**அட்டவணை**

தேயிலை வளர்த்தல் மற்றும் உற்பத்தி கைத்தொழில் பற்றிய சம்பளச் சபையினால் உருவாக்கப்பட்ட 1945 ஜுலை 31ஆம் திகதி இல.9441 அதி விசேட வர்த்தமானியில் பிரசுரமான அறிவித்தலில், அட்டவணையில் விபரமாக தரப்பட்டுள்ள, அவ்வப்போது மாற்றப்பட்ட இறுதியாக 2014 ஜுலை 24ஆம் திகதி இல.1872/31 அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் மாற்றப்பட்ட தீர்மானங்களின் II ஆம் பிரிவின் குறைந்தபட்ச நாளாந்த சம்பள அளவு சார்பாக கீழ்க்காணும் பிரிவு புதிதாக பிரதியீடு செய்யப்பட்டு மேலும் மாற்றப்படல் வேண்டும்.

**II ஆம் பிரிவு**
காலத்தை அளவிடும் வேலைக்காக செலுத்தப்பட வேண்டிய

i. குறைந்தபட்ச நாளாந்த சம்பள அளவு (தொழிலாளர்கள்) ரூ. - 900.00

ii வரவுசெலவுத்திட்ட சலுகைக் கொடுப்பனவு - ரூ .100.00

## வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 301 -1XXX | KIA | CLARUS | 1999 |
| CBG-0XXX | TOYOTA | VITZ KSP130 | 2015 |
| CAH-2XXX | TOYOTA | PREMIO NZT260 | 2015 |
| **ஜீப்** | | | |
| CAO-9XXX | NISSAN | X-TRAIL HT32 | 2016 |
| **லொறி** | | | |
| PQ -1XXX | TATA | ACE | 2011 |
| PQ -3XXX | TATA | ACE | 2011 |
| DAB-8XXX | MAHINDRA | MAXXIMO PLUS VX | 2015 |
| **துவிச்சக்கர வண்டிகள்** | | | |
| BIG -4XXX | TVS | WEGO | 2019 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HM -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| QC -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QC -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QE -9XXX | BAJAJ | AUTO RE 2 STORKE | 2006 |
| QI -4XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QL -2XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QP -0XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| QS -1XXX | BAJAJ | AUTO AR4S | 2009 |
| YE -5XXX | BAJAJ | AR RE 200 | 2010 |
| QX -4XXX | TVS | KING | 2010 |
| YV -3XXX | BAJAJ | RE 205 | 2011 |
| AAC -7XXX | BAJAJ | RE 205 | 2012 |
| AAD -9XXX | BAJAJ | RE 205 | 2012 |
| **பஸ்** | | | |
| NA -0XXX | TATA | SFC407 | 2005 |
| **டிராக்டர்** | | | |
| RA -5XXX | FARMTRAC | FT45 | 2005 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112088505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2021 மார்ச் 5ஆம், 8ஆம், 9ஆம் மற்றும் 10ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2021 மார்ச் 10ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
**ஜானக்க - 0711624559 / மொதித - 071 9530350**

www.skillsads.com

**விசேட அற்றோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

காலி, ரிச்மண்ட் மேடு வீதி, இல.123இல் வசிக்கும் கல்கெட்டிய கமகே மலிந்த என்பவரால் காலி, கொடகந்த, ஒபவத்தயில் வசிக்கும் கல்கெட்டிய கமகே அநுர ஆகிய எனக்கு அதிகாரத்தை வழங்கி 2015.10.31ஆம் திகதி காலி பகிரங்க நொத்தாரிசு திரு.திலன்பிரியங்க கொடகந்தவினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல.118, விசேட அற்றோர்ணி அதிகாரத்தை 2021.03.03 முதல் இரத்துச் செய்வதாக சகலரும் அறிந்து கொள்வதற்காக பிரசுரிக்கிறேன்.

**கல்கெட்டிய கமகே அநுர,**
**ஒபவத்த, கொடகந்த, காலி.**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

பின்வரும் கம்பனியானது கூட்டிணைக்கப்பட்டுள்ளதென 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**ட்ரிபள் ஏ இன்டிமேட்ஸ் (பிறைவட்) லிமிட்டட்**
பதிவிலக்கம்: **PV 00234592**
பதிவு முகவரி:
**இல.324/6, 7/1, லெயார்ட்ஸ் டவர், ஹவ்லொக் சிட்டி, கொழும்பு - 06**
கூட்டிணைப்புத் திகதி: **2021.02.11**
**என்.பீ.எ & கொன்சல்ட்டன்ஸ்**
**செயலாளர்கள்**
**கொழும்பு, பன்னிப்பிட்டிய**

## பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2021/01/31 திகதிக்கு காலாவதியாகி இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2021/03/25 மற்றும் 2021/03/26 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

Orient Finance
ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 444 222

skills

## NLDB

### தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

# பெறுகை அறிவித்தல்

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் துணைக்கம்பனிகளான - ஸ்ரீ லங்கா போல்ட்ரி டிவலொப்மன்ட் கம்பனி (பிரைவட்) லிமிட்டட் மற்றும் மஹாவெலி லைவ்ஸ்டொக் என்ரபிரைசஸ் லிமிடட்) இற்கு ஓர் களைப்பாளரின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான விலைமனு.

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் துணைக் கம்பனிகளான ஸ்ரீ லங்கா போல்ட்ரி டிவலொப்மன்ட் கம்பனி (பிரைவட்) லிமிட்டட் மற்றும் மஹாவலி லைவ்ஸ்டொக் என்ரபிரைசஸ் லிமிட்டட் இற்கு ஓர் கலைப்பாளரை நியமனம் செய்வதற்காக தனியார் லிமிட்டட் கம்பனிகளில் கலைப்பில் ஈடுபாடுள்ள நிறுவனங்களிலிருந்து தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் தலைவரால் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

2021 மார்ச் 31ம் திகதி பி.ப. 2.30 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் மூடப்படும். கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, நாவல வீதி, இல. 40 இல் உள்ள, தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையில் விலைமனுக்கள் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.

**மேலதிக தகவல்களை நீங்கள் பெற விரும்பின்**

1. **ஸ்ரீ லங்கா போல்ட்ரி டிவலொப்மன்ட் கம்பனி (பிரைவட்) லிமிட்டட்**
   தொ.பே. - 011-2501701/2, நீடிப்பு 135 இன் ஊடாக பிரத்தியேக உதவியாளரை தயவு செய்து தொடர்புகொள்ளவும் மற்றும்
2. **மஹாவலி லைவ்ஸ்டொக் என்ரபிரைசஸ் லிமிட்டட்**
   தொ.பே. - 011-2501701/2, நீடிப்பு 109 இன் ஊடாக உதவிப் பொது முகாமையாளர் - (ஆளணி மற்றும் நிர்வாகம்) ஐ தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை**
**இல. 40, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு-05.**

Repeat
Your
Ad
For
Better
Offers

## தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

### பெறுகை அறிவித்தல் தினத்தை நீடித்தல்

2021/02/12ம் திகதி DNCWS/PRO/2021/Nano Filter/01 பிரசுரிக்கப்பட்டுள்ள பெறுகை அறிவித்தலில் கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் திகதி 2021.03.10 வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஏனைய நிபந்தனைகள் மற்றும் விதிகளில் மாற்றங்கள் இல்லை.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்.**
**இல. 1114, பன்னிபிட்டிய வீதி,**
**தலவத்துகொட.**
03.03.2021

## மக்கள் வங்கி

### மலியதேவ கிளை – 226

1986ம் ஆண்டின் 32 ம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1961ம் ஆண்டின் 29ம் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D ம் சரத்தின் கீழான ஆலோசனை. 1986ம் ஆண்டின் 32ம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1961ம் ஆண்டின் 29ம் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D (29D) ம் சரத்தின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 2020.11.27ம் திகதி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. திரு. முஹம்மது ராசிக் முஹம்மட் இர்பான் மற்றும் மொஹம்மது அபுல் ஹசன் பாதிமா மஹபூபா என்பவர்களால் மக்கள் வங்கியின் சார்பில் குருநாகல் மாவட்ட பிரசித்த நொத்தாரிசு திருமதி. நிலீகா ஹர்சனீ வீரகோன் அவர்களால் 2017.06.12 ம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 5944 ம் இலக்க ஈட்டு முறியின் மீதும், குருநாகல் மாவட்ட பிரசித்த நொத்தாரிசு திரு. போல் ஹின்னிகே லக்சிரி ஜயதிலக்க அவர்களால் 2018.03.28 ம் திகதி அத்தாட்சிப் படுத் தப்பட்ட 800 ம் இலக்க ஈட்டு முறியின் மீதும் - வருமதியான கொடுப்பனவில் தவனை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது சொல்லப்பட்ட ஈட்டு முறிகளின் மீது முறையே ரூபா. ஐம்பது இலட்சம் (ரூபா:- 5.000,000/=) மற்றும் ரூபா. ஐம்பது இலட்சம் (ரூபா:- 5.000,000/=) தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக செலுத்தப்பட வேண்டி உள்ளது. ஆதலால் முறையே ரூபா. ஐம்பது இலட்சம் (ரூபா:-5.000,000/=) பணத்தின் மீது 2019.10.03 ம் திகதி முதல் ஏல விற்பனை திகதி வரை ஆண்டொன்றுக்கு நூற்றுக்கு பத்தொன்பது தசம் ஐந்து (19.5%) சத விகிதப்படி வட்டியும். ரூபா.ஐம்பது இலட்சம் (ரூபா:- 5.000,000/= ) பணத்தின் மீது 2019.10.03 ம் திகதி முதல் ஏல விற்பனை திகதி வரை ஆண்டொன்றுக்கு நூற்றுக்கு இருபது தசம் ஐந்து (20.5%) சத விகிதப்படி வட்டியும் ஏல விற்பனை திகதிவரை தொடர்ந்தும் வட்டியையும், குறிப்பிட்ட மக்கள் வங்கிச் சட்டத்தின் 29L - சரத்தின் கீழ் அறவிடப்படவேண்டிய பணம், செலவுகள் உட்பட, அதன் பின்னர் கொடுப்பனவுகள் ஏதும் பெறப் பட்டிருப்பின அவற்றைக் கழித்து முறையே ரூபா. ஐம்பது இலட்சம் (ரூபா:- 5.000,000/=) மற்றும் ரூபா. ஐம்பது இலட்சம் (ரூபா:- 5.000,000/=) பணத்தை ஒரே முறையில் அறவிடுவதற்காக சொல்லப்பட்ட 5944 மற்றும் 800 இலக்க ஈட்டு முறிகளினால் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடு வைக்கப்பட்ட ஆதனமும் வளவும் குருநாகலையைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் சொக்மன் அன் சமரவிக்ரம கம்பனியினால் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை 1986ம் ஆண்டின் 32ம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1961ம் ஆண்டின் 29ஆம் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29Dம் சரத்தின் கீழ் அதற்குறித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.

ஈடுவைக்கப்பட்ட ஆதனம் பற்றிய விபரம். சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், பெலிகல் கோரலை, வரகாபொல பிரதேச செயலாளர் பிரிவு , வரகாபொல பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட, இல. 345 - மங்கெதர கிராம உத்தியோகத்தர் பிரிவு, மங்கெதர கிராமத்தில் அமைந்துள்ள, "பாலமகாவ அஸ்வெத்துமே கும்புர தற்போது தோட்டம்" என்ற காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு.ஜீ.பி.திஸகநாயக்க அவர்களால் 2016.06.28 ம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 7789 ம் இலக்க வரைபடத்தின் 02 ம் இலக்க காணித் துண்டுக்கான எல்லைகள்

வடக்கு :- 7789 ம் இலக்க வரை படத்தின் 01 ம் இலக்க காணித் துண்டு,
கிழக்கு :- அம்பேபுஸ்ஸ - குருநாகல் பிரதான பாதை.
தெற்கு :- 7789 ம் இலக்க வரை படத்தின் 03 ம் இலக்க காணித் துண்டு.
மேற்கு :- நாங்கல்ல நீரோடை.

என்ற எல்லைக்குட்பட்ட இருபத்தி ஐந்து தசம் ஐந்து பேர்ச் (ஏ.00, ரூட்.00 பேர்ச் 25.5) எனப்படும் பூஜ்ஜியம் தசம் பூஜ்ஜியம் ஆறு நான்கு ஐந்து ஹெக்டயார் (0.0645 ஹெக்ட்) விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம் செடி பழ வகைகள், கட்டிடங்கள் உட்பட அனைத்தும் அடங்களாக, அத்துடன் அந்த வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள பாதையைப் பொதுவாக பாவிப்பதற்கும் பரிபாலிப்பதற்குமான உரிமையுடன்.

(பதிவு K54/138 கேகாலை) சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், பெலிகல் கோரலை, வரகாபொல பிரதேச செயலாளர் பிரிவு , வரகாபொல பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட, இல.345 - மங்கெதர கிராம உத்தியோகத்தர் பிரிவு, மங்கெதர கிராமத்தில் அமைந்துள்ள, "பாலமகாவ அஸ்வெத்துமே கும்புர தற்போது தோட்டம்" என்ற காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு.ஜீ.பி.திஸகநாயக்க அவர்களால் 2016.06.28ம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 7789ம் இலக்க வரைபடத்தின் 03 ம் இலக்க காணித் துண்டுக்கான எல்லைகள்

வடக்கு :- 7789 ம் இலக்க வரை படத்தின் 02 ம் இலக்க காணித் துண்டு.
கிழக்கு :- அம்பேபுஸ்ஸ - குருநாகல் பிரதான பாதை.
தெற்கு :- 7789 ம் இலக்க வரை படத்தின் 04 ம் இலக்க காணித் துண்டு.
மேற்கு :- நாங்கல்ல நீரோடை.

என்ற எல்லைக்குட்பட்ட இருபத்தி ஐந்து தசம் ஐந்து பேர்ச் (ஏ.00, ரூட்-00 பேர்ச் 25.5) எனப்படும் பூஜ்ஜியம் தசம் பூஜ்ஜியம் ஆறு நான்கு ஐந்து ஹெக்டயார் (0.0645, ஹெக்ட்) விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம்,செடி,பழ வகைகள், கட்டிடங்கள் உட்பட அனைத்தும் அடங்களாக. அந்த வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள பாதையைப் பொதுவாக பாவிப்பதற்கும் பரிபாலிப்பதற்குமான உரிமையுடன்.

**(பதிவு K 202/100 கேகாலை)**

**பணிப்பாளர் சபை கட்டளைப்படி.**

**பிரதேச முகாமையாளர்,**
**மக்கள் வங்கி, (குருநாகல்)**
**பிரதேச பிரதான அலுவலகம் 03,**
**வத்ஹிமி பாதை,**
**குருநாகல்**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

**மகாவலி வலயம் சார்ந்த கால்வாய்கள் மற்றும் குடியேற்ற பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

## இலங்கை மகாவலி அதிகார சபை

# பதவி வெற்றிடங்கள்

இலங்கை மகாவலி அதிகார சபையில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களுக்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி** : **வதிவிட வியாபார முகாமையாளர்**
**சேவை வகுதி** : **சிரேஷ்ட முகாமைத்துவம் (HM 1-1 சேவை வகுதி)**
**சம்பள அளவு** : ரூபா 81670 – 15x2,270 – 115,720/-

**தகைமைகள் (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

   **அத்துடன்**

   முகாமைத்துவம் / விவசாயம் / திட்டமிடல் / சமூக விஞ்ஞானம் / தொழில்நுட்பம் / நீர் முகாமைத்துவ விடயத்துறையில் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றை (Masters) பெற்றிருத்தல் / பதவிக்குரித்தான பாடத்துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனம் சார்ந்த அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

   **மற்றும்**

   அரச, அரச கூட்டுத்தாபன, சபையில், நியாயாதிக்க நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ'' மட்ட பதவியொன்றில் குறைந்தபட்சம் நிர்வாகம் / நீர்ப்பாசனம் / நீர் முகாமைத்துவம் / விவசாயம் / காணி / அபிவிருத்தி மற்றும் நிறுவன அபிவிருத்தித் துறையில் பதினைந்து (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2. பதவிக்குரித்தான பாடத்துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

   **மற்றும்**

   அரச, அரச கூட்டுத்தாபன, சபையில், நியாயாதிக்க நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ'' மட்ட பதவியொன்றில் குறைந்தபட்சம் நிர்வாகம் / நீர்ப்பாசனம் / நீர் முகாமைத்துவம் / விவசாயம் / காணி / அபிவிருத்தி மற்றும் நிறுவன அபிவிருத்தித் துறையில் பதினைந்து (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சேர்த்துக் கொள்ளப்படும் முறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம்

**பதவி** : **பௌதிக திட்டமிடுநர் (11ந் தரம்)**
**சேவை வகுதி** : **கனிஷ்ட முகாமைத்துவம் (JM 1-1 சேவை வகுதி)**
**சம்பள அளவு** : ரூபா 42,000 – 10x755 – 18x1,135 = 70,580.00

**தகைமைகள் (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நகரம் மற்றும் கிராம உருவாக்க திட்டமிடல் / ஆதன முகாமைத்துவ விடயத் துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்
2. பதவிக்குரித்தான விடயத்துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சேர்த்துக் கொள்ளப்படும் முறை** : எழுத்து போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம்

தம்மால் சுயமாகத் தயார் செய்து கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2021-03-19ம் திகதி அல்லது அதற்கு முன் பணிப்பாளர் நாயகம், இலங்கை மகாவலி அதிகார சபை, இல. 500, டீ. பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு-10. எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுவதுடன் குறித்த திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பது தெரிவிக்கப்படுகிறது. விண்ணப்பத்துடன் கல்வி / தொழில்சார் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும். அவ்வாறு சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இது தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் உரிமையை இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

கவனிக்கவும்: விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தில் அந்தந்த பதவிக்குரித்தான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை மகாவலி அதிகார சபை.**

# பெறுகை அறிவித்தல்

## ஆயுர்வேத திணைக்களம்

**சுத்திகரிப்புச் சேவைகள், பாதுகாப்புச் சேவைகள், பச்சை மூலிகைகள், உலர்ந்த மூலிகைகள், பச்சை/ உலர் உணவுகள். சமைத்த உணவுகள், உலர்ந்த விறகுகள், சலவைச் சேவைகள் மற்றும் எரிவாயுவை வழங்குவதற்காக**

# விலைமனுக்கள் கோரல்

2021 ஏப்ரல் மாதம் 01ஆம் திகதி முதல் 2022 மார்ச் மாதம் 31ஆம் திகதி வரையான காலத்திற்கு நாவின்ன ஆயுர்வேத திணைக்களம் மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்களுக்குத் தேவையான பின்வரும் வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக ஆயுர்வேதத் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் இயைபுடைய வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

I. சுத்திகரிப்புச் சேவைகள் வழங்குதல் (கன்னெலிய, பல்லேகலை, பட்டிபொல மூலிகைத் தோட்டங்கள் தவிர)
II பாதுகாப்புச் சேவைகள் வழங்குதல்

1. தலைமை அலுவலகம், நாவின்ன, மஹரகம.
2. உள்நாட்டு வைத்திய முறை தொடர்பான தேசிய நிறுவனம், நாவின்ன
3. ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம், நாவின்ன
4. ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, பொரளை
5. கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத வைத்தியசாலை, யக்கல.
6. ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி
7. சித்த ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, திருகோணமலை
8. ஆயுர்வேத வைத்தியசாலை, மஞ்சந்தொடுவாய்
9. ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, அம்பாறை
10. ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை
11. ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, நிந்தவூர்
12. ஆயுர்வேத வைத்தியசாலை, மதவாச்சி
13. ஆயுர்வேத வைத்தியசாலை, மிஹிந்தலை.
14. ஆயுர்வேத மூலிகைத் தோட்டம், பின்னதுவ.
15. ஆயுர்வேத மூலிகைத் தோட்டம், பத்கொட
16. ஆயுர்வேத மூலிகைத் தோட்டம், கிராந்துருகோட்டே
17. ஆயுர்வேத மூலிகைத் தோட்டம், கன்னெலிய
18. ஆயுர்வேத மூலிகைத் தோட்டம், பல்லேகலை
19. ஆயுர்வேத மூலிகைத் தோட்டம், பட்டிபொல

III பச்சை மூலிகைகள் வழங்குதல் (ஹம்பாந்தோட்டை மற்றும் மதவாச்சி, திருகோணமலை வைத்தியசாலைகள் தவிர)
IV உலர்ந்த மருந்துகள் வழங்குதல் (நிந்தவூர் வைத்தியசாலை தவிர)
V உலர்ந்த / உலராத உணவுகள் வழங்குதல் (நிந்தவூர், அம்பாறை, திருகோணமலை வைத்தியசாலைகள் தவிர)

1. தலைமை அலுவலகம், நாவின்ன, மஹரகம.
2. ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, பொரளை
3. கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத வைத்தியசாலை, யக்கல.
4. ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, நிந்தவூர்
5. சித்த ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, திருகோணமலை
6. ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி
7. ஆயுர்வேத வைத்தியசாலை, மஞ்சந்தொடுவாய்
8. ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, அம்பாறை
9. ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, மதவாச்சி
10. ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை

VI சமைத்த உணவு வழங்குதல் } ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, அம்பாறை

VII உலர்ந்த விறகுகள் வழங்குதல்

1. ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, பொரளை
2. ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி
3. ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை

VIII சலவைச் சேவைகள் வழங்குதல்
IX எரிவாயு வழங்குதல் (உள்நாட்டு வைத்திய முறை தொடர்பான தேசிய நிறுவனம் தவிர)

1. உள்நாட்டு வைத்திய முறை தொடர்பான தேசிய நிறுவனம், நாவின்ன
2. ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம், நாவின்ன
3. கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத வைத்தியசாலை, யக்கல.
4. ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, பொரளை
5. ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, அம்பாறை
6. ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி
7. ஆயுர்வேத வைத்தியசாலை, மஞ்சந்தொடுவாய்
8. ஆயுர்வேத வைத்தியசாலை, மதவாச்சி
9. ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை
10. சித்த ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, திருகோணமலை

03. விலைமனு ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு
விலைமனு ஆவணங்களை சமர்ப்பிக்கும் விலைமனுதாரர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3.1 வியாபாரம் பதிவு செய்யப்பட்டுள்ளதென்பதை உறுதி செய்வதற்காக பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை விலைமனு ஆவணங்களுடன் இணைத்தல் வேண்டும்.
3.2 உலர்ந்த / உலராத / சமைத்த உணவுகள், எரிவாயு, பிளக்கப்பட்ட விறகுகள் வழங்குவதற்கு எதிர்பார்க்கும் ஒப்பந்தக்காரர்கள் மூன்று வருட அனுபவத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் அதை ஆவணம் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.
3.3 சலவைச் சேவையை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் ஒப்பந்தக்காரர்கள் இரண்டு வருட அனுபவத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அதை ஆவணம் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.
3.4 பச்சை மூலிகைகள் / உலர்ந்த மூலிகைகள் வழங்குவதற்கு எதிர்பார்க்கும் ஒப்பந்தக்காரர்கள் இரண்டு வருட அனுபவத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மேலதிகத் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும். அதை ஆவணம் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.
3.5 சுத்திகரிப்பு சேவைகள் மற்றும் பாதுகாப்பு சேவைகள் தொடர்பில் விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்ய முன்வரும் வழங்குநர்கள், தொழிற் சட்டங்களைக் கடைப்பிடிப்பதாக தொழிலாளர் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3.6 சலவைச் சேவைகள் மற்றும் பாதுகாப்பு சேவைகள் தொடர்பில் விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்ய முன்வரும் வழங்குநர்கள், தமது வியாபாரத்தின் முறையான தன்மை தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகரிடம் பெற்றுக்கொண்ட தகுதிச் சான்றிதழை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3.7 இயைபுடைய பிரதேசத்தின் வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி வழங்கல் மற்றும் சேவைகளுக்காக விலைகளைச் சமர்ப்பிப்பதற்கு விரும்பும் நபர்கள் அல்லது நிறுவனங்கள், அதற்கான விலைமனு ஆவணங்களை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம எனும் முகவரியில் அமைந்துள்ள ஆயுர்வேத திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திலுள்ள வழங்கல் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

அல்லாவிடில் www.ayurveda.gov.lk எனும் ஆயுர்வேத திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் விலைமனு ஆவணங்களை தரவிறக்கம் (download) செய்து கொள்ளலாம்.

விலைமனுக்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் திகதி 2021 மார்ச் மாதம் 24ஆம் திகதி பி.ப. 3.00 மணியாகும்.

விலைமனு ஆவணங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் மற்றும் திகதி 2021 மார்ச் மாதம் 26ஆம் திகதி மு.ப. 10.00 மணியாகும்.

04. பெறுகைக் கட்டணங்கள்
மேற்படி 02 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல் மற்றும் சேவைகளுக்காக செலுத்த வேண்டிய கேள்விக் கட்டணம் பின்வருமாறாகும். ஒவ்வொரு நிறுவனத்திற்காகவும் வெவ்வேறான கேள்விக் கட்டணங்கள் செலுத்துதல் வேண்டும்.

| | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|
| VII, VIII கேள்விகளுக்காக | ரூபா 1,000.00 |
| I, III, IV, V, VI, IX கேள்விகளுக்காக | ரூபா 3,500.00 |
| II கேள்வியில் 1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13,15,16 நிறுவனங்களுக்காக | ரூபா 3,500.00 வீதம் |
| II கேள்வியில் 14,17,18,19 நிறுவனங்களுக்காக | ரூபா 1,000.00 வீதம் |

இந்த பெறுகைக் கட்டணத்தை ஆயுர்வேத திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அந்தப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விலைமனு ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும். அல்லாவிடில் ''ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேத திணைக்களம்'' பெயரில் இலங்கை வங்கி, மஹரகம கிளையில் பேணப்படும் 7041294 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைத்து, அந்த வைப்புச் சீட்டை விலைமனு ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

06. ஒவ்வொரு நிறுவனங்களின் வழங்கல் மற்றும் சேவைகளுக்காக வெவ்வேறாக விலைமனு ஆவணத்தின் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைமனுப் பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களை இரு பிரதிகளில் பூர்த்தி செய்து ஒவ்வொரு பிரதியையும் வெவ்வேறான உறைகளில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வழங்கல் மற்றும் சேவையின் பெயர் மற்றும் இயைபுடைய நிறுவனத்தின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு ஒரு உறையில் ''மூலப் பிரதி'' எனவும், மற்றைய உறையில் ''நகல் பிரதி'' எனவும் குறிப்பிடுதல் வேண்டும். பின் அவ்விரு உறைகளையும் ''தலைவர், பெறுகைக் குழு, ஆயுர்வேத திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் ஆயுர்வேத திணைக்களத்தின் பிரதான கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும்.

07. அனைத்து விலைமனுக்களும் 2021 மார்ச் மாதம் 26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் ஏற்றக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து அவைகள் திறக்கப்படும் என்பதால் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவருக்கு தமது ஆளடையாளத்தை உறுதி செய்ததன் பின் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம். பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் விலைமனு ஆவணங்களை, 2021 மார்ச் மாதம் 26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஏற்றுக்கொள்ளப்படுவது நிறைவடைவதால், அந்த விலைமனு ஆவணங்கள் திணைக்களத்திற்கு கிடைத்துள்ளதா என விண்ணப்பதாரர்கள் உறுதி செய்து கொள்ளல் வேண்டும். அதன் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

08. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானம் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

**கே.டி.சி.எஸ். குமாரதுங்க,**
**ஆயுர்வேத ஆணையாளர் மற்றும் பெறுகைக் குழுவின் தலைவர்,**
**ஆயுர்வேத திணைக்களம்,**
**பழைய கொட்டாவ வீதி, நாவின்ன,**
**மஹரகம.**

# வாகன ஏல விற்பனைக்கான விலைமனுக் கோரல்

## காணி ஆணையாளர் திணைக்களம் - தென் மாகாணம்

தென் மாகாணத்தின் காணி ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கீழே விபரிக்கப்படும் வாகனங்களை விற்பனை செய்வதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | வாகன இலக்கம் | வகை | உற்பத்தி வருடம் | வாகனத்தை நிறுத்தி உள்ள இடம் | செஸி இல; மற்றும் என்ஜின் இலக்கம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்புத் தொகை. |
|---|---|---|---|---|---|---|
| 01 | 52 - 2935 | Mitsubishi L - 200 கெப் வண்டி | 1991 | உதவிக் காணி ஆணையாளர் பணிமனை, ருஹுணு மாகம்புர நிர்வாக கட்டிடம் சிரிபோபுர, ஹம்பாந்தோட்டை | CINK 340 MP - 00736 4 D 56 DR 6991 | ரூ. 10,000/- |
| 02 | 51 - 0674 | ISUZUTFR 54 - OPEN (பதிவு இரத்து செய்யப்பட்டுள்ளது. | | தெ.மா. காணி ஆணையாளர் திணைக்களம், இல. 211, வக்வெல்ல வீதி, காலி. | கழிக்கப்பட்ட வாகனமாகும். | ரூ. 2,000/- |

இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு தென் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் www.landsp.lk இணையதளத்திற்கு (புதிய செய்திகள்) மற்றும் திணைக்களத்தின் பெயர் குறிப்பிடப்படும் முக நூலிற்கு பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**டி.ஜீ. சரத்குமார - காணி ஆணையாளர்,**
**காணி ஆணையாளர் திணைக்களம் - தென் மாகாணம்,**
**2021.03.02ஆம் திகதி**

**தென் மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்,**
**இல. 211, வக்வெல்ல வீதி, காலி.**

**இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை (SLPA)**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | விலைமனுப்பிணைத் தொகை (ரூபா) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/21/ PT/02/051 | **Wire Rope for Mitsui RTG Cranes at JCT III/IV** | 48,000.00 | 1,000.00 | 2021.03.19 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/ PT/02/052 | **Main Hoist wire Ropes for 41T ZPMC Container Cranes at JCT – 06 Nos.** | 48,000.00 | 1,000.00 | 2021.03.19 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுமென விலைமனுதாரர்கள் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக, மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தத்தின் முழுமையான காலப்பகுதியிலும் கூறப்பட்ட சட்டத்திற்கு கண்டிப்பாக அமைந்தொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளருக்காக மற்றும் அவர் சார்பாக அல்லது வழங்குனரொருவருக்கு முகவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்பட விரும்பினால், அவர், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவை மேற்கொண்டு உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.

3. ஆகக் குறைந்தது கடந்த மூன்று (3) வருடங்களில் மேலே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் விலைமனுதாரர் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை பிரதான முகாமையாளரிடமிருந்து (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்) பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 04 ஆம் நிரலில் வழங்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை 2021 மார்ச் 05 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் இறுதித் திகதிக்கு முன்னைய நாள் வரை மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இறுதி நேரத்தில் கீழேயுள்ள முகவரியில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்)**
**வழங்கல்கள் பிரிவு**
**இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு - 01.**

**தொலைபேசி இலக்கங்கள் : 2482231, 2483338, 2482499, 2482832,2482409, 2482652, 2483024,2482638.**
**தொலைநகல் இலக்கங்கள் : 2381652, 2470443.**

# பெறுகை அறிவித்தல்

## ஊனமுற்றவர்களுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் – 2021

### ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களம்

ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் ஊனமுற்றவர்களுக்கான பின்வரும் உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு உள்நாட்டு உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் இறக்குமதியாளர்களிடமிருந்து இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | வகை | கொள்வனவு செய்ய உத்தேசிக்கும் அளவு | மீளளிக்கப்படும் பிணைத் தொகை | | மீளளிக்கப் படாத மாதிரிப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| | | | பணமாக (1%) | வங்கி (2%) | |
| 01 | சாதாரண சக்கர நாற்காலிகள் | 325 | 91,000.00 | 181,000.00 | 3,500.00 |
| 02. | கொமட் சகிதம் சக்கர நாற்காலிகள் | 225 | | | |
| 03. | எக்ரிட் சக்கர நாற்காலிகள் | வேண்டுகோள் பிரகாரம் | | | |
| 04. | சிறுவர் சக்கர நாற்காலிகள் | 20 | | | |
| 05 | டிரைசிக்கள் | 15 | | | |
| 06 | மூக்குக் கண்ணாடிகள் | 2000 | 110,000.00 | 220,000.00 | 3,500.00 |
| 07 | செவிப்புல உபகரணங்கள் | 150 | | | |
| 08 | அக்குள் தாங்கிகள் / கைப்பிடிகள் | 625 | 50,000.00 | 100,000.00 | 3,500.00 |
| 09 | நடப்பதற்கான சட்டம் / ஊன்றுகோல்கள் | 250 | | | |
| 10 | மடிக்கக்கூடிய ரொலிடர் | வேண்டுகோள் பிரகாரம் | | | |
| 11 | செயற்கை கை கால்கள், மின்சாரத்தால் இயங்கும் கை கால்கள் | வேண்டுகோள் பிரகாரம் | | | |
| 12 | வாயு மெத்தைகள் | 90 | | | |

02. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான மாதிரிப் படிவங்களை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணத்தை ஊவா மாகாண சமூக சேவைகள் பணிப்பாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்ததன் பின் பெற்றுக்கொள்ளலாம். (சகல கட்டணங்களும் இலங்கையில் செல்லுபடியாகும் பண அலகில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்) விலைமனுக்கள் வழங்கப்படுதல், ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல் என்பன பின்வருமாறு மேற்கொள்ளப்படும்.

**விலைமனுக்கள் வழங்கப்படுதல்** : 2021-03-08ஆம் திகதி முதல் பதுளை ஆர். எச். குணவர்தன மாவத்தையில் அமைந்துள்ள ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தில்.

**விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல்** : 2021-03-29ஆம் திகதி அல்லது அன்றைய தினத்திற்கு முன் கிடைக்கும் வகையில் ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது 2021-03-29ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

**விலைமனுக்கள் திறக்கப்படுதல்** : 2021-03-29ஆம் திகதி விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்து உடனடுத்து, ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தில்.

மேலும் இது தொடர்பான மேலதிக விபரங்களை ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திற்கு வருகை தந்து அல்லது 055-2230787 மற்றும் 055-4934905 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக விசாரித்தறியலாம். ஊனமுற்றவர்களுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**2021-03-05ஆம் திகதி,**
**பதுளை, ஆர். எச். குணவர்தன மாவத்தை,**
**ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தில்.**

**பீ.எம்.கே.ஜீ. பண்டார,**
**சமூக சேவைகள் பணிப்பாளர்,**
**பெறுகைக் குழுவின் தலைவர்.**

**1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி சுவீகரிப்பு (திருத்தல்) சட்டத்தின் திருத்தப்பட்டவாறான காணி சுவீகரிப்பு சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

எனது குறிப்பு இல:- Vada/sw/La.Acq/179
காணி அமைச்சின் இல:-
4-3/15/2015/VE/287

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டுகளை ஒரு பகிரங்கத் தேவைக்கு எடுத்துக்கொள்ள அரசாங்கம் உத்தேசித்திருக்கின்றது. மேலதிக விபரங்களுக்கு 2020ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 30ந் திகதி மற்றும் 2021 ஆம் ஆண்டு மாசி மாதம் 10ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் 2199/26, 2214/53ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | - வட மாகாணம் |
| மாவட்டம் | - யாழ்ப்பாணம் |
| பிரதேச செயலாளர் பிரிவு | - |
| வடமராட்சி தெற்கு | - மேற்கு, கரவெட்டி |
| கிராம சேவகர் பிரிவு | - J/370 துன்னாலை தெற்கு |
| கிராமம் | - துன்னாலை தெற்கு |
| ஆரம்ப வரைபட இல | - யா 2904 |
| காணித்துண்டு இல | - 1 தொடக்கம் 32 |
| விஸ்தீரணம் | - 1.0843 ஹெக்டயார் |

**பிரதேச செயலகம்**
**கரவெட்டி**

**திரு.ஈஸ்வரானந்தன் தயாரூபன்,**
**பிரதேச செயலாளர், பிரதேச செயலகம்,**
**கரவெட்டி**

---

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

# விலைமனு அறிவித்தல்

**TRANSPORTATION OF BITUMEN/ LUBRICANT DRUMS AND PALLETIZED LUBRICANT CANS AND OTHER FCL CONTAINERS OF CPC FOR THE YEAR 2021/2022**

**B/23/2021**

புகழ்வாய்ந்த போக்குவரத்து ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக Transportation of Bitumen/Lubricant Drums and Palletized Lubricant Cans and other FCL containers of CPC for the year 2021/ 2022 இற்கு திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் விலைமனுக்களை அழைக்கின்றார்.

(a) Owning a minimum fleet of 15 Nos. of 20 ft. FCL Container Lorries and are in a Position to supply 50 or more Container Lorries at a time for the transport of 20 ft. containers of weight not exceeding 24 Metric Tons containing drums of Bitumen/Lubricants, Palletized Lubricant Cans and other items ordered by the CPC.

and

(b) Owning a minimum fleet of 2 Nos. of 40 ft. FCL Container Lorries and are in a Position to supply 5 or more Container Lorries at a time for the transport of 40 ft. containers of weight not exceeding 35 Metric Tons containing drums of Bitumen/Lubricants, Palatised Lubricant Cans and other items ordered by the CPC.

ஒவ்வொரு தொகுதிக்கும் மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணமான 2000 ரூபாவை (அதாவது 1851.50 + 8% பெசேவ) செலுத்திய பின்னர் **2021.03.23** ஆம் திகதி வரை மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கு பொறுப்பாகவுள்ள முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரது அலுவலகத்திலிருந்து இவ்விலைமனுவிற்கான விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்து பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2021.03.24 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு மேலேயுள்ள முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கு பொறுப்பாகவுள்ள முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களின் மூடும் நேரம் முடிந்ததும் மூடப்பட்டு உடனடியாகவே திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

விலைமனுக்கள் பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கு பொறுப்பாகவுள்ள முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம்.

பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கு பொறுப்பாக வுள்ள முகாமையாளரிடமிருந்து தெளிவுறுத்தல்களை (ஏதுமிருப்பின்) கீழே வழங்கப்பட்டுள்ள தொலைபேசி மற்றும் தொலைநகல் இலக்கங்களினூடாக பெறுக் கொள்ளலாம்.

கோவிட்-19 தொற்று காரணமாக, விலைமனுதாரர்கள் **www.ceypetco.gov.lk** என்ற இ.பெ.கூ. இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாமென்பதுடன் அனைத்து பணக்கொடுப்பனவுகளும் மக்கள் வங்கியின் தலைமையலுவகத்தில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கான 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படலாம். விலைமனுவுடன் வங்கி பணப்பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை தயவு செய்து சமர்ப்பிக்கவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**1 ஆம் மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**தொலைபேசி : 011 5455331**
**தொலைநகல் : 011 5455424**

---

**Best way to fulfil your Future Dreams**

**Marriage Proposals**

**in the**

**Sunday Observer**

---

## கடற்றொழில் அமைச்சு

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால் வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

**இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை**

# கேள்வி நீடிப்பு அறிவித்தல் விலைமனுக்களுக்கான அழைப்பு

**ஒப்பந்த இல.: NQ/DPC/2021/NCB/G/02**

**பெறுகைப் பெயர்: புதிய வகைகள் அலங்கார மீன் (Brooders) இறக்குமதி, வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்.**

மேலேயுள்ள உரித்தான கேள்வி தொடர்பாக 2021 பெப்ருவரி 22 ஆம் திகதியன்று டெயிலி நியுஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்கள் தொடர்பானது.

மேலேயுள்ள கேள்வியின் மூடும் நேரம் மற்றும் திகதியானது 2021 மார்ச் 22 ஆம் திகதி திங்கட்கிழமையன்று பி.ப. 2 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

தொலைபேசி : 011-278 6544/ 011 278 6495
தொலைநகல் : 011 278 6493/ 011 278 6575
மின்னஞ்சல் : po@naqda.gov.lk
இணையம் : www.naqda.gov.lk

**தலைவர்,**
**இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை.**
**41/ 1, புதிய பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**தஹம் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குகள் கல்வி இராஜாங்க அமைச்சு**

**கல்வி அமைச்சு**

**பிரிவெனாக்களுக்கான மாணவர் மேசைகள் மற்றும் கதிரைகளுக்கான பெறுகை**

**ஒப்பந்த இல. ED/ST/BUD/04/03/21/G-10**

1. பிரிவெனாக்களுக்கான மாணவர் மேசைகள் மற்றும் கதிரைகளுக்கான பெறுகைக்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தஹம் பாடசாலைகள், பிரிவெனாக்கள், பிக்குகள் கல்வி இராஜாங்க அமைச்சு செயலாளரின் சார்பில் இராஜாங்க அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனு ஆவணங்களின் தரப்பட்டுள்ளன. எதிர்பார்க்கப்படும் விநியோகக் காலம் ஏற்றுக்கொள்ளும் கடிதம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 10 முதல் 12 வாரங்களாகும் சகல விலைக்கோரல்களுடனும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள வகையில் விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| விபரம் | விலைமனுப் பிணை முறித்தொகை (ரூபா) |
|---|---|
| 5,000 மாணவர் மேசைகள், 5,000 மாணவர் கதிரைகள் | 300,000.00 |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி விலைகோரல் (NCB) மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
3. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை 'இசுறுபாய' கல்வி அமைச்சின் 4ம் மாடியிலுள்ள தஹம் பாடசாலைகள், பிரிவெனாக்கள், பிக்குகள் கல்வி இராஜாங்க அமைச்சின் பிரதான கணக்காளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011-2787578) மற்றும் 2021 மார்ச் 25ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையான காலத்தில் இலவசமாக விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா கட்டணத்தை செலுத்துவதன் பேரில் தஹம் பாடசாலைகள், பிரிவெனாக்கள், பிக்குகள் கல்வி இராஜாங்க அமைச்சின் பிரதான கணக்காளர் அலுவலகத்திலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாக செலுத்துதல் வேண்டும்.
5. விலைமனுக்களை 2021 மார்ச் 26ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் பிரதான கணக்காளர், தஹம் பாடசாலைகள், பிரிவெனாக்கள், பிக்குகள் கல்வி இராஜாங்க அமைச்சு, 4ஆம் மாடி, இசுறுபாய, பத்தரமுல்லை எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும். அதன் பின்னர் பின்வரும் முகவரிக்கு தாமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.

**செயலாளர்,**
**தஹம் பாடசாலைகள், பிரிவெனாக்கள்,**
**பிக்குகள் கல்வி இராஜாங்க அமைச்சு,**
**"இசுறுபாய",**
**பத்தரமுல்ல.**

---

**இலங்கை புகையிரத சேவைகள்**

## பெறுகை அறிவித்தல்

**Procurement for the supply of Junction Fish Plates, Bolts and Nuts and 88 Lbs. Dog Spikes to Sri Lanka Railways – Procurement No. SRS/F.7741**

01. சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் அடிப்படையில் கீழே காட்டப்பட்டவாறு இலங்கை புகையிரத சேவைகளுக்காக Junction Fish Plates, Bolts & Nuts and Dog Spikes ஆகியவற்றின் வழங்கலின் பெறுகைக்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுத் (உயர் மட்டம்) தலைவர் பெற்றுக் கொள்வார். விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை நேரடியாகவோ அல்லது தரஅங்கீகாரம் பெற்ற இலங்கையில் பதிவு பெற்ற அவர்களினால் அற்றோர்ணித்தத்துவம் வழங்கப்பட்ட முகவரொருவருடாகவும் சமர்ப்பிக்கலாம். பின்வரும் அம்சங்களை சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் அடிப்படையில் வழங்குவதற்காக பாவிக்கப்படும் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட செயற்பாட்டு சான்றிதழையும் உற்பத்தியாளர்கள்/ வழங்குனர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.

| அம்ச இல. | விளக்கம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Junction Fish Plates 88/90(A) Lbs. (04 holed) | 750 சோடிகள் |
| 02. | Junction Fish Plates 80/90(A)Lbs. (04 holed) | 500 சோடிகள் |
| 03. | Switch Heel Bolts with Nuts – 80/88 Lbs. | 6,000 எண்ணிக்கைகள் |
| 04. | Switch Heel Bolts with Nuts – 90 A Lbs. | 6,000 எண்ணிக்கைகள் |
| 05. | Crossing Bolts with Nuts 9"x 7/8'' | 3,000 எண்ணிக்கைகள் |
| 06. | Crossing Bolts with Nuts 10" x 7/8" | 3,000 எண்ணிக்கைகள் |
| 07. | Coach Screw with Ferrules for Concrete Sleepers | 1,000 எண்ணிக்கைகள் |
| 08. | Dog Spikes – 88 Lbs. | 30,000 எண்ணிக்கைகள் |
| 09. | Fish Bolts & Nuts 90A Lbs | 25,000 எண்ணிக்கைகள் |
| 10. | Fish Bolts & Nuts 80 Lbs | 6,000 எண்ணிக்கைகள் |

02. அம்ச இல. 01 மற்றும் 02 மற்றும் அம்ச இல. 03 இலிருந்து 10 ஆம் இலக்கம் வரையும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு வழங்கப்படும்.
03. 2021.04.19 ஆம் திகதியன்று இலங்கை நேரம் பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 8,250 ரூபாவை அல்லது இலகுவாக மாற்றக்கூடியதான நிகரான தொகையை செலுத்திய பின்னர், விலைமனுக்கள் ஆங்கில மொழியிலுள்ளதும் புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயங்களிலிருந்து பெறக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
04. விலைமனுக்கள் 2021.04.20 ஆம் திகதியன்று இலங்கை நேரம் பி.ப. 2 மணிக்கு மூடப்படும்.
05. விலைமனுதாரர் 325,000 ரூபாவிற்கான அல்லது இலகுவாக மாற்றக்கூடிய நிகரான தொகையை அவர்களின் விலைமனுவின் பகுதிக்கான தொகையாக விலைமனுப்பிணையாக வழங்கல் வேண்டும்.
06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே பின்வரும் முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
ஒல்கட் மாவத்தை, கொழும்பு-10.

07. விலைமனுக்கோரல் ஆவணங்கள் புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

**தொலைபேசி இலக்கங்கள் : 2438078/2436818**
**தொலைநகல் இலக்கம் : 2432044**
**மின்னஞ்சல் : srs.slr@gmail.com**
**இணையதளம் : www.railway.gov.lk**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்**

**குறிப்பீட்டு இல.: SRS/F.7741**

---

**BE BETTER INFORMED!**




**News you can trust now free on your mobile phone.**

**VISIT**
**apps.lakehouse.lk**

**DOWNLOAD TODAY!**

AVAILABLE AT

LAKE HOUSE

---

# வெற்றிடங்கள்

**கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்**
**தொழில்நுட்ப அமைச்சு**

**மேலதிக பணிப்பாளர் நாயகம் – நிர்வாகம் மற்றும் செயற்பாடுகள்.**
**பிரதான ஆய்வு நிபுணர்**
**சிரேஷ்ட ஆய்வு நிபுணர்**
**ஆய்வு நிபுணர்**
**ஆய்வு பொறியியலாளர்**
**பிரதான களஞ்சிய அதிகாரி**
**கணனி அமைப்பு உதவியாளர்**

பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி - 2021.03.19

மேலதிக விபரங்களுக்கு 2021.03.05 Daily News பத்திரிகையை பாருங்கள்

**பணிப்பாளர் நாயகம் / பி.நி.அ**
**கைத்தொழில்நுட்ப நிறுவனம்.**

---

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
**RDB Pradheshiya Sanwardhana Bank**

(காலத்திற்கு காலம் மறுசீரமைக்கப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் சட்டத்தின் (விஷேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

**கடன் கணக்கு இலக்கம் 521059400008**

கடன்பட்டவர்களின் பெயர்கள் :
1. இராஜமுனிகே துசீர நிலந்த இரந்தெனிய
2. வீரசேகரகே மேபல்
3. இரத்நாயக்க முதியான்சேலாகே சந்ராணி புஷ்பலதா எனும் சுவர்ணா மாஜரி கிறிஸ்டோபர்

**2019/07/12 ஆம் திகதி நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையின் 2019/10 ஆம் இலக்க கூட்டத்தில் கீழ்கண்டவாறு விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

பிரதேச அபிவிருத்தி வங்கியின் சார்பில் வெள்ளவாய, புது வீதி சட்டத்தரணியும் பகிரங்க நொத்தாரிசுமான திரு. அஜித் லியன ஆராச்சி அவர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட 2017.04.25 திகதிய 1965 இலக்க ஈட்டு முறியின் பிரகாரம் எமது பிபிலை கிளையில் பெற்றுக்கொண்ட ரூபா 05 மில்லியன் கடன் தொடர்பில் வங்கிக்கு செலுத்த வேண்டிய பணம்,

கடன்பட்டோர் என அழைக்கப்படும் ஹாலிஎல, போகஹாமடித்த, ஜயந்திபுர, 21 எனும் முகவரியில் வசித்த (காலஞ்சென்ற) வீரசேகரகே மேபல் (தேசிய அடையாள அட்டை இல.336660254V) மற்றும் அதே முகவரியில் வசிக்கும் இரத்நாயக்க முதியான்சேலாகே சந்ராணி புஷ்பலதா எனும் சுவர்ணா மாஜரி கிறிஸ்டோபர் (தேசிய அடையாள அட்டை இல.546763820V) மற்றும் அதே முகவரியில் வசிக்கும் இராஜமுனிகே துசீர நிலந்த இரந்தெனிய (தேசிய அடையாள அட்டை இல.783294184V) ஆகியோரினால் கடன் மீளச்செலுத்துதல் கைவிடப்பட்டுள்ளது என்பதனால் கீழே விபரிக்கப்பட்டுள்ள,

1) 1965 இலக்க ஈட்டு முறியின் கீழ் 2019.05.24 திகதியில் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு வருமதியாக உள்ள ரூபா.3,832,400/00 (ரூபா முப்பத்து எட்டு இலட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து நாநூறு) கடன் தொகை மற்றும் அத்திகதியில் வருமதியாக உள்ள வட்டி ரூபா 517,157/14 (ரூபா ஐந்து இலட்சத்து பதின் ஏழாயிரத்து நூற்று ஐம்பத்து ஏழு சதம் பதின்நான்கு) அத்திகதியில் வருமதியாக உள்ள கட்டணங்கள் ரூபா 36,336/86 (ரூபா. முப்பத்து ஆறாயிரத்து முந்நூற்று முப்பத்து ஆறு சதம் எண்பத்து ஆறு) உட்பட முழுத்தொகை ரூபா 4,385,894/00 (ரூபா. நாற்பத்து மூன்று இலட்சத்து எண்பத்து ஐயாயிரத்து எந்நூற்று தொண்ணூற்று நான்கு) உடன் 2019.05.25 திகதி முதல் ஏலவிற்பனை திகதி வரை 20% வருடாந்த வட்டிவீதத்தில் பெறவேண்டிய முழு வட்டி மற்றும், பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, விளம்பர கட்டணம் உட்பட ஏல விற்பனை செலவுகளுடன் மேலும் சட்டரீதியான செலவுகள் ஏதேனும் வங்கிக்கு வருமதியாக இருப்பின் அவற்றையும் சேர்த்து அறவிடுவதற்கு கடனாளிகளினால் 1965 ஈட்டு முறியின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு அடமானமாக வைக்கப்பட்டுள்ள கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும்.

மேலும் அவ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை ஏலவிற்பனை செய்யும் அதிகாரம், இலக்கம் 24 டொரிங்டன் வீதி, கண்டி எனும் முகவரியில் உள்ள உத்தரவு பெற்ற ஏல விற்பனைதாரர் ஷொக்மன் & சமரவிக்ரம நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**மேற்கூறப்பட்ட முதலாவது உப அட்டவணை**

ஊவா மாகாணத்தில், பதுளை மாவட்டத்தில் ஹாலிஎல பிரதேச வருவாய் அதிகாரி பிரிவிற்குள், போகொட கோரளையில், திக்வெல்ல கிராம அலுவலர் பிரிவில் திக்வெல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு அவரது பொறுப்பில் இருக்கும் FVP 95 இலக்க காணி வரைபடத்தில் 324 ஆம் இலக்க காணித்துண்டு என காட்டப்பட்டுள்ள, பூஜ்ஜியம் புள்ளி பூஜ்ஜியம் ஐந்து ஒன்று ஹெக்டயர் (ஹெக் 0.051) விசாலமானதென கணிக்கப்பட்டுள்ள ஜயந்திபுர என அழைக்கப்படும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுக்குட்பட்ட அரச காணித்துண்டு

| | |
|---|---|
| வடக்கே | :- துண்டு இலக்கம் 316 மற்றும் 315 |
| கிழக்கே | :- துண்டு இலக்கம் 325 |
| தெற்கே | :- துண்டு இலக்கம் 350 மற்றும் 351 |
| மேற்கே | :- துண்டு இலக்கம் 351 மற்றும் 316 |

ஆகிய எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் காணியும் அதன் மீது அமைந்துள்ள அனைத்தும் உள்ளடங்கிய ஆதனம்.

**மேற்குறிப்பிடப்பட்ட காணிக்கு 2014.08.12 ஆம் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் என்.ஏ,சீ.திலகரட்ன அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட 720 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் உப அட்டவணை பின்வருமாறு.**

ஊவா மாகாணத்தில், பதுளை மாவட்டத்தில் ஹாலிஎல பிரதேச வருவாய் அதிகாரி பிரிவிற்குள், போகொட கோரளையில், திக்வெல்ல கிராம அலுவலர் பிரிவில் திக்வெல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ள மேற்படி உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் என்.ஏ,சீ.திலகரட்ன அவர்களினால் 2014.08.12 ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 729 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் அதில் துண்டு 01 என காட்டப்படும் காணித்துண்டுக்கு எல்லைகள் :-

| | |
|---|---|
| வடக்கே | :- துண்டு A மற்றும் மதிற்சுவர் |
| கிழக்கே | :- FVP 95 இல் துண்டு இலக்கம் 325 |
| தெற்கே | :- துண்டு B |
| மேற்கே | :- துண்டு B மற்றும் பாதை (பிரதேச சபை) |

ஆகிய எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் 19.76 பேர்ச்சஸ் (ஏக்.00 றூட் 00 பேர் 19.76) எனும் 0.0500 ஹெக்டயர் விசாலமான காணியும் அதன் மீது அமைந்துள்ள அனைத்தும் உள்ளடங்கிய ஆதனம்.

**பணிப்பாளர் சபை கட்டளையின்படி**

**பணிப்பாளர் சபை செயலாளர்.**

**பிரதேச அபிவிருத்தி வங்கி,**
**பிரதான அலுவலகம்,**
**இல.933, கண்டி வீதி,**
**வெதமுல்ல,**
**களனி.**

# பிரசித்த ஏல விற்பனை

பிப்ரவரி மாதம் 6ம் 7ம், ஜீன் மாதம் 09ம் 10ம், ஜீலை மாதம் 13ம் 14ம் ஆகஸ்ட் மாதம் 11ம் 12ம், செப்டம்பர் மாதம் 10ம், 11ம், அக்டோபர் மாதம் 14ம், 15ம், மற்றும் நவம்பர் மாதம் 10ம,11ம் 2020 திகதிகளில் தினமின, தினகரன், டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளில் மற்றும் டிசம்பர் மாதம் 09ம்,10ம் 2020, ஜனவரி மாதம் 11ம், 22ம், 2021 மற்றும் பிப்ரவரி மாதம் 9ம் 10ம் திகதிகளில் மவ்பிமா, தினகரன், மற்றும் சிலோன் டுடே ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. எல் பீ பினான்ஸ் பி எல் சி இன் தங்க நகை பாதுகாப்புகளில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த முடியாத காரணங்களினால் மார்ச், ஜீலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் 2020 மற்றும் ஜனவரி, பிப்ரவரி 2021 மாதங்களில் ஏலவிற்பனைக்கு விட தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகள் மற்றும் மார்ச் மாதம் 2021 ஏலவிற்பனை நடத்த தீர்மானிக்கபட்டுள்ள தங்க நகைகள் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன் பட்டோருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| கிரிபத்கொடை, தெல்கொடை, கடவத்தை, களனி, கடுவெல, கிரிபத்கொடை- மாகொல, கனேமுல்லை, பொலன்னறுவை, வத்தளை, கந்தானை, ராகம, ஜா-எல, எலகன்த, கொத்தாடுவ புதிய நகரம், கொலன்னாவ, தொட்டலங்க, தெமடகொட, கொம்பணித்தெரு, மஹியங்கனை, மொனராகலை, வெலிமடை, மெதிரிகிரிய, எம்பிலிப்பிட்டி, திஸ்ஸமஹாராம, தெஹியத்தகண்டி நுவரெலியா, சிலாபம், கொச்சிக்கடை- நீர்கொழும்பு, நீர்கொழும்பு, நீர்கொழும்பு நகர கிளை, வென்னப்புவ, மாரவில, திவுலபிடிய, நாரம்மல, குளியாபிட்டி, குருநாகல், குருநாகல் பிறீமியர் நிலையம், குருநாகல் நகர கிளை. அளுத்கம, களுத்துறை, பேருவளை, | 24 மார்ச் 2021 |
| ஹோமாகம, மஹரகம நகர கிளை, மஹரகம, கொட்டாவ, தெஹிவளை, மொறட்டுமுல்லை, மொறட்டுவை, கெசெல்வத்தை-பாணந்துறை, டெல்கந்த, கிருலப்பனை, நுகேகொடை, கோட்டே, பத்தரமுல்லை, ராஜகிரிய, நாரஹேன்பிட்டி, வாட்டுவ, தெஹிவளை நகர கிளை, பொரலஸ்கமுவ, பிலியந்தலை, தர்கா நகர், பாணந்துறை, ரத்மலான கல்கிச, அத்திடிய, கொட்டாஞ்சேனை, அளுத்மாவத்தை கொழும்பு 15, மட்டக்குளி, மோதறை, கிராண்ட்பாஸ் சுலைமான் கொழும்பு 14, கிராண்ட்பாஸ் ஸ்டேடியம் கொழும்பு 14, கிராண்ட்பாஸ், வெள்ளவத்தை, பிறீமியர் கொழும்பு 07, கொள்ளுப்பிட்டி நகர கிளை, தலைமை அலுவலகம் கொழும்பு 07, கொள்ளுப்பிட்டி கார்ப்பரேட் அலுவலகம் கொழும்பு 03. | 25 மார்ச் 2021 |
| மாத்தறை, மாத்தறை நகர கிளை, தெனியாய, நெலுவ, அக்குரஸ்ஸ, எல்பிட்டிய, பிட்டிகல, ஹொரணை, பண்டாரகம, பிலிமத்தலாவை, கண்டி, கண்டி நகரம் கிளை, கடுகஸ்தோட்டை, நாவலப்பிட்டி, மாத்தளை, கெலிஓயா, மாலபே, புத்தளம், மத்துகம, பதுரெலிய, ஆனமடுவ, ஜம்பெட்டா வீதி கிளை, டாம் வீதி கிளை, டீன்ஸ் வீதி கிளை, மருதானை, பொரளை, பலாங்கொடை, அவிசாவளை, எஹெலியகொட, ரத்தினபுரி, ஹங்வெல்ல, கேகாலை, திஹாரிய, வரக்காபொல, நிட்டம்புவ, கம்பஹா, மீனுவங்கொட. | 26 மார்ச் 2021 |
| கராபிட்டிய, காலி தங்காலை, அம்பலாங்கொட, பதுளை, பதுளை நகர கிளை, பண்டாரவளை, புசல்லாவை, கம்பளை, கம்பளை நகர கிளை, சங்கராஜ மாவத்தை கொழும்பு 10, மாளிகாவத்த, செட்டியார் தெரு, கொஹுவல, ஹட்டன், மஸ்கெலியா, தம்புள்ளை, கெக்கிராவ, அனுராதபுரம் நகர கிளை, அனுராதபுரம், மதவாச்சி, தம்புத்தேகம, செங்கலடி, வாழைச்சேனை, மன்னார், சாவகச்சேரி, கிண்ணியா, திருகோணமலை, வவுனியா, கொக்கட்டிக்சோலை, காத்தான்குடி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் பிறீமியர், யாழ்ப்பாண நகரம், அம்பாறை, பொத்துவில், அக்கரைப்பற்று, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, திருநெல்வேலி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, சாய்ந்தமருது, சம்மாந்துறை, கல்முனை, மல்லாவி. | 27 மார்ச் 2021 |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம்

**LB FINANCE**

**சிரேஷ்டமுகாமையாளர் தங்கக் கடன்பிரிவு எல்.பீ. ஃபினான்ஸ் பீ.எல்.சீ.**
275/75, பேராசியர் ஸ்ரான்லி விஜேசுந்தர மாவத்தை, (OPA கட்டடம்) கொழும்பு 07.

## 1964 ஆம் ஆண்டின் திருத்தப்பட்டதன் படி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல: 28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்.

எனது இல :- 4/1/1/29
காணி அமைச்சின் குறிப்பு இல :- 4-3/7/2016/எச்டபிள்யூ/125

கீழே குறிப்பிடப்பட்டுள்ள இணை ஆவணம் பற்றிய விபரப்படுத்தும் காணியை அரசாங்கம் பெற்றுக்கொள்வதற்காக எதிர்பார்த்திருக்கின்றது. மேலதிக தகவல்களுக்காக இல 2204/26 க்கான 2020.12.04ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசின் அதிவிசேஷமான வர்த்தமான பத்திரிகையைப் பார்க்கவும்.

**இணை ஆவணம்**

| | |
|---|---|
| மாகாணம் | : வடமேற்கு |
| மாவட்டம் | : குருநாகல் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : குருநாகல் |
| கிராம சேவகர் பிரிவு | : இல. 833, கெட்டுவான, இல 834, குருநாகல் ஈசான, இல 835, குருநாகல் நகரம் கிழக்கு, இல 840 குருநாகல் நகர் கடை வீதி, இல 806, வெஹர மேற்கு, இல 841, குருநாகல் நகரம் தெற்கு, இல 839, குருநாகல் நகர மத்திய மற்றும் இல 837, குருநாகல் நகர மேற்கு, இல 839, குருநாகல் நகர மத்தி, இல 840, குருநாகல் கடை வீதி, மற்றும் இல 841, குருநாகல் நகரம் வடக்கு |
| கிராமம் | : குருநாகல் நகரம், பிரிவு இல 2, குளம், பிரிவு இல 3, மத்தி, பிரிவு இல 5, பொல்அத்தாபிட்டிய, பிரிவு இல 6, கெட்டுவான, மடமேகம, உடவல்பொல, வெஹர (பிரிவு), பிரிவு இல 11, மடமேகம (குருநாகல் மா நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதி) மற்றும் வெஹர, மத்தி, உடவல்பொல, பிரிவு இல 4, ரஜபீல்ல, பிரிவு இல 8, உடவல்பொல, பிரிவு இல 11 மற்றும் மடமேகம (குருநாகல் மா நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதி) |
| ஆரம்ப வரைபட இல | : ஆரம்ப வரைபட இல.கு2430<br>ஆரம்ப வரைபட இல.கு2433<br>ஆரம்ப வரைபட இல.கு2439 |
| துண்டு இல | : 01 தொடக்கம் 248 வரை (துண்டு 248)<br>: 01 தொடக்கம் 228 வரை (துண்டு 228)<br>01 தொடக்கம் 68 வரை (துண்டு 68) |
| விஸ்தீரணம் | : 1.5753 ஹெக்டயார்ஸ்<br>5.3944 ஹெக்டயார்ஸ்<br>1.3491 ஹெக்டயார்ஸ் |

**ஈ. எம். எம். எஸ். ஏக்கநாயக்க**
**பிரதேச செயலாளர்**
**குருநாகல்.**

**பிரதேச செயலாளர் காரியாலயத்தில்,**
**குருநாகல்.**
**2021.02.24**

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2021 மாச்சு 09ஆம் திகதி ஏலவிற்பனையினூடாக 45,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு.

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09121F119 | LKA18221I102 | LKA36422C115*** | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ.மில்.) | 10,000 | 10,000 | 25,000 | 45,000 |
| ஏற்றுக்கொள்ளலுக்கான உயர்ந்தபட்ச விளைவு வீதம் ** | | | 5.10 | |

| | |
|---|---|
| ஏலவிற்பனைத் திகதி | : 2021 மாச்சு 09 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2021 மாச்சு 12 |
| வழங்கப்படும் திகதி | : 2021 மாச்சு 12 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2021 மாச்சு 09, செவ்வாய்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து. |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்குகிடையிலான தொகைகளை மீள்ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 | என்.எஸ்.பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடெட் | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | வெல்த்ரஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்
** 91 நாள் மற்றும் 182 நாள் முதிர்வுகளின் விளைவு வீதங்கள் ஏலத்தில் 364 நாள் முதிர்வினைக் கொண்ட மட்டத்திற்கு கீழ் தீர்மானிக்கப்படும்.
*** வங்கி விடுமுறை நாளொன்றில் முதிர்ச்சி வருகின்றவிடத்து திறைசேரி உண்டியல் முதிர்ச்சிகளுக்குப் புதிய விடுமுறை விதிமுறை ஏற்புடையதாகும். அதாவது 2022 இலிருந்து செயற்பாட்டிற்குவரும் கொடுப்பனவுகள், உடனடியாகத் தொடர்ந்து வருகின்ற அலுவல் நாளன்று மேற்கொள்ளப்படும்.

**வழங்கும் அலுவலகம்**

பொதுப்படுகடன் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 1.
தொலைபேசி: +94112477011
தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk

எம். இசட். எம். ஆசிம்
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/ பதிவாளர்**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

**State Ministry of Skills Development, Vocational Education, Research & Innovation**

## Vocational Training Authority of Sri Lanka

## Procurement Notice

## Sanitary Services

The Chairman, Procurement Committee, Vocational Training Authority of Sri Lanka (VTA) invites sealed bids from eligible and qualified Sanitary Service Providers for the provision of Sanitary Services to the following District Vocational Training Centers and National Vocational Training Centers.

| District | Center | Number of Sanitary Workers |
|---|---|---|
| Colombo | National Vocational Training Institute - Narahenpita | 05 |
| Colombo | "Nipunatha Piyasa" 4-5 Floor, Head Office, Narahenpita. | 04 |
| Colombo | District VTC Maharagama | 01 |
| Colombo | District VTC Ratmalana | 03 |
| Colombo | Korean Tech - Orugodawatta | 07 |
| Gampaha | Nugagolla - Staff Training Academy | 01 |
| Batticaloa | District VTC Vantharamulla | 02 |
| Kegalle | District VTC Ballapana | 01 |
| Mullaitivu | District VTC Mullaitivu | 01 |
| Ampara | District VTC Samanturai | 01 |
| | District VTC Uhana | 01 |
| Matara | NVTI Thalalla | 01 |
| Kalutara | District VTC Kalutara | 01 |
| Trincomalee | District VTC Kachchaweli | 02 |
| Galle | District VTC Ahangama Hotel School & Hotel | 05 |
| Galle | District VTC Hikkaduwa | 01 |
| Galle | NVTI Galle | 01 |
| Jaffna | Karainagar VTC | 01 |

1. Bidding documents can be obtained from the Procurement Unit of the VTA on submission of a written application to the Chairman, Vocational Training Authority of Sri Lanka from 05.03.2021 to 25.03.2021 between 9.00 am and 3.00 pm on working days upon payment of a non-refundable fee of Rs. 3,500.00 for each. The method of payment will be cash.
2. Bidders should mention the envelop top left corner as The Caption **"Tender for Sanitary Services"** should be mentioned on the left-hand corner of the envelope. Sealed Bids shall be delivered by registered post to the **Chairman, Procurement Committee Vocational Training Authority of Sri Lanka, "Nipunatha Piyasa", 4th Floor, 354/2, Elvitigala Mawatha, Narahenpita, Colombo 05** to reach on or before 30.03.2021, 10.30 am or can be deposited in the Tender Box kept at the Procurement Unit of the VTA on or before 30.03.2021 by 10.30 am. The Bids will be opened immediately after closing of the Bids and late bids will be rejected. Bidders or their authorized representatives can be present at the opening of the bids.
3. All bidders should submit a Bid Security for Rs. 50,000.00 from a registered commercial bank in Sri Lanka.
4. Any further clarification with regard to the Procurement can be obtained from the Procurement Unit prior to the closing of Bids.

**Chairman**
**Procurement Committee**
**Vocational Training Authority of Sri Lanka**
**"Nipunatha Piyasa", 4th Floor,**
**354/2, Elvitigala Mawatha,**
**Narahenpita, Colombo 05.**
**Telephone / Fax - 011-2596516 / 011-2352150**

**State Ministry of Skills Development, Vocational Education, Research & Innovation**

## Vocational Training Authority of Sri Lanka

## Procurement Notice

## Security Services

The Chairman, Procurement Committee, Vocational Training Authority of Sri Lanka (VTA) invites sealed bids from eligible and qualified security service providers for the provision of Security Services to the following District Vocational Training Centers and National Vocational Training Centers.

| District Center | Required Security Officers |
|---|---|
| Badulla | 5 |
| Moneragala | 4 |
| Galle | 14 |
| Vavuniya | 2 |
| Colombo | 23 |
| Ampara | 10 |
| Anuradhapura | 3 |
| Nuwara-Eliya | 4 |
| Kandy | 5 |
| Matale | 3 |
| Jaffna | 5 |
| Batticaloa | 7 |

| District Center | Required Security Officers |
|---|---|
| Polonnaruwa | 2 |
| Matara | 4 |
| Trincomalee | 4 |
| Hambantota | 5 |
| Kegalle | 2 |
| Puttalam | 1 |
| Mullaitivu | 4 |
| Kalutara | 4 |
| Kilinochchi | 3 |
| Ratnapura | 2 |
| Kurunegala | 3 |
| Gampaha | 4 |

1. Bidding documents can be obtained from the Procurement Unit of the VTA on submission of a written application to the Chairman, Vocational Training Authority of Sri Lanka from 05.03.2021 to 25.03.2021 between 9.00 am to 3.00 pm on working days upon payment of a non-refundable fee of Rs.5,000.00 for each. The method of payment will be cash.

2. Bidders should mention on left hand of the envelop as **"Tender for Security Services"**. Sealed Bids shall be delivered by registered post to the **Chairman, Procurement Committee, Vocational Training Authority of Sri Lanka, "Nipunatha Piyasa", 4th Floor, 354/2, Elvitigala Mawatha, Narahenpita, Colombo 05** to reach on or before 30.03.2021 by 10.30 am or can be deposited in the Tender box kept at the Procurement Unit of the VTA on or before 30.03.2021 by 10.30 am. The Bids will be opened immediately after closing of the Bids and late bids will be rejected. Bidders or their authorized representatives can be present at the bids opening.

3. The bidder should have been registered as a security service providing institute in the Ministry of Defense for the relevant period. If not will be rejected.

4. All the bidders should submit a Bid Security of Rs. 50,000.00 from a registered commercial bank in Sri Lanka.

5. Any further clarification with regard to the Procurement can be obtained from the Procurement Unit prior to the closing of Bids.

**Chairman**
**Procurement Committee**
**Vocational Training Authority of Sri Lanka**
**"Nipunatha Piyasa", 4th Floor,**
**354/2, Elvitigala Mawatha,**
**Narahenpita, Colombo 05.**
**Telephone / Fax - 011-2596516 / 011-2352150**

**For classified advertisements and for replies**
received in response to advertisements published under Lake House box numbers
Please Contact → MANAGER FRONT OFFICE → Hotline: 1949
LAKE HOUSE








கொவிட் 19 தொற்றில் இருந்து மக்களை பாதுகாக்கும் முகமாக பேராதனைப் பல்கலைக்கழக விசேட நிபுணர்கள் ஒன்றிணைந்து முகக்கவசம் ஒன்று தயாரித்துள்ளனர். இந்த முகக்கவசம் மூன்று அடுக்குகள் கொண்டதாகவும் இலகுவாக சுவாசிக்க கூடியதாகவும், நீரின் ஈரப்பதனை உறிஞ்சிக் கொள்ளக்கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பக்டீரியாவை அழிக்கக்கூடிதாகவும் கொவிட் தொற்றில் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய புதிய தயாரிப்பாகும். இதனை கண்டி ஓக்ரே ஹோட்டலில் அதிகாரப்பூர்வமாக கையளிக்கும் நிகழ்வு வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன பங்கேற்புடன் நடைபெற்றதோடு பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் உபுல் திஸாநாயக்க மற்றும் பிரதி உபவேந்தர் ஆகியோரும் கலந்து கொண்டனர். படம்: கண்டி தினகரன் சுழற்சி நிருபர்

## உடல் உறுப்புத் தானத்திற்கான விருப்புக்கடிதம் பெற ஏற்பாடு



**எம்.ஏ.அமீனுல்லா, அக்குறணை குறூப் நிருபர்**

சாரதி அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கு மருத்துவ சான்றிதழ் பெற வருபவர்களிடம் அவர்கள் விரும்புமிடத்து உடல் உறுப்புத் தானத்திற்கான விருப்புக்கடிதம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்க தேவையான மருத்துவ சான்றிதழ்களைப் பெற தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் கீழ் உள்ள மாகாண மாவட்ட மத்திய நிலையங்களுக்கு வருபவர்கள் தம்முடைய விரும்பின்பேரில் உடல் உறுப்புக்களை தானம் செய்வதற்கான விருப்பு அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

போக்குவரத்து அமைச்சு, சுகாதார அமைச்சு, மற்றும் உடல் உறுப்பு மாற்றுக்கான தேசிய இயக்கம் என்பன இணைந்து இத்திட்டம் செயற்படுத்துகின்றன.

மருத்துவ சான்றிதழ் பெறும் நேரத்தில் உடல் உறுப்புகளை தானம் செய்ய விரும்புவோருக்கு விசேட அட்டை வழங்கப்படும். இது பற்றி சாரதி அனுமதிப்பத்திரத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றும் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் லால் பனாபிட்டிய தெரிவித்தார்.

இதன்மூலம் விபத்து காரணமாக மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்படும் ஒருவரின் உயிரைக் காப்பாற்ற முடியாது என்று மருத்துவர்கள் முடிவு செய்யும் போது, அவரது உடலை உறுப்புக்களை வேறொரு நபருக்கு பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் அதற்கு உரியவர் உயிருடன் இருக்கும் போது சம்மதம் தெரிவிக்க வேண்டும். அதனை இலகுப்படுத்த இந்த நடவடிக்கை உதவியாக இருக்கும் என்று பிரதிப்பணிப்பாளர் ஜெனரல் தெரிவித்தார். ஒவ்வொரு வருடமும் சுமார் 5,000 பேர் உடல் உறுப்பு செயலிழப்பால் இறக்கின்றனர், மேலும் உடல் உறுப்புகளை தானம் செய்ய இதுவரை சுமார் 400 பேர் மட்டுமே முன்வந்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

### மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில்

# பி.சி.ஆர். இயந்திரமின்மை மக்கள் பெரும் அசௌகரியம்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**





மொனராகலை மாவட்ட பிரதான அரசினர் மருத்துவமனையில் பி.சி. ஆர். இயந்திரம் இன்மையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மொனராகலை மாவட்ட அரசினர் மருத்துவமனை மற்றும் ஏனைய அரசினர் மருத்துவமனைகள் ஆகியவற்றில் உயிரிழந்தவர்களுக்கு பி.சி. ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளமுடியாதநிலைமைகாணப்படுகின்றது. சடலங்களின் மாதிரிகள்' எடுக்கப்பட்டு கராபிட்டிய மற்றும் பதுளை ஆகிய போதனா மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுகின்றன. போதனா மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படும் 'மாதிரிகள்' பி.சி.ஆர். பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டு அதன் அறிக்கைகள் மொனராகலை மாவட்ட பிரதான அரசினர் மருத்துவமனைக்கு அனுப்பப்படுவதற்கு 4,5 தினங்கள் தாமதமடைகின்றன.

இதனால் சடலங்கள் மொனராகலை மாவட்ட அரசினர் மருத்துவமனை பிரேத அறைகளிலேயே வைக்கப்படுகின்றன. சடலங்களின் இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்கு தாமதங்கள் ஏற்படுவதால் உறவினர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் சடலங்கள் மீதான பி.சி. ஆர். பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் என கண்டுப்பிடிக்கப்படும் பட்சத்தில் சடலத்திற்கு பொறுப்பாக இருந்து வரும் சம்மந்தப்பட்டவர்கள் மென்மேலும் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

இது குறித்து மொனராகலை மாவட்ட அரசினர் மருத்துவமனை வைத்திய அதிகாரி ஆர்.எம்.டி. ரட்ணாயக்கவிடம் வினவியபோது, பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு பி.சி.ஆர்.இயந்திரமில்லாதலால் பெரும் பிரச்சினைகளும் தாமதங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எமது மருத்துவமனைக்கு பி.சி.ஆர். இயந்திரமொன்று இல்லாமையினால் பரிசோதனை அறிக்கைகளைப் பெற தாமதமடையவே செய்கின்றன.

சுகாதார அமைச்சிடம் எமது மருத்துவமனைக்கு பி.சி.ஆர். இயந்திரமொன்றினைப் பெற்றுத் தரும்படி கோரிக்கை விடுத்துள்ளேன். அவ் இயந்திரம் கிடைக்குமென்ற எதிர்ப்பார்ப்புடன் இருந்து வருகின்றோம். அதுவரை தாமத அவலங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்று கூறினார்.

## ஓல்டன் தோட்ட தாக்குதல் சம்பவம் கைதானவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

**ஹற்றன் சுழற்சி, மஸ்கெலிய தினகரன் விசேட நிருபர்கள்**

மஸ்கெலியா சாமிமலை ஓல்டன் தோட்ட முகாமையாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தில் கைதுசெய்யப்பட்டவர்களை மீண்டும் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி ஹற்றன் நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும் இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் மேலும் ஐவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டு அதில் இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன், மூவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் சரீர பிணை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



தோட்ட தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு தொடர்பாக கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் கடந்த மாதம் 5ஆம் திகதி நாடாளவியரீதியில் முன்னெடுக்கப்பட்ட முழு அடைப்பு போராட்டத்திற்கு இ.தொ.கா அழைப்பு விடுத்திருந்தது. அதேநேரத்தில் ஓல்டன் தோட்டத்தில் தோட்ட நிர்வாக அதிகாரிகள் தொழிற்சாலையில் பொதி செய்யப்பட்டிருந்த தேயிலை தூளை ஏற்றிச் செல்வதற்கான நடவடிக்கையில் ஈடுப்பட்டிருந்தனர்.

இதனை தடுத்த தொழிலாளர்களில் இருவர் தோட்ட அதிகாரியால் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதலை எதிர்த்து ஓல்டன் தோட்டத்திற்கு உரிய நான்கு பிரிவுகளை சேர்ந்த தொழிலாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து தோட்ட தொழிலாளர்களுக்கும், தோட்ட நிர்வாக அதிகாரிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் காரணமாக 8 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதில் 7 பேர் பெண்கள் எனவும், ஒருவர் ஆண் எனவும் தெரியவந்துள்ளது. அதேநேரத்தில் மஸ்கெலியா பொலிஸாரால் ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இவர்கள் 14 நாட்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் நேற்றுமுன்தினம் (03.03.2021)மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அதேநேரத்தில் இது தொடர்பில் தொழிலாளர்களிடம் வினவிய போது, தமக்கு நீதி வேண்டும், இந்த தாக்குதல் சம்பவம் தோட்ட அதிகாரியால் ஆரம்பிக்கப்பட்டதால் அவரை முதலில் கைது செய்யும்படி வலியுறுத்துவதாகவும் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.



மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மாசிமக தேர்த்திருவிழாவின் இறுதி நாளான பூங்காவனத்திருவிழா பக்தி பூர்வமாக நேற்று முன்தினம் இடம்பெற்றபோது பிடிக்கப்பட்ட படம். படம்: மாத்தளை சுழற்சி நிருபர்

## இந்திய உதவி உயர் ஸ்தானிகராலயத்தினால் தோட்ட பாடசாலைகளுக்கு புத்தகங்கள்

**எம்.ஏ.அமீனுல்லா,அக்குறணை குறூப் நிருபர்**



இந்திய உதவி உயர் ஸ்தானிகராலயம் தெரிவு செய்யப்பட்ட 22 மலையகப் பாடசாலைகளுக்கு க.பொ.த.(உ/த) வகுப்புக்களுக்கான பெறுமதியான புத்தகங்கள் அண்மையில் கையளிக்கப்பட்டன. மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் அமைந்துள்ள தமிழ் தோட்டப் பகுதி பாடசாலைகளுக்கு க.பொ.த. (உ/த) பாடத்திட்ட புத்தகங்கள் கண்டி உதவி உயர் ஸ்தானிகராலய கேட்போர் கூடத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. இந்திய உதவி உயர் ஸ்தானிகர் ராகேஸ் நட்ராஜன் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக மத்திய மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் சமிலா விஜயரத்ன கலந்து கொண்டார். அவர் அங்கு தெரிவித்தாவது

புத்தகங்களை வழங்கிய இந்திய அரசின் முயற்சியைப் பெரிதும் பாராட்டுகிறேன். இளைஞர்களின் எதிர்காலத்தை வடிவமைக்க கல்வி முக்கிய பங்களிப்புச் செய்கிறது என அவர் தெரிவித்தார். இந்திய உதவி உயர் ஸ்தானிகர் ராகேஷ் நடராஜ் தெரிவித்ததாவது,

கொரோனா போன்ற தொற்று பரவல் காரணமாக கல்வியில் கவனம் செலுத்துவதை குறைக்கக் கூடாது. விஞ்ஞானம், கலை, வர்த்தகம் முதலான துறைகளுகளில் இருபத்தி ஒன்பது பாடத் தொகுப்புக்களுக்கான புத்தகங்கள் 22 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். இந்நிகழ்வில் சுகாதார நெறிமுறைகளை பின்பற்றி 25 பேர் மட்டுமே பங்கேற்றனர்.

## செப்பல்டன் பி.எஸ். தோட்ட பிரிவில் 160 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள்

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**



பொகவந்தலாவ செப்பல்டன் பி.எஸ். பிரிவு தோட்ட மக்களுக்கு வேல்ட் என்ட் டிட் நிறுவனத்தினால் உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. பொகவந்தலாவ செப்பல்டன் பி.எஸ். பிரிவில் கொரோனா தொற்று காரணமாக முடக்கப்பட்டிருந்த மக்களுக்கு வேல்ட் என்ட். டிட் நிறுவனத்தினால் நேற்று வியாழக்கிழமை உலர்உணவு பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது. குறித்த தோட்டப்பகுதியில் இதுவரையில் 16 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு மரணம் ஒன்றும் பதிவாகியுள்ளது. குறித்த தோட்டப்பகுதி கடந்த மாதம் 23 ஆம் திகதி இரவு முதல் காலவரையின்றி முடக்கப்பட்டது.

இவ்வாறு முடக்கப்பட்ட தோட்டப்பகுதியில் 160 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

## கொட்டக்கலையில் அதிகரிக்கும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

லிந்துலை கொட்டக்கலை பகுதியில் 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர் சௌந்தர் ராகவன் தெரிவித்தார்.

கடந்த முதலாம் ஆம் திகதி 167 பேருக்கு மேற்கொண்டபி.சி.ஆர்பரிசோதனையைடுத்துஅறிக்கை நேற்றுமுன்தினம் மாலை கிடைக்கப்பெற்றபோதே 16 பேருக்கு தொற்று உறுதியானது,

கொட்டகலை நகரப்பகுதியில் 10 பேர், தர்மபுரத்தில் 05 பேர் மற்றும் யதன்சைட் பகுதியில் ஒருவருமாக 16 பேர் இனம் காணப்பட்டுள்ளதுடன் இதில் கொட்டகலை பிரதேசத்திலுள்ள மூன்று பாடசாலைகளின் ஐந்து ஆசிரியர்களும் 07 மாணவர்களும் அடங்குவதாக பொது சுகாதர அதிகாரி தெரிவித்தார். மேலும் கொட்டகலை பிரதேசத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



# பணிப்பெண்கள், விதவைகளின் பிரச்சினைகளை ஆராய விசேட குழு

## கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்



திருமலை மாவட்ட விசேட, புளியந்தீவு குறுப் நிருபர்கள்

கிழக்கு மாகாணத்தில் வெளிநாட்டில் வசிக்கும் வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் விதவைகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய விசேட குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

மகளிர் தினத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் (03) நடைபெற்ற பெண்கள் வர்த்தக கண்காட்சியில் கலந்து கொண்டு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கிழக்கு மாகாணத்தில் வெளிநாட்டிலுள்ள வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் விதவைகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய விசேட குழுவொன்று நியமிக்கப்படும்.

இதனை வழிநடத்த கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஆரியவதி கலப்பதி நியமிக்கப்பட உள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

"எங்கள் கலாசாரங்களில் பெண்களின் முன்னேற்றத்திற்கு சில தடைகள் இருந்தாலும், நம் கலாசாரத்தின் மூலம் பெண்கள் நம் நாட்டில் உயர்த்தப்பட்டுள்ளனர்.

பெண் சவால்களை எதிர்கொள்ள வேண்டும். பெரும்பாலான விதவைகள் எங்கள் மாகாணத்தில் வாழ்கின்றனர்.

அவர்களுக்காக பல தொழில்முனைவோர் திட்டங்களை எதிர்காலத்தில் தொடங்க எதிர்பார்க்கிறோம்.

மகளிர் தினத்திற்கான போராட்டம் தொடங்கியபோது, ஒரு பெண்ணின் சம்பளம் ஒரு ஆணின் சம்பளத்தில் பாதிக்கும் குறைவாகவே இருந்தது.

ஐரோப்பா , அமெரிக்கா போன்ற நாடுகளில் பெண்கள் மிகவும் அநீதிக்கு ஆளான காலங்கள் இருந்தன. மில்லியன் கணக்கான பெண்கள் வீதிகளில் இறங்கி பெண்களுக்காக போராடினர்.

அவர்கள் கடந்த காலங்களில் எங்களுக்காக போராடி தங்கள் உரிமைகளை வென்றார்கள். மகளிர் தினம் அந்த போராட்டங்களின் ஒரு முடிவு மட்டுமே.

இந்த போராட்டங்களின் மூலம், பெண்களின் சுதந்திரம், பெண்களின் வாக்குரிமை, பெண்களுக்கு சம ஊதியம் மற்றும் பெண்களுக்கான கல்விக்கான வாய்ப்பு ஆகியவை கிடைக்கப்பெற்றுள்ளன.

இன்று பல்கலைக்கழக கல்வியில் ஆண்களை விட அதிகமான பெண்கள் உள்ளனர் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கபிலா நுவான் அத்துகோரலா, முன்னாள் மாகாண அமைச்சர் ஆரியவதி கலப்பதி, திருகோணமலை மாவட்ட செயலாளர் சமன் தர்ஷனா பாடிகோரலா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# 'மூதூர் நகரை அழகுபடுத்தி சுகாதாரம் பேணுவோம்'

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேசத்தில் அகற்றப்படும் திண்மக் கழிவுகளை முறையாக மக்கள் ஒப்படைக்கும் விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். உக்கக் கூடியதும், உக்காததுமான கழிவுகளை வேறுபடுத்தி அப்புறப்படுத்துமாறு மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸினால் பொது மக்களுக்கு ஒலி பெருக்கி மூலம் பொது அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 'மூதூர் நகரை அழகுபடுத்தி சுகாதாரம் பேணுவோம்' எனும் கருப்பொருளில் செயற்படுத்தப்படவுள்ள இத்திட்டத்திற்கு குடியிருப்பாளர்கள் மற்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் உதவுமாறும் வேண்டப்பட்டுள்ளது.

இதேவேளை தேவையற்ற கழிவுகளை புதைப்பதோடு மரம், செடி கொடிகளை அகற்றுவதாயின் பிரதேச சபைக்கு அறிவித்து இதற்கான செலவீட்டுப் பணம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று அதனை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்கள் மூதூர் பிரதேசத்தையும் அதன் சூழலையும் பாதுகாத்து அழகுபடுத்த உதவுமாறும் தவிசாளர் அரூஸினால் இவ்வறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.



அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பல்துறை சார் கலைஞர்களுக்கு 'கலைஞர் சுவதம் விருது'வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் இடம்பெற்றது. இதன் போது கவிஞர் முழுமதி எம்.முர்தளா அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.எம்.அப்துல் லத்தீபினால் கலைஞர் சுவதம் விருது வழங்கி கௌரவிக்கப்படுவதை காணலாம்.

# கொக்கட்டிச்சோலையில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

(கொக்கட்டிச்சோலை நிருபர் )

கொக்கட்டிச்சோலை கிராமத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணி நேற்றுமுன்தினம் (03) முன்னெடுக்கப்பட்டது. இதன் போது டெங்கு நுளம்பு பரவும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு அவை அழிக்கப்பட்டன.

கிராம உத்தியோகத்தர் சி.ஜீவிதன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாட்டில் பொது சுகாதார பரிசோதகர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச சபை ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மகிழடித்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பொது மக்களுக்கு டெங்கு தொடர்பில் விழிப்பூட்டலை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் சுத்தம் செய்யும் நடவடிக்கை

கல்குடா தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு தாக்கம் அதிகரித்து காணப்படும் நிலையில், மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்கள் சுத்தம் செய்யும் வேலைத்திட்டம் இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் டெங்கு தாக்கம் அதிகரித்து காணப்படும் நிலையில், ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் சுத்தம் செய்யும் நடவடிக்கை வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் நடைபெற்றது. ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 2020ம் ஆண்டு டெங்கு நுளம்பு பெருகுவதற்கு வசதியாக இடங்களை வைத்திருந்த 626 பேருக்கு எதிராக சிவப்பு



எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் அவை சீர்செய்யப்பட்டுள்ளதுடன், இவ்வருடம் 149 பேருக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அத்தோடு கடந்த 2020ம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் 2021ம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி வரை 258 நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி தாரிக் மேலும் தெரிவித்தார். நிகழ்வில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஏ.எல்.நௌபர், பொது சுகாதார பரிசோதகர்கள், அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கார் – மோ.சைக்கிள் விபத்து; இரு இளைஞர்கள் காயம்

திருகோணமலை குறுப் நிருபர்



திருகோணமலை உட்துறைமுக வீதியில் நேற்றுமுன்தினம் (03) கார், மோட்டார் சைக்கிள் ஆகியன ஒன்றுடனொன்று மோதி விபத்துக்குள்ளாகின. இது தொடர்பில் தெரியவருவதாவது, வலது பக்கத்தில் காரை திருப்பும் பொழுது காருக்குப் பின்னால் பயணித்த மோட்டார் சைக்கிள் காரில் மோதியுள்ளது.

இதனால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் , காயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# அட்டாளைச்சேனை சம்புநகர் அல் – மினா மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட அட்டாளைச்சேனை சம்புநகர் அல் மினா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அல் மினா வித்தியாலய ஆரம்பப்பிரிவு வலயத் தலைவர் ஏ.எம்.சுலைமாலெப்பை தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.வாஹீட் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகணரங்களை வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில், பாடசாலை அதிபர் முகம்மட் றியாஸ், பிரதி அதிபர் எம்.ஐ.ஜஃபர், அட்டாளைச்சேனை சம்புநகர் சனசமுக நிலைய தலைவர் ஏ.தஸ்லீம், செயலாளர் திருமதி ஐ.எல்.நஸீமா, பாடசாலையின் ஆசிரியர்களான ஏ.சீ.எம்.பர்சான், ஏ.எம்.சம்சுதீன், பட்டதாரி பயிலுனர்களான ஐ.ஹனான் றசாத், ஏ.ஏ.எம்.அறூாஸ் ஏ.ஜீ.ஹம்சார், தரம் 5 இற்கான தொண்டர் ஆசிரியை எம்.



ஆர்.பாத்திமா நஷ்கா உட்பட சம்புநகர் சனசமுக நிலையத்தின் பதவி வழி உத்தியோக்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அதிக கஷ்ட பிரதேசத்தில் அமைந்துள்ள இப்பாடசாலையின் மாணவர்களுக்கு அட்டாளைச்சேனை சம்புநகர் சனசமுக நிலையம் மற்றும் சவூதி ஜித்தாவில் தொழில் நிமிர்த்தம் வசிக்கும் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ.ஆலோசகர் ஏ.நௌசாத் ஆகியோர்களின் ஏற்பாட்டில் வழங்கிய பாதணிகள், புதிய ஆடைகள், புத்தகப்பைகள், அப்பியாசக் கொப்பிகள் இதன்போது அதிதிகளால் மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

# கிழக்கில் வெளிநாட்டு பறவைகள் படையெடுப்பு



மட்டக்களப்பு குறுப் நிருபர்

வெளிநாட்டுப் பறவைகள் கிழக்கு மாகாணத்தை நோக்கி படையெடுக்க ஆரம்பித்துள்ளன.

மட்டக்களப்பு—கல்முனை பிரதான வீதியில் ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட குருக்கள்மடம் பிரதேசத்தில் பெரும் எண்ணிக்கையிலான வெளிநாட்டு பறவைகள் வருகை தந்துள்ளன.

குறித்த பறவைகள் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளிலிருந்து வருகை தருவதாக தெரியவருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் அங்கிருந்து வரும் இப்பறவைகள் இப்பிரதேச மரங்களில் தங்கி முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்து தமது குஞ்சுகளுடன் மீண்டும் சொந்த நாட்டுக்குத் திரும்பிச் சென்று விடுவதாக பிரதேச வாசிகள் தெரிக்கின்றனர்.

குறித்த பிரதேசங்கள் பறவைகளின் ஓசையினால் அருமையான சூழலுடன் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

# மான்களால் வீதி விபத்துக்கள்



(அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

திருகோணமலை நகர வீதிகளில் நடமாடும் மான்களால் வெளியூர் மக்கள் திடீரென வீதியில் மான்களைக் காணும் போது வியந்து நடுவீதியில் வாகனத்தை நிறுத்தும்போது போக்குவரத்து நெருசல் ஏற்படுவதுடன், விபத்துக்களும் சம்பவிக்கின்றன. திருகோணமலைக்கு அழகையும் சிறப்பையும் பெருமையையும் மேலும் மெருகூட்டுவது திருக்கோணேசர் ஆலய மான்களாகும். இவை பிரதேசத்தின் பெரும் சொத்தாகும்.

காட்டில், மனிதரைக் கண்டவுடன் ஓடி ஒழியும் புள்ளிமான்கள் நகரில் மனிதர்களுடன் மனிதர்களாக நடமாடுவது அதிசயமே.

முன்னைய காலத்தில் கோணேசர் ஆலயப்பகுதி மற்றும் பிரட்ரிக் கோட்டைக்குள் இருந்தவை, உணவு, நீர்த் தேவைக்காக ஊர்முழுவதும் அலைந்து திரியும் நிலை ஏற்பட்டுள்ளது பெரும் அவலமே. இதனால் அவற்றின் வாழ்வு பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றது. உணவுடன் சேர்த்து பொலித்தீனை உண்ணல், விலங்குகளுக்கு ஒவ்வாத உணவுகளை உண்ணல், நாய்களினால் தாக்கப்படுதல், வீதி விபத்துக்கு உள்ளாதல் என ஏகப்பட்ட பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றன. எனவே இவை பாதுகாக்கப்பட வேண்டுமாயின் நகருக்குள் வருகை தராமல் கட்டுப்படுத்த வேண்டும். மான்கள் வீதியில் நடமாடி மக்களுக்கும், மான்களுக்கும் ஏற்படும் அசௌகரியங்களை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மட்டக்களப்பில் சுழற்சி முறையில் உண்ணாவிரதப் போராட்டம்

(வெல்லாவெளி தினகரன், பெரியபோரதீவு தினகரன் நிருபர்கள்)

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு நீதி கோரி, 4 கோரிக்கைகளை முன்வைத்து, லண்டனில் பெண்ணொருவர் தொடங்கியுள்ள உண்ணா விரதத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் மட்டக்களப்பிலும் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது.

சுழற்சி முறையிலான இந்த உண்ணாவிரதப் போராட்டம், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் கோவிலுக்கு முன்பாக நேற்றுமுன்தினம் (03) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராஜா சரவணபவன், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், பா.அரியநேந்திரன் உட்பட முக்கியஸ்தர்களும் காணாமலாக்கப்பட்டோரின் குடும்ப உறவினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு நீதி கோரி, இலங்கையை குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தவேண்டும் உட்பட 4 கோரிக்கைகளை முன்வைத்து பிரித்தானியாவில் வசிக்கும் அம்பிகை செல்வகுமார் எனும் பெண் சாகும் வரையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை லண்டனில் கடந்த 27ஆம் திகதி ஆரம்பித்து வைத்தார்.

அவருக்கு வலுச் சேர்க்கும் வகையில் கடந்த 28ஆம் திகதி முதல் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நல்லூரில் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# சர்வதேச செய்திகள்

## தடுப்பூசி பெற்றவர்களுக்கே ஹஜ் யாத்திரைக்கு அனுமதி



கொவிட்–19 தொற்றுக்கு தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே இந்த ஆண்டு ஹஜ் கடமைக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று சவூதி அரேபிய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

“ஹஜ் யாத்திரை மேற்கொள்ள வருபவர்களுக்கு கொவிட்–19 தடுப்பூசி கட்டாயம் என்பதோடு (நுழைவு அனுமதிக்கு) அது முக்கிய நிபந்தனைகளில் ஒன்று” என்று சுகாதார அமைச்சர் கையொப்பம் இட்ட சுற்றுநிருபம் ஒன்றை மேற்கோள்காட்டி ‘ஒகஸ்’ சவூதி பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்லாத்தின் புனிதத் தலங்களான மக்கா மற்றும் மதீனாவுக்கு பொறுப்பாளராக இருக்கும் சவூதி அரேபியா, ஹஜ் கடமைக்கான ஏற்பாடுகளுக்கும் பொறுப்பாக செயற்படுகிறது.

கொரோனா தொற்று காரணமாக கடந்த ஆண்டில் ஹஜ் கடமை சுமார் 1,000 சவூதி பிரஜைகள் மற்றும் அங்கிருக்கும் குடியிருப்பாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. வெளிநாட்டு முஸ்லிம்களுக்கு ஹஜ் கடமை தடுக்கப்பட்டது நவீன வரலாற்றில் முதல்முறையாக அது இருந்தது.

வசதி படைத்த முஸ்லிம்கள் வாழ்நாளில் ஒரு தடவை செய்ய வேண்டிய கடமையாக ஹஜ் உள்ளது.

## நடுக்கடலில் படகிலிருந்து இறக்கப்பட்ட 20 பேர் பலி




கிழக்கு ஆபிரிக்க நாடான டிஜிபுட்டியில் இருந்து யெமனுக்கு பயணித்த கப்பலில் இருந்து ஆட்கடத்தல்காரர்களால் 80 பேர் கடலுக்குள் வீசப்பட்ட நிலையில் குறைந்தது 20 தஞ்சக் கோரிக்கையாளர்கள் உயிரிழந்திருப்பதாக புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை புறப்பட்ட இந்தப் படகில் 18 வயதுக்கு கீழான சிறுவர்கள் உட்பட 200 தஞ்சக் கோரிக்கையாளர்கள் இருந்த நிலையில் படகில் அளவுக்கு அதிகமானவர்கள் இருப்பதாக ஆட்கடத்தல்காரர்கள் கூச்சலிட்டுள்ளனர் என்று அந்த அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

ஐவரின் உடல்கள் மீட்கப்பட்டிருக்கும் நிலையில் உயிர்தப்பியவர்கள் டிஜிபுட்டியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த தஞ்சக்கோரிக்கையாளர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது உறுதி செய்யப்படவில்லை.

வறுமையில் இருந்து தப்பும் முயற்சியாக சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தை அடைய எத்தியோப்பியா அல்லது சோமாலிய நாட்டவர்கள் டிஜிபுட்டி கடற்பகுதியை பயன்படுத்துவது வழக்கமாகும்.

கடந்த ஒக்டோபரிலும் இது போன்று படகில் இருந்து இறக்கப்பட்ட குறைந்தது எட்டுப் பேர் உயிரிழந்தனர்.

## இம்ரான் கானுக்கு நெருக்கடி



பாகிஸ்தான் செனட் தேர்தலில் பிரதமர் இம்ரான் கானின் ஆளும் கட்சி முக்கிய ஆசனம் ஒன்றை தோற்றிருக்கும் நிலையில் அவர் பாராளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் 96 ஆசனங்கள் கொண்ட மேலவையில் 48 இடங்களுக்கு கடந்த புதன்கிழமை நடைபெற்ற தேர்தலில் நாட்டின் மாகாண சட்டமன்றங்கள் மற்றும் பாராளுமன்ற கீழவை உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

இதில் இம்ரான் கானின் தஹ்ரீக்கே இன்சாப் கட்சியின் தற்போதைய நிதி அமைச்சர் அப்துல் ஹபீஸ் செய்க் தோல்வி அடைந்திருப்பதாக உத்தியோகபூர்வமற்ற முடிவுகள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரதமர் யூசுப் ராசா கிலானி 169–164 என்ற வாக்குகளால் செய்க்கை தோற்கடித்துள்ளார். இந்தத் தோல்வி ஆளும் கூட்டணிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடும் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பாராளுமன்றத்தில் தமது பெரும்பான்மையை உறுதி செய்வதற்கு இம்ரான் கான் மற்றும் அவரது கட்சியினர் நம்பிக்கை வாக்கெடுப்பு ஒன்றை நடத்த ஏகமனதாக தீர்மானம் எடுத்ததாக வெளியுறவு அமைச்சர் ஷாங் மஹ்மூத் குறைசி தெரிவித்துள்ளார்

# அமெரிக்க பாராளுமன்றில் அத்துமீறி நுழையும் சதித்திட்டம் பற்றி எச்சரிக்கை

### பாதுகாப்பு அதிகரிப்பு: அமர்வு ஒத்திவைப்பு



அமெரிக்க பாராளுமன்ற கட்டடத்திற்குள் அத்துமீறி நுழையும் வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியானதை அடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதோடு நேற்றைய பிரதிநிதிகள் சபை அமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கிளர்ச்சிக் குழு ஒன்றின் மூலம் இந்த அச்சுறுத்தல் இருப்பதாக உளவுத் தகவல்கள் குறிப்பிட்டிருப்பதாக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுக்க தயார் நிலையில் இருப்பதாக பாதுகாப்புப் படையினர் குறிப்பிட்டுள்ளது.

இந்த அச்சுறுத்தல் பற்றிய விபரம் வெளியானதை அடுத்து பிரதிநிதிகள் சபை அமர்வு ஒத்திவைக்கப்பட்டபோதும் செனட் சபை வழக்கம்போல் கூடியது. ஜனாதிபதி ஜோ பைடனின் 1.9 டிரிலியன் கொவிட்–19 நிவாரண சட்டமூலம் பற்றி நேற்று அங்கு விவாதிக்கப்பட்டது.

“பாராளுமன்றத்தின் மீதான எந்த ஒரு அச்சுறுத்தலையும் தடுக்க எமது திணைக்களம் எமது உள்ளூர், மாநில மற்றும் மத்திய நிர்வாகங்களுடன் இணைந்து செயற்படும்” என்று அமெரிக்க பாராளுமன்ற பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

“இந்த உளவுத் தகவலை நாம் தீவிரமாக எடுத்துக்கொள்கிறோம். இதன் பாரதூரம் காரணமாக இந்த தகவல் குறித்த மேலதிக விபரங்களை இந்த நேரத்தில் பகிர்ந்து கொள்ள முடியவில்லை” என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் ஆதரவாளர்கள் பாராளுமன்றத்தில் எம்.பிக்கள் இருக்கும்போதே அத்துமீறி நுழைந்த சம்பவம் இடம்பெற்று இரண்டு மாதங்களின் பின்னரே புதிய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கலவரத்தில் பொலிஸார் ஒருவர் உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டது அமெரிக்க ஜனநாயக கட்டமைப்பில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனை அடுத்து பாராளுமன்ற பொலிஸ் தலைவர் இராஜினாமா செய்தார்.

முற்றுகை தொடர்பில் அமெரிக்க நீதித் திணைக்கள 300க்கும் அதிமானோர் மீது குற்றச்சாட்டு சுமத்தியது. இவர்களில் வலதுசாரி கிளர்ச்சிக் குழுக்களின் உறுப்பினர்களும் உள்ளனர்.

டிரம்ப் இந்த வன்முறையைத் தூண்டியதாக குற்றம்சாட்டிய ஜனநாயகக் கட்சியினர் அவர் மீது இரண்டாவது முறையாகவும் நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வந்தபோதும் அது தோல்வி அடைந்தது.

## மியன்மாரில் ஆர்ப்பாட்டங்களில் ஒரேநாளில் 38 பேர் சுட்டுக்கொலை



மியன்மாரில் ஒரு மாதத்திற்கு முன் ஆட்சியைக் கைப்பற்றிய ராணுவத்துக்கு எதிராக நடந்த போராட்டங்களில் கடந்த புதன்கிழமை ஒரே நாளில் குறைந்தது 38 போராட்டக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இதை இரத்தம் தோய்ந்த நாள் என்று ஐ.நா வர்ணித்துள்ளது. மியன்மாரில் இருந்து அதிர்ச்சிகரமான வீடியோக்கள் வெளியாவதாக அந்நாட்டுக்கான ஐ.நா. தூதர் கிறிஸ்டைன் ஷ்ரானர் பர்ஜனர் கூறினார்.

பாதுகாப்புப் படையினர், இறப்பர் குண்டுகள் மற்றும் உண்மையான குண்டுகளால் சுட்டனர் என்று சாட்சிகள் கூறுகின்றன.

பெப்ரவரி 1ஆம் திகதி மியன்மாரில் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது முதல் நாடு முழுவதும் ஒத்துழையாமை இயக்கமும், மக்கள் போராட்டமும் நடந்து வருகிறது.

இராணுவ சர்வாதிகாரத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும், ஆங் சான் சூச்சி உள்ளிட்ட தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று போராட்டக்காரர்கள் வலியுறுத்துகிறார்கள். இராணுவப் புரட்சி நடந்தபோது இந்த தலைவர்களின் பதவி பறிக்கப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த இராணுவப் புரட்சியும், அதைத் தொடர்ந்து போராட்டங்கள் பலவந்தமாக ஒடுக்கப்பட்டதும் சர்வதேசக் கண்டனங்களுக்கு உள்ளாயின. ஆனால், இவற்றை மியன்மார் இராணுவம் இதுவரை கண்டுகொள்ளவில்லை.

புதன்கிழமை நடந்த இறப்புகளைப் பார்த்த பின்னர், ஐ.நா பாதுகாப்பு சபை கூட்டத்தை இன்று வெள்ளிக்கிழமை நடத்த பிரிட்டன் அழைப்பு விடுத்திருப்பதோடு மியன்மார் இராணுவத்துக்கு எதிராக மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுப்பது பற்றி யோசித்து வருவதாகத் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இராணுவம் கட்டுப்பாட்டோடு நடந்துகொள்ள வேண்டும் என்று மியன்மாரின் அண்டை நாடுகள் கேட்டுக்கொண்டதற்கு மறுநாள் இப்படிப் போராட்டக்காரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இராணுவ சதிப்புரட்சிக்கு பின்னரான ஆர்ப்பாட்டங்களில் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை தற்போது 50 ஆக உயர்ந்துள்ளது.

யாங்கோன் உள்ளிட்ட பல நகரங்களில் எச்சரிக்கை ஏதும் செய்யாமல் பெரும் எண்ணிக்கையிலான பொது மக்கள் மீது பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக மியன்மாரில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொல்லப்பட்டவர்களில் 14 வயது மற்றும் 17 வயதுடைய இரண்டு சிறுவர்களும் அடக்கம் என்று சிறுவர்களை பாதுகாப்போம் அமைப்பு தெரிவித்துள்ளது. 19 வயது பெண் ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

## சீனா, தென்னாபிரிக்காவில் கொரோனா போலி தடுப்பூசிகள் பறிமுதல்: பலர் கைது



சீன மற்றும் தென்னாபிரிக்க பொலிஸார் பல டஜன் போலி கொவிட்–19 தடுப்பு மருந்துகளை பறிமுதல் செய்திருப்பதோடு பலரையும் கைது செய்துள்ளனர். இந்தத் தகவலை சர்வதேச பொலிஸான இன்டர்போல் வெளியிட்டுள்ளது.

தொழிற்சாலை ஒன்றில் போலி தடுப்பூசி தயாரித்த குற்றச்சாட்டில் சீன பொலிஸார் 80 பேரை கைது செய்துள்ளனர். அங்கு குறைந்தது 3,000 டோஸ் போலித் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று தென்னாபிரிக்காவின் கவ்டெங் பகுதியில் இருக்கும் களஞ்சியம் ஒன்றில் வைத்து மூன்று சீன நாட்டவர்கள் மற்றும் ஒரு சிம்பாப்வே நாட்டவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து 2,400 போலித் தடுப்பு மருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்த கைது நடவடிக்கைகள் எப்போது இடம்பெற்றது என்பது பற்றிய விபரம் வெளியாகவில்லை. எனினும் கடந்த டிசம்பர் இறுதியில் தென்னாபிரிக்காவில் இந்த குற்றம் கண்டுபிடிக்கப்பட்டதாக அந்நாட்டின் சண்டே டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஏனைய போலி தடுப்பு மருந்து குற்றச் செயல்கள் குறித்த விபரங்களும் கிடைக்கப்பெற்றிருப்பதாக இன்டர்போல் கடந்த புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

சர்வதேச குற்றவியல் பொலிஸ் அமைப்பு என்பதன் சுருக்கமான இன்டர்போல் பிரான்சின் லியோன் நகரைத் தளமாகக் கொண்டு செயற்படுகிறது. பொலிஸ் படைகள் மற்றும் குற்றங்களை கட்டுப்படுத்துவதில் சர்தேச அளவில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கு இந்த அமைப்பு உதவுகிறது.

அங்கீகரிக்கப்படாத தடுப்பு மருந்துகள் இணைய விற்பனைக்காக தற்போது கிடைக்கப்பெறுகிறது என்று இன்டர்போல் தெரிவித்துள்ளது.

“இணையதளம் அல்லது டார்க் வெப்பில் விளம்பரம் செய்யப்படுகின்ற எந்த ஒரு தடுப்பூசியும் சட்டபூர்வமானது அல்ல என்பதோடு அது சோதனைக்கு உட்படுத்தப்படாதது. அது ஆபத்தை ஏற்படுத்தக்கூடும்” என்று அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதில் தடுப்பு மருந்து தீர்க்கமாக உள்ளதோடு தற்போது கிடைக்கப்பெறும் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பு மருந்தை பெறுவதில் சர்வதேச அளவில் போட்டி நிலவி வருகிறது.

### போர் குற்றங்கள் தொடர்பில்:

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பலஸ்தீன பகுதியில் விசாரணை



பலஸ்தீன பிரதேசங்களில் இடம்பெற்றதாக குற்றம்சாட்டப்படும் போர் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உத்தியோகபூர்வ விசாரணை ஒன்றை ஆரம்பித்திருப்பதாக அந்த நீதிமன்றத்தின் தலைமை வழக்குத்தொடுநர் பதூ பென்சௌதா தெரிவித்துள்ளார்.

2014 ஜூன் தொடக்கம் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்குக் கரை, கிழக்கு ஜெரூசலம் மற்றும் காசா பகுதிகளில் இடம்பெற்ற போர் குற்றங்கள் குறித்தே விசாரிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

பலஸ்தீன பிரதேசங்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்ட பகுதிகள் என்று ஹேகை தளமாகக் கொண்ட அந்த நீதிமன்றம் கடந்த மாதம் அறிவித்தது.

இந்நிலையில் பென்சௌதாவின் முடிவை இஸ்ரேல் நிராகரித்திருக்கும் அதேநேரம் பலஸ்தீன அதிகாரிகள் அதனை வரவேற்றுள்ளனர்.

இந்த நகர்வை எதிர்த்திருக்கும் அமெரிக்கா தனது ஏமாற்றத்தையும் வெளியிட்டுள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஸ்தாபக ஒப்பந்தமான ரோம் பிரகடனத்திற்கு அமைய இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றச்செயல் மற்றும் போர் குற்றங்கள் தொடர்பில் வழக்குத் தொடர அதிகாரம் உள்ளது.

ரோம் பிரகடனத்தை இஸ்ரேல் அங்கீகரிக்காதபோதும், பலஸ்தீனம் இந்த ஒப்பந்தத்தில் இணைந்ததை 2015இல் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் அங்கீகரித்த நிலையில் அந்தப் பிரதேசம் தமது வரம்புக்கு உட்பட்டிருப்பதாக குற்றவியல் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

1967 மத்திய கிழக்கு யுத்தத்திலேயே மேற்குக் கரை, காசா மற்றும் கிழக்கு ஜெரூசலத்தை இஸ்ரேல் ஆக்கிரமித்தது. இந்தப் பிரதேசங்கள் தமது எதிர்கால சுதந்திர நாடாக அமையவுள்ளது என்று பலஸ்தீனம் கூறுகிறது.

ஆரம்பக்கட்டமாக காசா பகுதியில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் பெரும்பாலான சர்வதேச சமூகம் அங்கீகரிக்காத மேற்குக் கரையில் இஸ்ரேலிய குடியேற்றங்கள் பற்றி சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணை நடத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2014இல் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன போராளிகளுக்கு இடையே இடம்பெற்ற போரில் 1,462 பொதுமக்கள் உட்பட 2,251 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதோடு இஸ்ரேல் தரப்பில் 67 படையினர் மற்றும் ஆறு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.




### மேற்கிந்திய தீவுடனான முதலாவது 20க்கு20 போட்டி:

# இலங்கையை வீழ்த்தியது மேற்கிந்திய தீவுகள் அணி

## 6 பந்தில் ஆறு சிக்ஸர்கள் விளாசி பொலார்ட் சாதனை

இலங்கை அணிக்கெதிரான முதலாவது ரி-20 போட்டியில், மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி20 தொடரில், 1-0 என்ற கணக்கில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முன்னிலை பெற்றுள்ளது.

ஆண்டிகுவா மைதானத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 131 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக பெத்தும் நிசங்க 39 ஓட்டங்களையும் நிரோஷன் டிக்வெல்ல 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், ஒபேட் மெக்கோய் 2 விக்கெட்டுகளையும் கெவீன் சின்க்ளாயார், எட்வட்ஸ், ஹோல்டர், பிராவோ மற்றும் பெபியன் அலென் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 132 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 13.1 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் அந்த அணி 4 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கிய்ரன் பொலார்ட் 38 ஓட்டங்களையும் ஜேஸன் ஹோல்டர் ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில், அகில தனஞ்சய மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

குறிப்பாக இப்போட்டியில் இலங்கையின் அணியின் அகில தனஞ்சய, ஹெட்ரிக் விக்கெட் வீழ்த்தி சாதனை படைத்தார்.



அத்துடன், இப்போட்டியில் கீரன் பொலார்ட், இலங்கை அணியின் அகில தனஞ்சயவின் ஓவருக்கு ஆறு பந்துகளுக்கு ஆறு சிக்ஸர்களை பறக்கவிட்டார். இதன் மூலம் ரி-20 கிரிக்கெட்டில் ஆறு பந்துகளுக்கு ஆறு சிக்ஸர்கள் விளாசிய வீரர் என்ற சாதனையை பொலார்ட் பதிவுசெய்தார். முன்னதாக இந்தியாவின் யுவராஜ் சிங் இந்த சாதனையை பதிவுசெய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் கீரன் பொலார்ட் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த ஆட்டத்தில் 2 சாதனை படைக்கப்பட்டது. இலங்கை சுழற்பந்து வீரர் அகில தனஞ்சய 3 பந்தில் 3 விக்கெட் கைப்பற்றி ஹெட்ரிக் சாதனை படைத்தார். அவரது பந்தில் தான் மேற்கிந்திய தீவு அதிரடி வீரர் பொல்லார்ட் 6 பந்தில், 6 சிக்சர் அடித்து முத்திரையை பதித்தார்.

மேற்கிந்தியத் தீவு அணி ஆடியபோது 6வது ஓவரை தனஞ்சய வீசினார். இந்த ஓவரில் தான் பொல்லார்ட் 6 பந்தில் 6 சிக்சர் அடித்து சாதனை படைத்தார்.

20 ஓவர் சர்வதேச போட்டியில் ஒரே ஓவரில் 6 சிக்சர் அடித்த 2வது வீரர் என்ற பெருமையை பொல்லார்ட் பெற்றார். இதற்கு முன்பு 2007ம் ஆண்டு 20 ஓவர் உலக கோப்பையில் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் புரோட் வீசிய ஓவரில், இந்திய வீரர் யுவராஜ் சிங் 6 பந்தில் 6 சிக்சர் அடித்து இருந்தார்.

சர்வதேச போட்டியில் ஒரே ஓவரில் 6 சிக்சர் அடிப்பது 3வது நிகழ்வாகும். நெதர்லாந்து அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் (2007ம் ஆண்டு) தென் ஆபிரிக்காவை சேர்ந்த கிப்ஸ் 6 பந்தில் 6 சிக்சர் அடித்து இருந்தார்.

கிரிக்கெட் போட்டிகளில் இது 7வது நிகழ்வாகும். மேற்கிந்திய தீவைச் சேர்ந்த கேரி சோபர்ஸ் 1968ம் ஆண்டு முதல் முறையாக முதல் தர போட்டியில் 6 பந்தில் 6 சிக்சர் அடித்தார்.

ரவி சாஸ்திரி (இந்தியா), அலெக்ஸ் ஹால்ஸ் (இங்கிலாந்து), ஹசரத்துல்லா (ஆப்கானிஸ்தான்) ஆகியோரும் இந்த சாதனை நிகழ்வை செய்திருந்தனர்.

இந்த ஆட்டத்தில் தனஞ்சய 4வது ஓவரில் அடுத்தடுத்து 3 விக்கெட்டை கைப்பற்றி ஹெட்ரிக் சாதனை படைத்தார். 2வது பந்தில் லீவிசையும், 3வது பந்தில் கிறிஸ் கெய்லையும், 4வது பந்தில் நிக்கோலஸ் பூரனையும் ஆட்டமிழக்கச் செய்தார்.

20 ஓவர் சர்வதேச போட்டியில் ஹெட்ரிக் சாதனை படைத்த 15வது வீரர் தனஞ்சய ஆவார். 4வது இலங்கை வீரர் என்ற பெருமையை பெற்றார்.

தனஞ்சயவின் அடுத்த ஓவரில்தான் பொல்லார்ட் 6 சிக்சர் அடித்து சாதித்தார். இதனால் அவர் தனது சாதனையை கொண்டாட முடியாமல் வேதனை படும் சூழ்நிலை ஏற்பட்டது.

## மேற்கிந்திய தீவுகளுக்கு செல்ல தயாராகும் திரிமான்ன, தனஞ்சய

இலங்கை அணியின் லஹிரு திரிமான்னவும், தனஞ்சய டி சில்வாவும் எதிர்வரும் 07ஆம் திகதிக்குள் மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள ஏனைய இலங்கை அணி வீரர்களுடன் இணைந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திரிமான்ன மற்றும் தனஞ்சய ஆகியோர் தங்களது உடற்தகுதி சோதனையினை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ள நிலையிலேயே மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

திரிமான்ன இலங்கை அணியின் தலைமைப் பயிற்சிவிப்பாளர் மிக்கி ஆர்தருடன் கொவிட் தொற்றுக்கு சாதகமாக பரிசோதனை மேற்கொண்டதன் பின்னர் சுய தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.



தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வந்த அவரிடம் இறுதியாக மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் அவர் கொரோனா தொற்றிலிருந்து பூரண குணமடைந்துள்ளமை தெரியவந்துள்ளது.

## டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் வெளிநாட்டு ரசிகர்களுக்கு தடை?



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் கடந்த ஆண்டு நடக்க இருந்த ஒலிம்பிக் போட்டி கொரோனா பரவலால் இந்த ஆண்டுக்கு தள்ளிவைக்கப்பட்டது.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் கடந்த ஆண்டு நடக்க இருந்த ஒலிம்பிக் போட்டி கொரோனா பரவலால் இந்த ஆண்டுக்கு தள்ளிவைக்கப்பட்டு வருகிற ஜுலை 23ம்திகதி தொடங்கி ஓகஸ்ட் 8ம் திகதி வரை நடக்க உள்ளது. உலகின் மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவான இந்த ஒலிம்பிக் போட்டியில் வெளிநாட்டு இரசிகர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. 'கொரோனா இன்னும் கட்டுக்குள் வராத தற்போதைய சூழலில் வெளிநாட்டு இரசிகர்களை ஒலிம்பிக் போட்டியை நேரில் பார்க்க அனுமதிக்க வாய்ப்பே இல்லை, இது பற்றி இந்த மாத இறுதிக்குள் இறுதி முடிவு எடுக்கப்படும்' என்று ஜப்பான் அரசாங்க அதிகாரி ஒருவர் கூறியதாக அங்குள்ள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டு இருக்கிறது.

இதற்கிடையே, ஜப்பானில் ஒலிம்பிக் போட்டியை நடத்த வேண்டுமா? வேண்டாமா? என்று அந்த நாட்டு மக்களிடம் நடத்தப்பட்ட கருத்துகணிப்பில் 58 சதவீதம் பேர் கொரோனா அச்சத்துக்கு மத்தியில் ஒலிம்பிக் போட்டியை நடத்த வேண்டாம் என்று கருத்து தெரிவித்துள்ளனர். இரசிகர்களை அனுமதிப்பது தொடர்பான கேள்விக்கு 47 சதவீதம் பேர் குறைந்த எண்ணிக்கையில் இரசிகர்களை அனுமதிக்கலாம் என்றும், 44 சதவீதம் பேர் இரசிகர்கள் வேண்டாம் என்றும் கூறியுள்ளனர்.

### நியூசிலாந்துக்கு எதிரான 20க்கு20 கிரிக்கெட்:

# அவுஸ்திரேலியா அபார வெற்றி



நியூசிலாந்துக்கு எதிரான 3வது 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி அபார வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி, நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து அந்த அணிக்கு எதிராக 5 ஆட்டங்கள் கொண்ட 20 ஓவர் தொடரில் விளையாடி வருகிறது. இவ்விரு அணிகள் இடையிலான 3வது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி வெலிங்டனில் நேற்றுமுன்தினம் நடந்தது.

அவுஸ்திரேலிய அணியில் டேனியல் சாம்ஸ்க்கு பதிலாக வேகப்பந்து வீச்சாளர் ரிலே மெரிடித் அறிமுக வீரராக இடம் பிடித்தார். அவர் இந்த பருவகாலத்துக்கான ஐ.பி.எல். போட்டிக்கு பஞ்சாப் கிங்ஸ் அணியால் ரூ. 8 கோடிக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டவர் ஆவார். நியூசிலாந்து அணியில் சுழற்பந்து வீச்சாளர் மிட்செல் சான்ட்னெர் சளி மற்றும் காய்ச்சல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டு இருப்பதால் மார்க் சாப்மன் சேர்க்கப்பட்டார்.



இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுக்கு 208 ஓட்டங்கள் குவித்தது. தலைவர் ஆரோன் பிஞ்ச் (69 ரன், 44 பந்து, 8 பவுண்டரி, 2 சிக்சர்), மேக்ஸ்வெல் (70 ஓட்டங்கள், 31 பந்து, 8 பவுண்டரி, 5 சிக்சர்) அரை சதம் விளாசினர். இதில் ஜேம்ஸ் நீஷம் வீசிய ஒரு ஓவரில் மேக்ஸ்வெல் 4 பவுண்டரி, 2 சிக்சர் என்று 28 ஓட்டங்கள் திரட்டி அமர்க்களப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

அடுத்து மெகா இலக்கை நோக்கி ஆடிய நியூசிலாந்து அணியின் விக்கெட்டுகள் சீரான இடைவெளியில் சரிந்தன. தொடக்க ஆட்டக்காரர் டிம் செய்பெர்ட் (4 ஓட்டங்கள்), தலைவர் கேன் வில்லியம்சன் (9 ஓட்டங்கள்) விக்கெட்டுகளை அவுஸ்திரேலிய புதுமுக வேகப்பந்து வீச்சாளர் ரிலே மெரிடித் சாய்த்து ஆரம்ப ஓட்ட வேகத்தை முடக்கினார். இடக்கை சுழற்பந்து வீச்சாளர் ஆஷ்டன் அகர் ஒரே ஓவரில் (13வது ஓவர்) 3 விக்கெட்டுகளை வீழ்த்தி எதிரணியின் துடுப்பாட்ட வரிசையை நிலைகுலைய செய்ததுடன், கடைசி கட்ட விக்கெட்டுகளையும் வீழ்த்தி வெற்றியை எளிதாக்கினார்.

நியூசிலாந்து அணி 17.1 ஓவர்களில் 144 ஓட்டங்களுக்கு 'சகலவிக்கெட்டையும் ' இழந்தது. இதனால் அவுஸ்திரேலிய அணி 64 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக தொடக்க ஆட்டக்காரர் மார்ட்டின் கப்தில் 43 ஓட்டங்களும், கான்வே 38 ஓட்டங்களும் எடுத்தனர். அவுஸ்திரேலிய அணி தரப்பில் ஆஷ்டன் அகர் 6 விக்கெட்டும், ரிலே மெரிடித் 2 விக்கெட்டும் கைப்பற்றினர். இதில் 30 ஓட்டங்கள் கொடுத்து 6 விக்கெட்டுகளை அள்ளிய சுழற்பந்து வீச்சாளர் ஆஷ்டன் அகர் சர்வதேச 20 ஓவர் போட்டியில் ஒரு இன்னிங்சில் 6 விக்கெட்டுகள் வீழ்த்திய 4வது வீரர், அவுஸ்திரேலிய அளவில் முதல் வீரர் என்ற சாதனையை படைத்ததுடன், ஆட்டநாயகன் விருதையும் தட்டிச்சென்றார்.

இந்த தொடரில் முதல் 2 ஆட்டங்களில் தோல்வி கண்ட அவுஸ்திரேலிய அணி முதல் வெற்றியை ருசித்து 1-2 என்ற கணக்கில் பின்தங்கி இருக்கிறது. இவ்விரு அணிகள் இடையிலான 4வது போட்டி இதே மைதானத்தில் இன்று நடக்கிறது.

## மாவட்ட நீச்சல் பயிற்சியில் பெருமளவான வீரர்கள் ஆர்வத்துடன் பங்கேற்பு

விளையாட்டுத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்ட விளையாட்டுப்பிரிவின் ஒழுங்குபடுத்தலில் 14 வயதிற்க்கு மேற்பட்ட முல்லைத்தீவு மாவட்ட வீர வீராங்கணைகளுக்கான நீச்சல் பயிற்சிகள் கடந்த வெள்ளிக்கிழமை(26) மற்றும் சனிக்கிழமை(27) ஆகிய இரு நாட்கள் கிளிநொச்சி நீச்சல் தடாகத்தில் நடைபெற்றுள்ளது.

மாவட்டத்தின் திறமையான வீரர்களை இனம் காணும் வகையில் இடம்பெற்ற குறித்த பயிற்சியில் மாவட்டத்தின் பெருமளவான வீரர்கள் மற்றும் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருந்தனர்.

பயிற்சிக்கான அனைத்து வசதிகளும் இலவச ஒழுங்குபடுத்தலுடன் நடைபெற்றுள்ளது.



## சீலாமுனை மைதானத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கான அடிக்கல் நாட்டிவைப்பு

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர்பிரிவுக்குட்பட்ட சீலாமுனை யங் ஸ்டார் விளையாட்டுக் கழக மைதானத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கான அடிக்கல் செவ்வாய்கிழமை (02) மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனால் நடப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபிட்சத்தின் நோக்கு சிந்தனைக்கு அமைவாக கிராமிய மற்றும் பாடசாலை



விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினுடைய முன்னெடுப்பின் கீழ் இலங்கை பூராகவும் 332 பிரதேச செயலகங்களில் உள்ள கிராமங்களில் கிராமிய விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டத்திற்கு மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் சீலாமுனை யங் ஸ்டார் மைதானம் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த அபிவிருத்தி திட்ட ஆரம்ப நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.நவரூபரஞ்சினி முகுந்தன் பிரதேச செயலாளர் எஸ்.வாசுதேவன் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கந்தசாமி ரோணி பிரின்சன், மாவட்ட விளையாட்டு உத்தியோகஸ்தர் வே.ஈஸ்வரன் கழக உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 5ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

மின் பாவனையாளர்களுக்கு சிறந்த விநியோகம் மற்றும் சேவையினை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், இலங்கை மின்சார சபை கீழ் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் மின்சார தொகுதி பராமரிப்பு, புனரமைப்பு அல்லது கட்டுமானங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. இதற்காக அப்பிரதேசங்களில் தற்காலிக மின்வெட்டு கீழ் காட்டப்பட்டுள்ள நாட்களில் / நேரங்களில் இடம்பெறும். இதற்காக வாடிக்கையாளருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக எமது வருத்தத்தினை தெரிவித்துக்கொள்வதோடு திட்டமிட்ட திருத்தங்கள் நிறைவு பெற்றவுடன் மீண்டும் விநியோகத்தினை வழமைபோல் மேற்கொள்ள இலங்கை மின்சார சபை நடவடிக்கை மேற்கொள்ளும்.

## மத்திய மாகாணம் - 02 மார்ச் 2021

**மின் பொறியியலாளர் பிரதேசம் : நுவரெலியா**

**வாடிக்கையாளர் சேவை நிலையம்: நுவரெலியா**

2021-03-14 09.00-17:00

**மின் தடைப்படும் இடங்கள்:**
பாஷ் காம்ப்ளக்ஸ் ஏஜசிஎல், மாவட்ட செயலகம், நகர்ப்புற வளர்ச்சியின் ஷாப்பிங் வளாகம், முனிசிபல் சபை, நுவரெலியா பொலிஸ், தொழில்நுட்பக் கல்லூரி - ii, பொதுமாளிகை, ஹில்கிளப், கிராண்ட் ஹோட்டல், தொழில்நுட்பக் கல்லூரி - i, பிரதமர் மாளிகை, பேல்பஜார், லேடி மெக்கல்லம்சாலை - ii, பேருந்துநிலையம்

**மின் பொறியியலாளர் பிரதேசம் : கினிகத்தேனை**

**வாடிக்கையாளர் சேவை நிலையம் : நோட்டன்**

2021-03-12 09.00-17:00

**மின் தடைப்படும் இடங்கள்:**
மொராஹெனகம ஆடை, ஹெட்டிகேகம ஆர்.இ., கோவாலவட்டா, மடேனியா, எடிட் 3 ஹம்மதாவ பொல்பிட்டியா பவர் ஸ்டேயன், மினுவண்டேனியா ஆர்.இ.

2021-03-15 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள்:**
மவுண்ட்ஜீன் வத்த, கலாபோடா I, கலபோடா II

**வாடிக்கையாளர் சேவை நிலையம் : ஹட்டன்**

2021-03-13 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள்:**
துபுருகிரியா ஆடை, லெதெண்டி எஸ்டேட், ஆஸ்போர்ன் தேயிலை தொழிற்சாலை கார்பெக்ஸ், பாய்ஸ்டன் எஸ்டேட், அபோட்ஸ்லீ, /போர்டிஸ் தொழிற்சாலை, ரோக்பில் தேயிலை தொழிற்சாலை, பிளிங்கிபோர்னி, பண்டாரநாயக்க புரா, ஹார்ன்ஸிடவுன், மெண்டிஸ் மாவதா - ஹட்டன், பம்ப்ஹவுஸ் - துபுருகிரியா, ரோஸ்கிரியா தேயிலை தொழிற்சாலை, பன்மூர், Y.M.B.A, /போர்டிஸ் பிரிவு அக்காரா 30

**வாடிக்கையாளர் சேவை நிலையம் : மஸ்கெலியா**

2021-03-15 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள்:**
நோர்வூட் எண் 02

2021-03-13 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள்:**
கிர்கோஸ்வால்ட் தொழிற்சாலை, கிர்கோஸ்வால்ட் (நடுத்தர) எஸ்டேட், கிர்கோஸ்வால்ட் எல்.டி

**மின் பொறியியலாளர் பிரதேசம் : கேகால்ல**

**வாடிக்கையாளர் சேவை நிலையம் : மொறந்தொட்ட**

2021-03-13 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள்:**
பரம் பேரப்பர் தொழிற்சாலை, : புதிய அரகம, பரம்பேகாமா தண்டேனியா, ஹிக்கொட நிகாபிட்டி, உல்கடா, பொசல்லா, கந்துனாபல்லேகம, கந்துனா உனங்கந்தா, தேகலதிரியா, ஹிக்கோடாமா போபிட்டி

**வாடிக்கையாளர் சேவை நிலையம் : துல்ஹிரிய**

2021-03-12 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள்:**
பரம் பேரப்பர் தொழிற்சாலை, : புதியஅரகம, பரம்பேகாமா தண்டேனியா, ஹிக்கொட நிகாபிட்டி, உல்கடா, பொசல்லா, கந்துனா பல்லேகம, கந்துனா உனங்கந்தா, தேகலதிரியா, ஹிக்கோடாமா போபிட்டி

**மின் பொறியியலாளர் பிரதேசம் : மாவனல்ல**

**வாடிக்கையாளர் சேவை நிலையம் : மாவனல்ல**

2021-03-12 09:00-17:00

**மின் தடைப்படும் இடங்கள்:**
மெட்டல் க்ரஷர் மாவனெல்லா, இலுகோடா - II (புதியது),
இலுகோடா - நான், ரெனகெடுகம மெல்லகேலே, இலுகோடா மெட்டல் க்ரஷர்

**பிரதிப் பொது முகாமையாளர், (மத்திய மாகாணம்)**
**இலங்கை மின்சார சபை,**
**இல. 04,அஸ்கிரிய வீதி, கண்டி.**
**தொ.பே.இல. 081-2234000**

*வளமான வாழ்விற்கு மின்சாரம்*

*நீங்கள் இப்போது உங்கள் மின்சார கட்டணங்களை www.ceb.lk மூலம் செலுத்தலாம்*



ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

மின் பாவனையாளர்களுக்கு சிறந்த விநியோகம் மற்றும் சேவையினை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், இலங்கை மின்சார சபை கீழ் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் மின்சார தொகுதி பராமரிப்பு, புனரமைப்பு அல்லது கட்டுமானங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. இதற்காக அப்பிரதேசங்களில் தற்காலிக மின்வெட்டு கீழ் காட்டப்பட்டுள்ள நாட்களில் / நேரங்களில் இடம்பெறும். இதற்காக வாடிக்கையாளருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக எமது வருத்தத்தினை தெரிவித்துக்கொள்வதோடு திட்டமிட்ட திருத்தங்கள் நிறைவு பெற்றவுடன் மீண்டும் விநியோகத்தினை வழமைபோல் மேற்கொள்ள இலங்கை மின்சார சபை நடவடிக்கை மேற்கொள்ளும்.

## மத்திய மாகாணம் - 01 - மார்ச் 2021

**பரப்பளவு - Katugasthota Electrical Engineer Area**

**மின்பாவனையாளர் சேவைநிலையம்**
**Wattegama Electricity Consumer Service Center**

2021.03.13 09.00 - 17.00

**இடம்:**
கல்பிஹில்லாடி / எ.ஃ.ப், மக்கனிகம, பிடாவாலாசந்தி, கல்பிஹில்லா ஆர்.இ., உடுகோடாகர்மந்தபுராய, அங்கம்மனா, உடுகோடா

**பரப்பளவு - Kundasale Electrical Engineer Area**

**மின்பாவனையாளர் சேவைநிலையம்**
**Madolkele Electricity Consumer Service Center**

2021.03.13 09.00 - 17.00

**இடம்:**
பெங்குயின் (குண்டன்மால்ஸ்) ஆடை, ஹடலே தேயிலை தொழிற்சாலை, பெடெகம தேயிலை தொழிற்சாலை, ரக்சாவா தேயிலை தொழிற்சாலை, உனானகலா தேயிலை தொழிற்சாலை, ஹுன்னஸ்கிரியா கவதன்னாமலை, அரட்டனா நீர் பம்ப், மொராஹெலா, அரட்டனா ஆர் / இ, ஹடேல் மேல் பிரிவு, பன்வில அங்கம்மண்ணா கல்பிஹில்லா வட்டா, மேரிலாந்து காலனி, ஹடேல் அப்பர்டிவிசன்

மின்பாவனையாளர் சேவைநிலையம்
**Dumbara Electricity Consumer Service Center**

2021.03.14 08.00 - 17.00

**இடம்: :**
INDO SAIM Industriyas Pvt. Ltd, கண்டி பிளாஸ்டிக், பிளாஸ்டிஷெல், நீர் சுத்திகரிப்பு பாலகொல்லா, மாறும் BOI - i (மேக் ஆட்டோவின் முன், திரு.நந்தசேன, புதிய ஜீவா இண்டட்ரீஸ், நிழல்கோடு, நீர் பம்ப் (குளிர்). I.D.B., உலகளாவிய நுழைவு. (பிரைவேட்), கண்டியன் மேட்ச்கோ. (பிரைவேட்) லிமிடெட்., லங்கா உணவு பொதி, பாலி பிலிம்ஸ் ஐடிபி - ii, ரிச்சர்ட் பீரிஸ், BOI - ii, மத்திய/ ப்ளெக்ஸ பேக்,டிரினிட்டிபண்ணை, அம்வ் தொழிற்சாலை, எஸ்கிமோ, டாண்டன் - i, பாலிசாக், கிரிக்கெட் ஸ்டேடியம் மைதானம், பிரபுக்கள் அணிய (இனிமேக்), NWB & DB பம்ப் ஹவுஸ், லீனியா ஆடை, ஐடிபி - iii,

மின்பாவனையாளர் சேவைநிலையம்
**Karalliyadda Electricity Consumer Service Center**

2021.03.15 08.00 - 17.00

**இடம்:**
மகுல்தேனியா, மகுல்தேனியா போபபிலா

மின்பாவனையாளர் சேவைநிலையம்
**Hasalaka Electricity Consumer Service Center**

2021.03.13 09.00 - 17.00

**இடம்:**
டமித் மெட்டல்க்ரஷர் - குருவெலயா, அபேநாயக்க மெட்டல்க்ரஷர், போகாஹவேவா (மல்கம்மனா), தேவகிரிய எகோதகம, துனுவாலா பிதியாகங்கேயா, மரகா, தேவகிரியா, கும்புகண்டனவாசமா, ரதுனுவே வா திட்டம், நீர் உட்கொள்ளல் - துனுவலபிட்டி

மின்பாவனையாளர் சேவைநிலையம்
**Udadumabara Electricity Consumer Service Center**

2021.03.12 08.30 - 17.00

**இடம்:**
மகாவேலா, மெடிவாக்கா கங்கொட, கலபிதகம மினிவங்கமுவ, பல்லேபிடாவாலா, கலல்கமுவ, கலுண்டென்னா, தேவஹந்தியா, ஹபுகந்தா, உதபிடவாலா, கலாவாலா, உததும்பரா - கலவெல்ல, ஏர்டெல் டவர்கலபிதகம - மதுக்கல்லா

**மின்பாவனையாளர்** சேவைநிலையம்
**Pallepola Consumer Service Center**

2021.03.12 09.00 - 17.00

**இடம்:**
அகுரம்போட மடலத்தவத்த, மதபொல RE, நாகஹபோலா

**பரப்பளவு - Dambulla Electrical Engineer Area**

**மின்பாவனையாளர் சேவைநிலையம்**
**Dambulla Consumer Service Center**

2021.03.12 08.00 - 17.00

**இடம்:**
விமானப்படை முகாம், அப்சரா ஹோட்டல், எலகலக ஏரி ரிசார்ட், எலி.ஃபண்ட் கொரெடவ் ஹோட்டல், மலர் தோட்டம், .ஃபொன்டைன் ப்ளூ சீகிரியா(தனியார்) நிறுவனம், .ஃப்ரெஸ்கோ நீர் வில்ல, புதிய ஹோட்டல் திட்டம் (காஷ்யபகம), கயங்க்வாலாவிலுள்ள சீகிரியா டெயலோக் கோபுரம், சீகிரியா ஓய்வு வீடு புதியது, சீகிரியா கிராமம் ஹோட்டல், டெலிகாம் சீகிரியா, வில் உயன (ரோயல் பாரம்பரியம்), தியகபிள்ள, எகொடவெவ தம்புள்ள, கல்கொடுவ, கொவிகம்மானய, ஹோட்டல் சீகிரியா, கஸ்யபகம, கயம்வல துவன்கல, கேகல்லயாய - 2, மிலாத்தவ , கிபிஸ்ஸா - 2, கிம்பிஸ்ஸ, லேனாவ நிகவடவன ஐஆர்.டீ.பீ, மஹெசென்கம, மிலாத்தவ / கலபுரய சீகிரியா, மிலத்துவா அலுத்துயா, நிகவ் தவன, பலுதவ, ரங்கிரிகம, சீகிரிமுல்ல, சீகிரியா (புதிய நகரம்), சீகிரியா புதிய மியூசியம் திட்டம், சீகிரியா தென்னக்கோன் மவ்.எலகல வீதி, தல்கொடெ திட்டம்,

2021.03.12 10.00 - 16.00

**இடம்:**
அப்சரா ஹோட்டல், புதிய ஹோட்டல் திட்டம் (காஷ்யபகம), தியகபிள்ள, ஹோட்டல் சீகிரியா, கஸ்யபகம, மஹெசென்கம, தல்கொடெ திட்டம்

**பிரதி பொது முகாமையாளர் (மத்திய மாகாணம்)**
**இலங்கை மின்சார சபை.**
**இல. 04, அஸ்கிரிய வீதி,**
**கண்டி.**
**தொ.பே. - 081-223400**

*வளமான வாழ்விற்கு மின்சாரம்*

*நீங்கள் இப்போது உங்கள் மின்சார கட்டணங்களை www.ceb.lk மூலம் செலுத்தலாம்*



To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT

Sunday Observer adz Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!

Sunday Observer adz it's what you want




- Auto Focus

Magazine Issued with Sunday Observer

Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# பெறுகை அறிவித்தல்

## ஊவா மாகாண சபை

## ஊவா மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம்

ஊவா மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீதி வேலைகளுக்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவுடன் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து போட்டி ரீதியில் கேள்விகளைக் கோருவதன் மூலம் ஒப்பந்ததாரர்களைத் தெரிவு செய்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | வேலையின் பெயர் | பிரதேச பொறியிய லாளர் அலுவலகம் | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை வைப்புத் தொகை ரூபா | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | தகைமை வாய்ந்த CIDA தரம் |
|---|---|---|---|---|---|
| **இரண்டாம் முறை தார் இடுதல்** | | | | | |
| 01 | கி.மீ. 4ஆம் கட்டை மெதவெலகம கெரண்டிஎல்ல வீதி (UC 020) | பதுளை | 9500.00 | 1000.00 | C9 மற்றும் C8 (வீதி) |
| **பழுதுகளை சீர் செய்து தார் இடுதல்** | | | | | |
| 02 | கி.மீ. 4ஆம் கட்டை மெதவெலகம கெரண்டிஎல்ல வீதி (UC 020) | பதுளை | 11000.00 | 1000.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 03 | அட்டாம்பிட்டிய தெஹிவின்ன வீதி (UC 041) | பதுளை | 12000.00 | 1000.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 04 | அமுனுதோவ காணி ஊடாக கிரிஒருவ வீதி(UC247) | தியத்தலாவ | 20000.00 | 1500.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| **கட்டமைப்புகளை நிர்மாணித்தல் மற்றும் வீதி வரம்புகளை அமைத்தல்** | | | | | |
| 05 | பதுளை கட்டவளை வீதி (UC010) | பதுளை | 9000.00 | 1000.00 | C9 மற்றும் C8 (வீதி) |
| 06 | ஹொப்டன் பிஸ்ஸ வீதி (UC024) | பதுளை | 13000.00 | 1000.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 07 | மீகஹகிவுல களுகங்ககந்தர பிட்டமாறுவ எலமான்ன குருவிகொல்ல வீதி (UC025) | பதுளை | 22000.00 | 1500.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 08 | மொரேதொட்ட கட்டுகஹ வீதி (UC036) | பதுளை | 11000.00 | 1000.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 09 | பதுளை எலதலுவ முதுன்பிட்ட வேவெல்ஹின்ன வீதி (UC040) | பதுளை | 38000.00 | 2000.00 | C7 மற்றும் C6 (வீதி) |
| 10 | தல்தென புதுகேகந்த வீதி (UD087) | பதுளை | 7500.00 | 1000.00 | C9 மற்றும் C8 (வீதி) |
| 11 | அம்பதண்டேகம கரந்தகொல்ல வீதி (UC202) | தியத்தலாவ | 17000.00 | 1000.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 12 | அல்லிமலே குருந்துகொள்ள ஹீல்ஓய வீதி (UC213) | தியத்தலாவ | 14000.00 | 1000.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 13 | ஹால்அட்டுதென்ன, சொரகுணே ரன்வன்குஹாவ நிக்கபொத்த வீதி (UC229) | தியத்தலாவ | 30000.00 | 2000.00 | C7 மற்றும் C6 (வீதி) |
| 14 | சென் தோமஸ் மேல் கஹத்தேவல கஹகொல்ல வீதி (UC259) | தியத்தலாவ | 14000.00 | 1000.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 15 | பொலிஸ் கந்த கொஸகொமே அராவ வீதி (UC219) | தியத்தலாவ | 18000.00 | 1500.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 16 | தந்திரிய ஹீல்ஓய எல்ல வீதி (UC201) | தியத்தலாவ | 22000.00 | 1500.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 17 | பல்லேவெல பனங்கல தியஉன்னாவ வீதி (UC047) | தியத்தலாவ | 15000.00 | 1500.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 18 | அம்பேகொட வெவதென்ன அமுனுதோவ வீதி (UC215) | தியத்தலாவ | 13000.00 | 1500.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 19 | அமுனுதோவ ஹப்பன்கமுவ வீதி (UC214) | தியத்தலாவ | 13000.00 | 1000.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 20 | ஹீல்ஓய கித்தல்எல்ல அல்லிமலை வீதி (UC207) | தியத்தலாவ | 13500.00 | 1000.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 21 | வீரமொனரவில கெப்பெட்டிபொல மாவத்தை (ஹக்கல அம்பகஸ்தோவ வீதி) (UC435) | வெலிமட | 12000.00 | 1000.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 22 | பெரலியபொல போகொட்டுதென்ன வீதி (UC436) | வெலிமட | 16000.00 | 1000.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 23 | வஹலமுல்ல உடுஹாவர பேரவெல்ல கலஹகம வீதி (UC441) | வெலிமட | 35000.00 | 2000.00 | C7 மற்றும் C6 (வீதி) |
| 24 | லூணுவத்த பெரலியபொல ஹந்தி வரையான வீதி (UC456) | வெலிமட | 11500.00 | 1000.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 25 | லூணுவத்த உணபான இந்திகஹதோவ வீதி (UC479) | வெலிமட | 18000.00 | 1000.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 26 | மொரகொல்ல பஹலகொட வெஹெர யஹல அராவ இந்திகஹதோவ வீதி (UC482) | வெலிமட | 11500.00 | 1000.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 27 | போகஹகும்புர ஹெவனகும்பர கெப்பெட்டிபொல வீதி (UC401) | வெலிமட | 23000.00 | 1500.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 28 | அம்பகஸ்தோவ கொடலிந்த டவுண்சைட் வீதி (UC 460) | வெலிமட | 23000.00 | 1500.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 29 | வெலிமட வைத்தியசாலை பிரவேச வீதி (UC408) | வெலிமட | 11000.00 | 1000.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 30 | ஹுலங்தாவ தெற்கு கெமுனுபுர மஹமெவ்னாவ வீதி (UC 834) | மொனராகல | 83000.00 | 3500.00 | C6 மற்றும் C5 (வீதி) |
| 31 | கரந்த கெந்தவின்ன மெதகம வீதி (UC 828) | மொனராகல | 33000.00 | 2000.00 | C7 மற்றும் C6 (வீதி) |
| 32 | தம்பகொல்ல தெலிவ பதுளுவெல வீதி (UC 817) | மொனராகல | 76000.00 | 3500.00 | C6 மற்றும் C5 (வீதி) |
| 33 | தஹகொனிய கொஹுகும்புர வீதி (UC 824) | மொனராகல | 25000.00 | 2000.00 | C7 மற்றும் C6 (வீதி) |
| 34 | மீகஹபிட்டிய லியன்கொல்ல கொட்டகல வீதி (UC 855) | மொனராகல | 29000.00 | 1500.00 | C7 மற்றும் C6 (வீதி) |
| 35 | பொலிஸ் ஸ்டேஷன் சமகிபுர வீதி (UC613) | மகியங்கனை | 11000.00 | 1000.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 36 | வேவத்த கந்துபெத்த தலாவேகம மொரான வீதி (UC 634) | மகியங்கனை | 40000.00 | 2000.00 | C7 மற்றும் C6 (வீதி) |
| 37 | கந்தகெட்டிய கஹகொல்ல அராவ வீதி (UC 655) | மகியங்கனை | 17000.00 | 1000.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 38 | மீகஹகிவுல களுகங்ககந்தர பிட்டமாறுவ எலமான்ன வீதியில் கட்டமைப்புகளை நிர்மாணித்தல் (UC025) | மகியங்கனை | 65000.00 | 3500.00 | C6 மற்றும் C5 (வீதி) |
| 39 | புதுருவகல சந்தியிலிருந்து புதுருவகல பன்சல வரையான வீதி (UC 1004) | வெல்லவாய | 145000.00 | 3500.00 | C5 மற்றும் C4 (வீதி) |
| **வேறு வேலைகள்** | | | | | |
| 40 | பதுளை முன்வார்ப்பு முற்றவெளியை மேம்படுத்துதல் | பதுளை | 22000.00 | 1500.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 41 | முன்கலவை முற்றவெளியின் திருத்தவேலைகள் | வெலிமட | 27000.00 | 1500.00 | C7 மற்றும் C6 (வீதி) |
| 42 | வெலிமட பிராந்திய பொறியியலாளர் அலுவலகத்தின் திருத்தவேலைகள் மற்றும் புதிய பகுதியொன்றை இணைத்தல் | வெலிமட | 21000.00 | 1500.00 | C8 மற்றும் C7 (வீதி) |
| 43 | மொனராகலை முன்வார்ப்பு முற்றவெளியை மேம்படுத்துதல் | மொனராகல | 20000.00 | 1500.00 | C8 மற்றும் C7 (வீதி) |

02. தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் நடைமுறையின் மூலம் மேற்கொள்ளப்படும் என்பதுடன் இந்த பெறுகை அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ள வேலைகளுக்கிடையில் எந்தவொரு வேலையினதும் முழு மதிப்பீடுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு மேற்படாததனால் நிதி அமைச்சின் 4/2016(ii) இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்காரர்களுக்கான மாகாண முன்னுரிமை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பதிவுத் தர முன்னுரிமை என்பன கேள்வி மதிப்பீட்டின் போது கவனத்திற் கொள்ளப்படும்.

03. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA)/ இயைபுடைய துறையின் பதிவு சகிதம் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்துவதற்கு சிபாரிசு செய்யப்படாத, வெற்றிகரமான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்கள் கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.

04. கேள்விப் பெறுமதியின் 05 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட வேலைகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பதிவு செய்து கொள்ளல் வேண்டும் என்பதுடன் கேள்விகளுடன் அந்தப் பதிவுச் சான்றிதழை அல்லது உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு பதிவுச் சான்றிதழ் அல்லது உறுதிப்படுத்தக்கூடிய சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாமை கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாகலாம்.

05. கேள்வி மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள ஆர்வம் கொண்டுள்ளோர் மேற்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணத்தை அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்குச் செலுத்தி குறித்த படிவங்களை 2021-03-05ஆம் திகதி முதல் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்கள் வழங்கல், ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல் பின்வரும் திகதி மற்றும் நேரங்களில் இடம்பெறும்.

| | |
|---|---|
| கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் | : 2021-03-25 பி.ப. 3.30 வரை |
| கேள்வி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் | : 2021-03-26 பி.ப. 2.00 வரை |
| கேள்வி ஆவணங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் | : 2021-03-26 பி.ப. 2.00 மணிக்கு |
| கேள்வி ஆவணங்கள் ஏற்கப்படும் இடம் மற்றும் திறக்கப்படும் இடம் | : கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் |

06. மீளளிக்கப்படும் பிணைத் தொகையை ரொக்கப் பணமாக இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்குச் செலுத்தலாம் என்பதுடன் குறித்த கட்டணத்திற்காக கேள்விப் பிணை முறியொன்று சமர்ப்பிக்கப்படுமாயின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணை முறித் தொகையின் இரு மடங்கு பெறுமதியான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து நிபந்தனைகளற்ற வங்கிப் பிணை முறி (Unconditional Bank Guarantee) மூலம் மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும். இதன்பொருட்டு கேள்வி ஆவணங்களில் உள்ள மாதிரியை மட்டும் உபயோகித்தல் வேண்டும். பிணை முறி 2021-07-25ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

07. கேள்வி கோரல் தொடர்பான முன்னோடிக் கூட்டமொன்று (Pre bid meeting) 2021-03-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பதுளை கெப்பெட்டிபொல மாவத்தை, இல. 292/1, 1-1 எனும் முகவரியில் அமைந்துள்ள ஊவா மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்பதுடன் இங்கு உத்தேச கேள்விதாரர்கள் மேற்படி வேலைகள் தொடர்பாக தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொள்ளலாம்.

08. உரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட மாதிரிகளில் மாத்திரம் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் இரு நகல்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரை பொறித்து குறித்த தினம் மற்றும் நேரத்திற்கு முன் ''தலைவர், பெறுகைக் குழு, ஊவா மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம், இல. 292/1, 1-1 கெப்பெட்டிபொல மாவத்தை, பதுளை'' எனும் முகவரிக்கு பதிவு தபாலில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

அல்லாவிடின் மேற்காணும் முகவரியில் உள்ள அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரை தெளிவாக பிழையின்றி குறிப்பிடல் வேண்டும். கேள்விகளைத் திறக்கும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ள அனுமதி உண்டு.

09. கிடைக்கப் பெற்றுள்ள கேள்விகளில் தகுதியான கேள்வியை ஏற்றல் அல்லது அனைத்தையும் நிராகரித்தல் தொடர்பான பூரண உரிமை பெறுகைக் குழுவைச் சாரும் என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

10. இது தொடர்பான மேலதிக விபரங்களை ஊவா மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் அல்லது பதுளை பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| தொலைபேசி இல. - | வீதி அபிவிருத்தித் திணைக்களம் | - | 055-2229626/055-2225570 |
| | பதுளை பிரதேச பொறியியலாளர் அலுவலகம் | - | 055-2223234 |
| | வெலிமட பிரதேச பொறியியலாளர் அலுவலகம் | - | 057-2245231 |
| | தியத்தலாவ பிரதேச பொறியியலாளர் அலுவலகம் | - | 057-2229059 |
| | மகியங்கனை பிரதேச பொறியியலாளர் அலுவலகம் | - | 055-2257083 |
| | வெல்லவாய பிரதேச பொறியியலாளர் அலுவலகம் | - | 055-2274422 |
